மாதம் இருமுறை

# எங்கள் தேசம்

එංගල් දේසම්    QD/28/NEWS/2013    Engal Thesam

மலர்: 12 இதழ்: 12    ஜூன் 15-30, 2013    விலை: ரூபா. 30.00

247
21 JUN 2013
21/6/13

# வடக்குத் தேர்தலை கடக்க அச்சமேன்?

**மனித உரிமை மீறல், யுத்தக் குற்றம் போன்ற குற்றச் சாட்டுகளும் வெளிநாட்டு முதலீட்டின் தேக்கம், ஜி.எஸ்.பி. சலுகை ரத்து, இந்தியாவினதும் சர்வதேச நாடுகளினதும் ஓரக் கண்பார்வை என்ற பல பிரச்சினைகளுக்குள் வட மாகாண சபையை நடத்துவதே தீர்வாக அமையும் என்று அரசாங்கத்துக்குத் தெரியாதா என்ற கேள்வியும் எழும். ஆனால், இனவாதச் சிந்தனையால் மூழ்கடிக்கப்பட்டுள்ள இலங்கையில் இப்பிரச்சினை வேறு விதமாகவே நோக்கப்படுகின்றது.**

# கரை ஒதுங்கிய சடலங்களும் சூறாவளி அரசியலும்



# பலஸ்தீன்: 65 உள்ளக அரசியல் விரிசல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமலை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மறுசீரமைப்பு

# முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்கு ஆப்பு

ஜ.ஏ. காதர்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பாக தற்போது முக்கியத்துவத்துடன் பேசப்படுகிறது. எந்த ஓர் உள்ளூராட்சி மன்றப் பிரிவில் வாழும் சிறுபான்மையினரும் பாதிக்கப்படாத வகையில் இம்மறுசீரமைப்பு ஏற்பாடு நடப்பதாகக் கூறப்படுகின்றது.

எதிர்காலத்தில் வட்டார முறையில் நடத்தப்படவுள்ள இத்தேர்தல் முறையில் வெற்றி பெறுவோருக்கு கூடுதல் அதிகாரங்கள் உள்ளதாக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்திருக்கிறார். இந்த வகையில் இத்தேர்தல் மறுசீரமைப்பு மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

இத்தேர்தல் எல்லை மறுசீரமைப்பு தொடர்பாக பொதுமக்கள், சமூக மட்ட அமைப்புகளிடமிருந்து கருத்துக்கள் கோரப்பட்டிருந்தன. பலர் கருத்துக்களை முன்வைத்திருந்தனர். எனினும், அவை கருத்தில் கொள்ளப்படாமலேயே மாவட்ட மட்டங்களில் இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டு விட்டன என்ற ஆதங்கமும் எழுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களின் விகிதாசாரத்திற்கேற்ப பிரதிநிதித்துவ ஏற்பாடு இல்லையென்றும் இது எதிர்கால முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீட்டின்படி, திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்கள் 42.1 வீதமாகவும் தமிழர்கள் 25.9 வீதமாகவும் சிங்களவர்கள் 26.1 வீதமாகவும் காணப்படுகின்றனர். இதன்படி, இம்மாவட்டத்தில் முஸ்லிம் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அதிகமாக தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால், நிலைமை இதற்கு மாற்றமாகவே உள்ளது.

| தொ.இல | உள்ளூராட்சி மன்றம் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | திருமலை நகர சபை | 18 |
| 02. | கிண்ணியா நகர சபை | 10 |
| 03. | மூதூர் பிரதேச சபை | 16 |
| 04. | கந்தளாய் பிரதேச சபை | 16 |
| 05. | தம்பலகாமம் பி.தேச சபை | 13 |
| 06. | திருமலை பட். சூழலும் | 13 |
| 07. | கிண்ணியா பிரதேச சபை | 10 |
| 08. | குச்சவெளி பிரதேச சபை | 13 |
| 09. | சேருவில பிரதேச சபை | 13 |
| 10. | வெருகல் பிரதேச சபை | 10 |
| 11. | பதவி சிறிபுர பிரதேச சபை | 13 |
| 12. | கோமரங்கடவெல பி.சபை | 13 |
| 13. | மொறவெவ பிரதேச சபை | 13 |

திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இவற்றுக்காக பிரேரிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை வருமாறு:

இங்கு உறுப்பினர் ஒதுக்கீட்டில் பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளமை சுட்டிக் காட்டப்படுகின்றது. அதாவது, 21069 வாக்காளர் உள்ள கிண்ணியா நகர சபைக்கு 10 உறுப்பினர்கள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, 8362 வாக்காளர் உள்ள பதவி சிறிபுரவுக்கு 13 உறுப்பினர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல, 16626 வாக்காளர்கள் உள்ள கிண்ணியா பிரதேச சபைக்கு 10 உறுப்பினர்களும் 5831 வாக்காளர்கள் உள்ள கோமரங்கடவெலவுக்கு 13 உறுப்பினர்களும் பிரேரிக்கப்பட்டுள்ளனர். இதன்படி முஸ்லிம் வாக்குகள் அதிகமாயிருந்த போதிலும் உறுப்பினர்கள் எண்ணிக்கை திட்டமிட்டுக் குறைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 13 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் எதிர்காலத்தில் 171 உறுப்பினர்கள் தெரிவாவதற்கான முன்மொழிவு மாவட்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி பின்வரும் அடிப்படையில் உறுப்பினர் தெரிவாவதற்கான சாத்தியப்பாடுள்ளது.

இந்த எதிர்வுகூறலில் சிறுசிறு மாற்றங்கள் ஏற்பட்டாலும் கூட முஸ்லிம்களின் விகிதாசாரத்திற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கும் இடையே பாரிய ஏற்றத்தாழ்வும் அநீதியும் இருப்பது புலனாகின்றது.

இந்த முன்மொழிவு மாவட்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாவட்டத்தில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களின் ஒப்புதல் பெறப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

எனினும் தேசிய மட்ட அங்கீகாரம் இன்னும் பெறப்பட வில்லை எனத் தெரிய வருகின்றது. எனவே, பொறுப்பு வாய்ந்தவர்கள் இது விடயத்தில் உடன் கவனம் செலுத்தினால் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கலாம்.

> 16626 வாக்காளர்கள் உள்ள கிண்ணியா பிரதேச சபைக்கு 10 உறுப்பினர்களும் 5831 வாக்காளர்கள் உள்ள கோமரங்கடவெலவுக்கு 13 உறுப்பினர்களும் பிரேரிக்கப்பட்டுள்ளனர். இதன்படி முஸ்லிம் வாக்குகள் அதிகமாயிருந்த போதிலும் உறுப்பினர்கள் எண்ணிக்கை திட்டமிட்டுக் குறைக்கப்பட்டுள்ளது.

| தொ.இல | உள்ளூராட்சி மன்றம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01. | திருகோணமலை நகர சபை | 04 | 12 | 02 | 18 |
| 02. | கிண்ணியா நகர சபை | - | 01 | 09 | 10 |
| 03. | மூதூர் பிரதேச சபை | - | 07 | 09 | 16 |
| 04. | கந்தளாய் பிரதேச சபை | 13 | 01 | 02 | 16 |
| 05. | தம்பலகாமம் பிரதேச சபை | 04 | 03 | 06 | 13 |
| 06. | திருமலை பட். சூழலும் பி. சபை | 03 | 08 | 02 | 13 |
| 07. | கிண்ணியா பிரதேச சபை | - | - | 10 | 10 |
| 08. | குச்சவெளி பிரதேச சபை | 01 | 05 | 07 | 13 |
| 09. | சேருவில பிரதேச சபை | 11 | 01 | 01 | 13 |
| 10. | வெருகல் பிரதேச சபை | - | 10 | - | 10 |
| 11. | பதவி சிறிபுர பிரதேச சபை | 13 | - | - | 13 |
| 12. | கோமரங்கடவெல பிரதேச சபை | 13 | - | - | 13 |
| 13. | மொறவெவ பிரதேச சபை | 10 | 01 | 02 | 13 |
| | மொத்தம் | 72 | 49 | 50 | 171 |

# நாச்சியா தீவில் ரவுடியும் பத்திரிகையாளருக்கும் மிரட்டல்!

▲ நாச்சியாதீவு பர்வீன் ▲

எப்போதுமே உண்மைக்குப் புறம்பான ஒரு குழு இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றது அது பொதுமக்களின், அயலவரின் நலன்களைக் காட்டிலும் சுயநலத்திற்காக சோரம் போன பக்காலிகளாக கேவலமான செயற்பாட்டைக் கொண்ட குழுவாகவே இருக்கும். இந்தக் குழுக்களின் அச்சுறுத்தல் ஒரு நல்ல சமூகத்தை உருவாக்குவதிலிருந்து நீதிக்காக போராடும், நல்லவர்களை தூரப்படுத்தி விடும் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

நாச்சியாதீவில் இயங்குகின்ற சுயநல ரவுடிக் கும்பல் ஒன்றின் எச்சரிக்கைக்கு பத்திரிகையாளரான நான் உள்ளாக்கப்பட்டதுடன் இன்னுமொரு சகோதரனும் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த எச்சரிக்கையை வெறுமனே தனிப்பட்ட கோபத்துக்காக விடுக்கப்பட்டதல்ல; அவர்கள் புரியும் வண்டாவாளங்களை பத்திரிகையில் எழுதியதற்கான எதிர் விளைவு. பேனா முனையை ஒடிக்கும் திட்டமிட்ட நடவடிக்கை தவிர, வேறில்லை.

நாச்சியா தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் அவரது முதலாவது நியமனம் தொடக்கம் (1990) இன்று வரை சுமார் 23 வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமை புரிவதும் மாணவர்களிடம் அவ்வப்போது பணம் அறவிடுவதும் பாடசாலையின் காவல் வேலை செய்யும் நபருக்கு காவல் காக்காமலேயே சம்பளம் பெற்றுக் கொடுப்பதும் இன்னும் பல ஊழல்கள் செய்திருப்பதும் ஊரறிந்த உண்மையாகும். இது குறித்து நால்வர் கொண்ட குழு வலயக் கல்விப் பணிமனை, மாகாண கல்வி அதிகாரி ஆகியோரிடம் முறையிட்டோம். அவர்களின் நடவடிக்கையில் ஏற்பட்ட தாமதத்தினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் நீதி கோரி புகார் செய்தோம். உண்மையில் அதிபரின் பக்கம் நியாயம் இருந்தால் எம்மை அழைத்து அவரது வாதத்தை தெளிவு படுத்தியிருக்காலம். அல்லது ஊர் பிரமுகர்கள் முன்னிலையில் இவ்விடயத்தை விசாரணைக்காக ஒப்படைத்திருக்கலாம். ஆனால் அவர் செய்ததெல்லாம் எங்களை விஷமிகளாகவும் துரோகிகளாகவும் ஊர் மக்கள் முன் காட்ட முனைந்ததுதான்.

> அதுபற்றி விளக்கம் கேட்டமைக்கு அவருக்கு பகிரங்கமாக அடித்துள்ளார்கள். இப்போது கலீல் என்பவர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 20 ஆம் வார்டில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அதில் தோல்வியடைந்ததும் வேறு முறையில் எம்மை அடக்க முனைகின்ற பாணிதான் இந்த ரவுடிஷம்.

நாச்சியா தீவு மீனவர்களிடம் 20 ரூபா கப்பம் எடுப்பது பற்றி ஏற்கனவே நான் எங்கள் தேசம் பத்திரிகையில் பல கட்டுரைகள் எழுதியுள்ளேன். அந்நேரங்களில் என்னை கிண்டலடித்தார்; மிரட்டினார். எதற்கும் அடிபணியாத நான் அவர்கள் நடத்திவரும் பதிவு செய்யப்படாத ஒரு சட்டரீதியற்ற என்.ஜி.ஓ. பற்றி வெளிக் கொணரவும் அதிலிருந்து ஊர் மக்களைக் காக்கவும் முற்பட்ட வேளை மீண்டும் மிரட்டப்பட்டிருக்கிறேன்.

அடிப்போம் என்று மிரட்டியவர்கள் அப்பாவியான சி.எம். கலீல் என்பவருக்கு அடித்தார்கள் பதிவு செய்யப்படாத ஓர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றை அரசின் அனுமதி பெறமால் செய்து வருவதும் அதில் வயது குறைந்தவரான இக்ராம் அவர்களின் படம் பிரசுரிக்கப்பட்டு அவருக்காக உதவி கோரியிருப்பதையும் அறிந்து இக்ராம் என்பவரின் சகோதரரான எம்.சி. கலீல் என்பவர் அதுபற்றி விளக்கம் கேட்டமைக்கு அவருக்கு பகிரங்கமாக அடித்துள்ளார்கள். இப்போது கலீல் என்பவர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 20 ஆம் வார்டில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஆக நியாயத்தைக் கேட்கின்றவர்களுக்கு மிரட்டல் விடுத்து அல்லது அடித்து அவர்களின் வாய்களை மூட வைக்கின்ற திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலை செயற்படுத்த முனைகின்ற முட்டாள் தனத்தை என்னவென்று சொல்வது?

எனக்கு விடுக்கப்பட்ட மிரட்டலுக்கு ஹிதோகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை CIB /248/413 எனும் இலக்கத்தில் பதிவு செய்துள்ளேன். இது தவிரவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர், மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கும் எனது முறைப்பாட்டை பதிவு செய்துள்ளேன்.

தாக்குதலுக்கு உள்ளாகிய சி.எம். கலீல் என்பவரும் ஹிதோகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். பாதிக்கப்பட்ட அவருக்கு நீதி கிடைக்க வேண்டி ஊர் மக்கள் பிரார்த்திக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வளிமண்டளவியல் திணைக்களம் குறைபாடுகளுடன் இயங்குவது இதன் மூலம் நிரூபணமாகிறது. நாளாந்தம் "இடியுடன் கூடிய மழை பெய்யலாம்" என கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன அறிக்கைகளை மட்டுமே விட்டுக் கொண்டிருக்கும் வளிமண்டளவியல் திணைக்களம், குறைந்த பட்சம் முன்னெச்சரிக்கை விடுக்குமளவு ஆளுமையின்றி செயற்படுவது பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.**

# கரை ஒதுங்கிய சடலங்களும் சூறாவளி அரசியலும்



-பஷீர் அலி-

கடந்த 8ஆம் திகதி சனிக் கிழமை அதிகாலை வீசிய கடும் காற்றுடனான மழை காரணமாக உயிரிழந்த மீனவர்களின் எண்ணிக்கை ஆறுபதைக் கடந்திருக்கிறது.

குறித்த தினத்திலிருந்து கரையொதுங்கும் சடலங்களைக் கண்டெடுப்பதும் அடக்கம் செய்வதுமே கடந்த வாரம் முழுக்க இடம்பெற்ற சோக சம்பவமாயின.

இவ் அனர்த்தத்தில் பலப்பிட்டிய, ஹிக்கடுவை, பெந்தோட்டை, பேருவளை, இரத்மலானை, தெஹிவளை, மொரட்டுவ மற்றும் சிலாபம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 60 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் மரணமடைந்துள்ளனர். காணாமல்போன மேலும் சிலர் குறித்த தகவல்கள் கவலைக்கிடமானவை.

நாட்டில் இடம்பெறும் எந்தவொரு அசாதாரண நிகழ்வுக்கும் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவதும் அரசாங்கம் அதனை மறுத்து அறிக்கை விடுவதுமே அண்மைக்கால நிகழ்வாக இருந்து வருகிறது.

அண்மைய இயற்கை அனர்த்தத்தை அடுத்தும் இந்நிலையே காணப்பட்டபோதும் ஒரு விடையத்தில் அரசாங்கமும் எதிர்கட்சிகளும் ஒத்துப்போன நிலைமையைக் காண முடிந்தது.

அதாவது, குறித்த மீனவர்களின் மரணத்துக்கு வளிமண்டளவியல் திணைக்களமே முழுப் பொறுப்பும் சொல்ல வேண்டும் என எதிர்கட்சிகள் முழங்கின. வளிமண்டலவியல் திணைக்களம் உரிய நேரத்தில் முன்னெச்சரிக்கை செய்திருந்தால் இவ்வளவு உயிரிழப்புகள் நிகழ்ந்திருக்காது. எனவே, இதற்கான முழுப் பொறுப்பையும் வளிமண்டளவியல் திணைக்களமே ஏற்க வேண்டும் என எதிர்கட்சிகள் கூறின. ஆனால், தாம் உரிய நேரத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளதாக திணைக்களம் தெரிவித்தது. இருந்தபோதும் இக்கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வில்லை.

மீனவர்களின் மரணத்துக்கு வளிமண்டளவியல் திணைக்களமே பொறுப்பெடுக்க வேண்டும் என்று கடற்றொழில் பிரதியமைச்சர் சரத் குமார குணரத்னவும் கருத்து வெளியிட்டிருந்தார்.

கடந்த வாரம் கருத்து வெளியிட்டிருந்த வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.எச். காரியவசம், திணைக்களத்துக்கு புதிதாக 14 வானிலை நிபுணர்களை இணைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் இதன் மூலம் இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்திக்க முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

எனவே, வளிமண்டளவியல் திணைக்களம் குறைபாடுகளுடன் இயங்குவது இதன் மூலம் நிரூபணமாகிறது. நாளாந்தம் "இடியுடன் கூடிய மழை பெய்யலாம்" என கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன அறிக்கைகளை மட்டுமே விட்டுக் கொண்டிருக்கும் வளிமண்டளவியல் திணைக்களம், குறைந்த பட்சம் முன்னெச்சரிக்கை விடுக்குமளவு ஆளுமையின்றி செயற்படுவது பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொதுமக்களின் வரிப் பணத்தில் இயங்கும் இவ்வாறான திணைக்களங்களால் பொதுமக்களுக்கான முன்னெச்சரிக்கைப் பாதுகாப்பையே வழங்க முடியா விட்டால் இந்நிறுவனங்கள் தேவைதானா என்ற கேள்வி எழும்புகிறது.

குறித்த அனர்த்தத்தின் இரு நாட்களுக்கு முன்னர் பசுபிக் அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்னெச்சரிக்கை விடுத்ததாக அறிய முடிகிறது. எனவே, அனர்த்தங்களை முன்கூட்டி அறியும் ஆற்றல் ஒரு புறமிருக்க, சொல்லிக் கொடுத்ததை அறிவிக்கும் பொறுப்பிலிருந்து விலகியிருக்குமளவு பொடுபோக்காக இருந்துள்ளதா திணைக்களம்?

குறித்த அனர்த்தத்துக்கு வளிமண்டளவியல் திணைக்களத்தைக் குற்றம் சாட்டிய கடற்றொழில் பிரதியமைச்சர் சரத் குமார குணவர்தன, பாதுகாப்பு கவசம் அணியாமல் கடலுக்கு சென்றமை மீனவர்களின் தவறாகும். எனவே, இந்த வருடத்திலிருந்து இந்த சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

எனவே, மீனவர்களின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வூட்டும் சட்டங்களை அமுல்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டிய கடற்றொழில் அமைச்சும் அவ்விடயத்தில் கோட்டை விட்டிருப்பதும் நிரூபணமாகிறது.

முறையான கடற்றொழில் கொள்கை ஒன்று இல்லாமையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முறையாகக் கையாளப்படாமையுமே இவ்வாறான அனர்த்தங்களுக்குக் காரணம் என மீனவ அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன. எனவே, இவ்விடயத்துக்குப் பொறுப்பான கடற்றொழில் அமைச்சும் திணைக்களமும் பொறுப்புச் சொல்லியே ஆக வேண்டும்.

சூறாவளி போன்ற அனர்த்தங்களின்போது, வெளிநாடுகளில் மீட்புப் பணிகளுக்காக ஹெலி கொப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், நமது நாட்டில் ஜனாதிபதியின் தேவைக்காக 7 ஹெலிக்கொப்டர்கள் உள்ளபோதும், மீட்புப் பணிகள் இன்னும் பாரம்பரிய முறைப்படியே இடம்பெறுவதாக ஐ.தே.க. குற்றம் சாட்டியுள்ளது.

குறித்த அனர்த்தத்தில் மரணமடைந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா இருபது இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடாக வழங்க வேண்டும். அரசாங்கம் அறிவித்திருப்பது போன்று வெறும் பதினைய்யாயிரமோ, ஓரிலட்சம் ரூபாவோ இழப்பீட்டுத் தொகையாக இருக்கக் கூடாது எனவும் ஐ.தே.க. தெரிவித்திருந்தது.

குறித்த அனர்த்தம் இடம்பெற்றதிலிருந்து முன்னெச்சரிக்கை, மீட்புப் பணி, நஷ்ட ஈடு உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் அரசாங்கத்தை நோக்கியே சுட்டு விரல்கள் நீண்ட வண்ணமுள்ளன.

எனவே, இனிவரும் காலங்களிலும் இவ்வாறான அனர்த்தங்களைத் தடுக்கும் முகமாக வளிமண்டளவியல் திணைக்களம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கடற்றொழில் அமைச்சும் சிறந்த கடற்றொழில் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களை வைத்து அரசியல் நடத்துவதையும் அனர்த்தங்கள் நடந்த பின்னர் அரசாங்கத்துக்கெதிராக அறிக்கைகள் விடுவதையும் விடுத்து எதிர்க்கட்சிகளும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வது அவர்களுக்குண்டான பாங்காகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

மலர் : 12 இதழ் : 12 ஜூன் 15 - 30. 2013

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com


## வானிலை எதிர்வு கூறல் சர்ச்சை

வானிலை மாற்ற எதிர்வு கூறல் தொடர்பான சர்சையொன்று எழுந்துள்ளது. அரசாங்கத்தின் இரண்டு அமைசுக்கள் முன்னெச்சரிக்கை விடுக்காமைக்கு யார் பொறுப்பு என்ற ரீதியில் வாதப் பிரதி வாதங்களை நடத்துகின்றன. தம் ஜீவனோபாயத்தைத் தேடி கடலுக்குச் சென்ற ஏழை மீனவர்கள் பெருந் தொகையானோர் உயிரிழந்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மிக மோசமான விபத்தாக இது கருதப்படுகிறது. ஏழை மீனவர்கள் 80இற்கு மேற்பட்டோர் உயிர் துறந்தமைக்கு வானிலை அவதான நிலையத்தின் முன்னறிவிப்புகள், எதிர்வு கூறல்களில் ஏற்பட்ட தவறுதான் காரணமாக அமைந்துள்ளதாக குற்றம் சாட்டப்படுகிறது. எதிர்வு கூறல் விடுக்கப்படாமை தொடர்பிலான ஒரு பூரண அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார். வானிலை அவதான நிலையம் உரிய முறையில் முன்னறிவிப்புச் செய்ய வில்லை என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர நுவரெலியாவில் ஒரு கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

முன்னெச்சரிக்கை உரிய நேரத்தில் விடுக்கப்பட்டதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. மீனவர்களின் வாழ்க்கைக் கோலம் கடலின் தன்மையில் தங்கியுள்ளதால் இத்தகைய முன்னறிவிப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. உரிய நேரத்தில் வானிலை எதிர்வு கூறலை, கடல் கொந்தளிப்பு பற்றிய செய்திகளை வழங்கத் தவறியிருந்தால் வானிலை அவதான நிலையம் இத்தனை மனிதக் கொலைகளுக்கான பொறுப்பை ஏற்க வேண்டிவரும்.

இதற்கிடையில் இறந்த மீனவர்களின் மரணச் சடங்குகளில் பங்கு பற்றச் சென்ற எதிர்கட்சித் தலைவரும் குழுவினரும் இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளமையும் எதிர்பாராத நிகழ்வாகவுள்ளது. மரணச் சடங்கில் கலந்து கொள்ள வருபவர்களைத் தாக்குகின்ற தேவை அல்லது அத்தகைய ஒரு மரபு எங்கும் கிடையாது. மீனவர்கள் மரணித்ததில் அரசியல் இலாபம் அடைந்து விடுவார்கள் என்ற அச்சத்தில் செய்த வேலையாகத்தான் இது இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

நவீன விஞ்ஞானம், தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த இந்தக் காலகட்டத்தில் வானிலை எதிர்வு கூறலில் ஏற்பட்ட தவறினால் 100 பேர் வரை பாதிக்கப்பட்டமை கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மீனவர்களுக்குத் தேவையான தொடர்பாடற் கருவிகள், உயிர் காப்புக் கவசங்கள், கண்காணிப்பு வேலைத்திட்டங்கள் என்று பல நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஒவ்வொரு மீனவருக்கும் உயிர் காப்பு மிதப்புக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட வேண்டும். அவற்றை இலவசமாக அல்லது குறைந்த விலையில் கடற்றொழில் அமைச்சு அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை மக்களுக்கு போசாக்கை வழங்கும் சேவையில் ஈடுபட்ட மீனவர்களின் இறப்புக்கு எங்களது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்போம்!

குடும்பத் தலைவரை, வாழ்வாதார வருமானத்தை இழந்து விட்ட குடும்பங்கள், விதவைத் தாய்மார்கள், அனாதைப் பிள்ளைக்கு நேசக் கரம் நீட்ட மக்கள் முன்வர வேண்டும்! உலகின் அதி நவீன பாதுகாப்பு ஏற்பாடுகளை மீனவருக்கு வழங்க ஆவன செய்யவும் வேண்டும். கடற் கொந்தளிப்பு போன்ற நிலைகைளில் கடலுக்குப் போவதைத் தடுக்க மீனவர்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். அரசும் உரிய அதிகாரிகளும் இது போன்ற அனர்த்தத்தங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைப்போம்.

## தென்கிழக்கு பல்கலைக்கழகம் பற்றி சில ஊடகங்கள் தவறான விமர்சனங்களை வெளியிடுகின்றன

**உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில்**

தென்கிழக்கு பல்கலைக்கழகம் பற்றி சில ஊடகங்கள் தவறான விமரிசனங்களை வெளியிட்டு வருவதானது எமக்கு மிகவும் கவலையை ஏற்படுத்தியுள்ளது என பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் கலாநிதி எஸ்.எம். எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக பேரவை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற சமய மற்றும் சமூகத் தலைவர்களுடனான விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு தலைமை வகித்து உரையாற்றிய உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில் மேலும் கூறியதாவது;

மிகக் குறுகிய காலத்திற்குள் பாரிய வளர்ச்சி கண்டுள்ள தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தை சிலர் வேண்டுமென்றே விமர்சித்து வருகின்றனர். சிறிய விடயங்களைக் கூட பெரிதுபடுத்தி அபாண்டங்களை சுமத்துகின்றனர்.

சில ஊடகங்களில் எமது பல்கலைக்கழகம் பற்றி தவறான விமரிசனங்களை வெளியிட்டு வருகின்றனர். இது எமக்கு மிகவும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு இவ்விமரிசனங்கள் ஒருபோதும் உதவப் போவதில்லை.

பகிடிவதை விடயத்திலும் செய்திகள் பெரிதுபடுத்தியே வெளியிடப்படுகிறன. உண்மையில் நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பகிடிவதைக்கு இடமளிக்கப்படாத ஒரு பல்கலைக்கழகமாக திகழ்கின்ற எமது தென் கிழக்குப் பல்கலைக் கழகம் ஒரு முன் மாதிரியை வெளிக்காட்டி வருகின்றது.

1995 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப் பல்கலைக்கழகம் தற்போது 5 பீடங்களுடனும் 3500 மாணவர்களுடனும் 163 விரிவுரையாளர்களுடனும் 234 ஏக்கர் காணிப் பரப்பில் சிறப்பாக இயங்கி வருகிறது.

வழமைக்கு மாறாக இம்முறை 900 மாணவர்கள் மேலதிகமாக வந்து சேர்வதனால் விடுதிப் பிரச்சினை எழுந்துள்ளது. எனினும், இப்பல்கலைக்கழகத்திற்கு ஒலுவில் மகாபொல நிலையமும் மல்வத்தையில் 35 ஏக்கர் காணியும் கிடைப்பதனால் அப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என நம்புகின்றோம்.

வடக்கு கிழக்கில் முதலாவது பொறியியல் பீடம் இங்கு உருவாக்கப்பட்டுள்ளது. முதல் தடைவையாக 99 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இது ஒரு மைல் கல் என்று கூறினால் அது மிகையாகாது.

இந்நிலையில் சில ஊடகங்கள் இப்பல் கலைக்கழகம் பற்றி தவறான விமரிசனங்களை வழங்கி வருவது மிகவும் கவலையளிக்கிறது. ஏதாவது சந்தேகமிருந்தால், கேள்விப்பட்டால் எம்முடன் தொடர்பு கொண்டு கேட்டு விட்டு அச்செய்திகளை உண்மைத் தன்மையுடன் வெளியிட்டால் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அம்பாறை கரையோரப் பிராந்தியத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள சமய மற்றும் சமுக தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## வெற்றிகளுடன் உதயமாகும் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் - 2013

புகைத்தல் பழக்கமானது இன்று உலகில் சுகாதார மற்றும் பொருளாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது. புகைத்தலினால் நன்மை அடைபவர்கள் புகையிலைக் கம்பனிக் காரர்கள் மட்டும்தான் என்பது மறைக்கப்பட்ட உண்மையாகும். நாம் வாங்கும் சிகரட் ஒன்றின் விலை ரூபா 25 எனின் இதில் பெரும் பகுதி சிகரட் கம்பனியை நடத்தும் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் செல்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு நாளும் இலங்கை மக்களின் பல கோடிப் பணம் வெளிநாட்டிற்குச் செல்கின்றது.



பொருளாதார ரீதியில் பாரிய வீண் விரையம் ஏற்படுகின்றது. இருந்தபோதிலும், நமது மக்களிடையே இப்பழக்கம் நிலைத்திருப்பதற்கு பிரதான காரணம் புகையிலைக் கம்பனிகளின் ஊக்குவிப்பும் விளம்பர உத்திகளுமாகும். உலக சுகாதார நிறுவனம், புகையிலை விளம்பரம், ஊக்குவிப்பு, ஆதரவு வழங்குதலை தடைசெய்தல் எனும் தொனிப் பொருளில் இவ்வாண்டின் புகைத்தல் எதிர்ப்புத் தினத்தைக் கொண்டாடுகின்றது. இதன் அறிக்கையின்படி வருடத்திற்கு உலகில் 6 மில்லியன் பேர்கள் மரணிக்கின்றனர். மேலும் 6 இலட்சம் பேர் புகைப்பவர்களால் வெளிவிடப்படும் புகையை சுவாசிப்பதால் (second-hand smoke) மரணிக்கின்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் புகைத்தல் மற்றும் மது தடுப்புச் சட்டங்கள், சமூர்த்தி வேலைத் திட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் விழிப்புணர்வு நடவடிக்கைகளால் புகையிலைக் கம்பனிகள் பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றன. இதனால், அதன் விற்பனை 14 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது என போதைப் பொருள் ஆய்வு நிறுவனங்களின் அறிக்கைகளிலிருந்து அறிய முடிகின்றது. வீழ்ச்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்த புகையிலைக் கம்பனிகளும் இன்று தமது விளம்பர நடவடிக்கைகளையும் புதிதாக மாற்றி அமைத்து வருகின்றனர்.

இலங்கையில் புகைத்தலினால் நாளொன்றுக்கு 73 பேர் மரப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதே நேரத்தில் வறுமைக்கும் புகைத்தலே காரணமாக அமைகின்றது.

எனவே, வறுமைக்குக் காரணமான புகைத்தலை நமது குடும்பங்கள் மற்றும் பிரதேசத்திலிருந்து அகற்றுவது அனைவரினதும் கடமையாகும்.

மருதமுனை றாசீக் நபாயிஸ்


எங்கள் தேசம் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| உள்நாடு | தனிப்பிரதி: 30.00<br>வருட சந்தா: 1200.00<br>ஆறு மாதங்கள்: 600.00 | |
| வெளிநாடு | இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்: 3600.00<br>மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 | அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00<br>இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம்.எச்.எம். ஹஸன்

# வடக்குத் தேர்தலை கடக்க அச்சமேன்!

ஜே.ஆர்-ராஜிவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1987இல் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட 13ஆவது அரசியல் யாப்புத் திருத்தமே மாகாண சபை முறையாகும். கடந்த 25 வருடங்களாக பல்வேறு கருத்து வேற்றுமைகளுக்கு மத்தியில் வடக்கு, கிழக்கு தவிர்ந்த மாகாணங்களில் இரு பெரும் கட்சிகளும் அதிகாரத்தில் இருந்து அனுபவித்த மாகாண சபை முதன் முதலாக வடக்கு நோக்கிச் செல்ல இருக்கையில் அது தொடர்பான அச்சமும் பீதியும் சந்தேகமும் சர்ச்சையும் கிளப்பப்படுவதைக் காணலாம். பெரும்பான்மை இனத்தினர், அரசாங்க கட்சியோ சிலபோது எதிர்கட்சியோ மகாகாண சபையில் அமர்த்தப்பட்டாலும் அச்சமடையா நிலை மாறி, ஒரு தமிழ் கட்சி ஆட்சி அமைக்கப் போகிறது என்ற உடனே அனைத்து இனவாத, தேசியவாத, தீவிரவாத சக்திகளும் கச்சை கட்டிக் கொண்டு எதிர்க்கப் புறப்பட்டுள்ள நிலைமையை விளங்கிக் கொள்ளும் ஒரு சராசரி மனிதருக்கு புதிராகவேயுள்ளது.

வட மாகாண சபை அமைவது இலங்கையைத் துண்டாடும் முயற்சி என்று கருதும் நிலை உருவாகியுள்ளது. இது அரசின் நாடகமே எனினும், இதன் கதை வசனம் ஜனாதிபதி மாளிகையில் எழுதப்பட்டு ஒத்திகையும் நடத்தப்பட்டதாகவும் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்கவும் விமல் வீரவன்சவும் இதில் நடிப்பதாகவும் ஐ.தே.க. விமர்சித்துள்ளது. இந்தியாவுக்கும் தமிழ் மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் 13 பிளஸ் என்ற நம்பிக்கையை ஊட்டி விட்டு இன்று 13 மைனஸ் என வெளிப்படையாகக் கூற முடியாத அரசாங்கம் வேறு சக்திகள் மூலம் இதனை முன்னெடுக்கிறது என்று பல தரப்பினராலும் குற்றம் சுமத்தப்படுகிறது. எந்த வகையிலும் 13ஆவது திருத்தத்தில் கை வைக்கக் கூடாது என்றும் அரசியல் யாப்பை முழுமையாகத் திருத்துவது வேண்டுமானால் சாத்தியப்படலாம் என்றும் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் சம்மேளனம் அறிவித்துள்ளது.



முஸ்லிம் காங்கிரஸ் 13 மைனசுக்கு ஆதரவு அளிக்காது என்று அறிவித்துள்ளது. இடதுசாரிக் கட்சிகளும் 13 மைனசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. ஐ.தே.க.வின் ஆக்கமான மாகாண சபை முறையை ஒழிப்பதை அக்கட்சியும் எதிர்த்தே வருகின்றது. ஆயுதப் போராட்டம் முடிந்ததும் ஜனநாயக வழியில் பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அடித்துச் சொல்லப்பட்டன. வருடங்கள் நான்கு கடந்தும் வெளிநாட்டு உதவியாகக் கிடைக்கும் நிதியைக் கொண்டு வடக்கிலும் கிழக்கிலும் கட்டடங்கள், பாதைகள் நிர்மாணிக்கப்பட்டாலும் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கவோ, அவர்கள் இழந்த அபிமானத்தை மீட்டுக் கொடுக்கும் முயற்சிகளோ எடுக்கப்பட வில்லை என்பது எல்லோரும் அறிந்ததே. இந்நிலையில் இறக்கைகள் அறுக்கப்பட்டு அதிகாரம் பிடுங்கப்பட்ட மாகாண சபையில் தேவைப்பாடு எந்தளவுக்குள்ளது என்பதும் ஆராயப்பட வேண்டியவை.

**மனித உரிமை மீறல், யுத்தக் குற்றம் போன்ற குற்றச் சாட்டுகளும் வெளிநாட்டு முதலீட்டின் தேக்கம், ஜி.எஸ்.பி. சலுகை ரத்து, இந்தியாவினதும் சர்வதேச நாடுகளினதும் ஓரக் கண்பார்வை என்ற பல பிரச்சினைகளுக்குள் வட மாகாண சபையை நடத்துவதே தீர்வாக அமையும் என்று அரசாங்கத்துக்குத் தெரியாதா என்ற கேள்வியும் எழும். ஆனால், இனவாதச் சிந்தனையால் மூழ்கடிக்கப்பட்டுள்ள இலங்கையில் இப்பிரச்சினை வேறு விதமாகவே நோக்கப்படுகின்றது.**

எந்தவோர் அரசாங்கமும் தாம் பதவியில் இருக்கும்போது தனது சாதனையைக் காட்டுவதற்காகவே ஏதாவது ஒரு கோஷத்தை முன்வைக்கும்; தாம் முற்போக்கான அரசு என்று சொல்லும்; திறந்த பொருளாதாரத்தை ஊக்குவிப்போம் என்று சொல்லும்; தார்மீக ஆட்சி என்றும் சொல்லும். அந்த வகையில் இன்றைய அரசின் தாரக மந்திரமாக இருப்பது தாம் தேசபிமான அரசு என்பதாகும். இந்த அரசாங்கத்தின் வலிமை தங்கியிருப்பது தேசத் துரோகிகளுக்கு எதிரான போராட்டத்திலாகும். அரசாங்கத்துக்கு எதிரான வேலை நிறுத்தங்கள் தேசத் துரோகமானவை. சம்பள உயர்வுப் போராட்டங்கள், மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிரான பேரணி அனைத்தும் தேசத் துரோகங்களாகும். 13ஆவது திருத்தமும் மாகாண சபையும் அரசாங்கத்தின் தேசபிமான முத்திரையைக் கிழிக்கும் ஓரங்கமாகும். எனவே, அதனை நீக்கவே தேசாபிமானம் என்ற கோஷங்களை ஏதோ ஒரு வகையில் அரசாங்கம் விருத்தி செய்து வருகிறது.

பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்றப் பிரேரணைகளைக் கொண்டு வந்தபோது அல்லது திவிநெகும 18ஆவது யாப்புத் திருத்தத்தின் போதெல்லாம் அரசாங்கத்துக்கு ஜனநாயக விரோத லேபல் குத்தாத சில கட்சிகள் வட மாகாணத்தில் மாகாண சபைத் தேர்தல் என்று வரும்போது அரசுக்குள் இருந்து கொண்டே தேசத் துரோகக் குற்றம் சாட்டும் துணிவைப் பெறுகின்றன. தேசிய ஐக்கிய முன்னணியும் ஜாதிக ஹெல உறுமயவும் மாகாண சபை முறையை எதிர்க்க இவ்வளவு காலம் முன்வரவில்லை. மாறாக, தெற்கின் மாகாணங்களில் உறுப்பினர்களாக அவர்களின் கட்சி அங்கத்தவர்கள் அதிகாரத்தைச் சுவைக்கின்றனர். உண்மையில், இந்த இரண்டு கட்சிகளின் எதிர்ப்பு அரசுக்கு ஒரு சவாலா என்றால் இரண்டு கட்சிகளும் சேர்ந்தாலும் பாராளுமன்றத்தில் 4 ஆசனங்களைத்தான் அவை கொண்டுள்ளன.


மாகாண சபைக்கு ஆதரவாகவும் எதிராகவுமுள்ள விவாதம் நாட்டு மக்களிடையே ஏற்பட முன்னரே அரசாங்கத்திற்குள் அது வெடித்துள்ளது. சம்பிரதாய இடதுசாரிகள் அதனை ஆதரிக்கும் நிலையில் உள்ளன. அவர்களின் பலம் பாராளுமன்றத்தில் 5 ஆசனங்களாகும். இதனைவிட, அரசின் பங்காளிக் கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பீ.டி.பி என்பனவும் மாகாண சபையை ஆதரிக்கும் கட்சிகள். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இதுவரை தம் நிலைப்பாட்டைப் பகிரங்கமாகக் கூறா விட்டாலும் மாகாண சபையை ஆதரிக்கும் கட்சியிலேயே அவர்களும் இருப்பதாகவே தெரிகிறது. இந்த வகையில் 4 எம்.பீ.க்களைக் கொண்ட குழு மாகாண சபையை எதிர்க்கும்போது 25 எம்.பீ.க்கள் கொண்ட குழுக்கள் இதனை ஆதரிக்கும் நிலைப்பாடு உண்மையில் அரசாங்கத்துக்குப் பெரும் தலையிடியாகும். (18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை ஜமாஅதே இஸ்லாமி மற்றும் ஜம்இய்யத் தலபாவின் ஏற்பாட்டில் தாருல் அர்கம் பாலர் பாடசாலை மற்றும் தாருல் அர்கம் மாலை நேர பாடசாலை மாணவர்களினால் புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று கல்முனையில் நடத்தப்பட்டது. இதில் மாணவர்கள் புகைத்தல் எதிர்ப்புப் பதாகைகளை ஏந்தி ஊர்வலமாகச் செல்வதை படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: கல்முனை நிருபர்



கல் எளிய முஸ்லிம் மக்களின் அனுசரணையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பகல் உணவு மற்றும் உலர் உணவு வழங்கும் நிகழ்வு வழங்கும் நிகழ்வு இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் கல் எளிய மன்றம் மற்றும் பல்லேவெல பொலிஸ் நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அண்மையில் பல்லேவெல மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கர்ப்பிணிப் பெண்ணொருவருக்கு உணவுப் பொதி வழங்கப்படுவதையும் கலந்து கொண்ட கர்ப்பிணித் தாய்மார்களையும் படங்களில்

படமும் தகவலும்: இஸ்மத் அலி

# சஊதி அரேபியாவின் நிதி உதவியில் புலமைப் பரிசுத் திட்டம்

அஷ்ரப் ஏ. சமத்





இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களில் பொறியியல் மற்றும் வைத்தியத்துறைகளில் பயிலும் வறிய முஸ்லிம் மாணவர்களுக்கு, அண்மையில் புலமைப் பரிசுகள் வழங்கப்பட்டது. சஊதி அரேபிய ஜித்தா இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் இப் புலமைப் பரிசு வழங்கிவைக்கப் பட்டது. இந்நிகழ்வு மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் நடைபெற்றது.

இப்புலமைப்பரிசில் திட்டம் முன்னாள் சபாநாயகரும் இஸ்லாமிய நிலையத் தலைவருமான எம். எச். முஹம்மத் தலைமையில் கடந்த 1983ஆம் ஆண்டில் இருந்து வழங்கப்பட்டு வருகின்றது.

இந் நிகழ்வின்போது, சஊதி அரேபியாவின் தூதுவரலாய அதிகாரி சாலி அப்துல்லா அல்பராக், முன்னாள் கொழும்பு மாநகர முதல்வர் ஹூசைன் முகம்மத், இஸ்லாமிய நிலைய பணிப்பாளரும் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான எம். சுலைமான் ஆகியோரும் கலந்து கொண்டு பல்கழைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி வைத்தனர்.

ஒவ்வொரு மாணவருக்கும் 240 அமெரிக்க டொலர் புலமைப் பரிசில்களாக வழங்கப்பட்டது. இப் புலமைப்பரிசில் திட்டத்தில் பொறியியல், வைத்தியம் மற்றும் பல் வைத்தியம் ஆகிய துறைகளில் பயிலும் 53 மாணவர்கள் பயன் பெற்றனர்.



குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்த மடிகே மிதியால கிராமத்தில் ஜாமிஉல் ஹைறாத் பைதுஸ் ஸகாத் அமைப்பின் 2012ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டினால் நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்ட இரு வீடுகளையும் பயனாளிகளையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: எம்.எச்.எம். ஜஃபர்




பெந்தோட்ட தூந்துவ முஸ்லிம் மகா வித்தியாலத்தின் ஏ.எச்.எம். அஸ்வர் பார்வையாளர் அரங்கு அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வரினால் திறந்து வைக்கப்படுவதையும் பார்வையாளர் அரங்கினையும் கல்லூரி அதிபர் ஏ.எச்.எம். சம்சுதீன், தென்மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்மொழிப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.எம். மதனி ஆகியோரையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: அஸ்ரப் ஏ. சமத்

## கல்விக் கண்காட்சி

கடையாமோட்டை புத்தெழுச்சி - 2013 எனும் தொனிப் பொருளில் கண்காட்சியொன்று புத்தளம் கடையாமோட்டை முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கண்காட்சி இம்மாதம் 19, 20, 21 ஆகிய திகதிகளில் பி.ப. 2:00 மணி தொடக்கம் மு.ப. 10:00 வரை நடைபெறவுள்ளதாக பாடசாலையின் அதிபர் எம். எஸ். எம். சஹீர் தெரிவித்தார்.

இக்கண்காட்சியில் வடமேல் மாகாண சபை உறுப்பினர்களான ஏ.எச்.எம். ரிபாஸ் மற்றும் ஆப்தீன் யஹ்யா ஆகியோரின் அழைப்பின் பேரில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் வடமேல் மாகாண முதலமைச்சர் அதுல விஜேசிங்க ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொள்ள உள்ளனர்.

இக்கண்காட்சி நிகழ்வுகளின் ஆரம்ப விழாவில் ஆயிரம் இடைநிலை பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதுடன், பாடசாலைக்கான மாதிரி விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான அடிக்கல் நடு விழாவும் நடைபெறவுள்ளதாக பாடசாலை அதிபர் மேலும் தெரிவித்தார்.

## பத்திரிகையியல் டிப்ளோமா பயிற்சி நெறியில் 13 பேர் அதிவிஷேட சித்தி

எமது செய்தியாளர்

2012ஆம் ஆண்டிற்கான கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பத்திரிகைத் துறைக்கான டிப்ளோமா பயிற்சி நெறியின் பெறுபேறுகள் அண்மையில் வெளியிடப்பட்டது.

மேற்படி பரீட்சையில் தோற்றியவர்களில் மூன்று மொழிகளிலும் 13 பேர் அதிவிஷேட சித்தி பெற்றுள்ளதுடன் மேலும் 63 பேரும் சித்தியடைந்துள்ளனர்.


இவர்களில் சிங்கள மொழியில் 8 பேரும் தமிழ் மொழியில் மூன்று பேரும் ஆங்கில மொழியில் இரண்டு பேரும் அதிவிஷேட சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளர் ஏ.எஸ்.எம். ஜாவித் மற்றும் எம்.ஐ. இஸட். ஹிமாயா, எம்.எஸ்.எம். ரிஷான் ஆகியோர் தமிழ் மொழி மூலம் அதிவிஷேட சித்தி பெற்றவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தாரில் சிந்திய வியர்வைத்துளிகள்:

## புத்தளத்து மண்ணில் அறுவடை





தந்தையின் கடன், சகோதரியின் திருமணம், குடியிருக்க வீடு என அடுக்கடுக்காக வரும் தேவைகளோடு கடவுச் சீட்டைக் கையிலேந்தி தாய் மண்ணையும் இரத்த உறவுகளையும் துறந்து எமது உள்ளம் புலம் பெயர்கின்றது. எமக்குள் எத்தனை சின்னச் சின்ன ஆசைகள், கற்பனைகள்!

எமது பாலைவனத்து வியர்வைத் துளிகள் வீட்டின் முன் வராந்தா முதல் சமையலறை வரையும் மனைவியின் கையடக்கத் தொலைபேசி முதல் எமது குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் வரையும் ஊடுருவிப் பரந்து கிடக்கின்றன. நான், எனது குடும்பம், எனது நண்பர்கள் என சிந்தித்த எமக்குள் எதனையோ தொலைத்த உணர்வுகள்.

ஆம், நமக்கு கல்வி ஆகாரம் ஊட்டிய ஆசான்கள், பாடசாலைகள், ஓடி விளையாடிய தெருக்கள், சமூகம் கண்டு கொள்ளாத ஆதரவற்றவர்கள் என பட்டியல் நீள்கிறது. என்னால் எனது குடும்பத்தை வளப்படுத்த முடியுமென்றால் எமது பிரதேசத்தவர்கள் ஒன்றிணைந்து எமது ஊரை வளப்படுத்த முடியுமே! தூய உள்ளங்கள் சில இணைந்து கத்தாரிய மண்ணில் நம்பிக்கையுடன் Puttalam Association Qatar - PAQ அமைப்பைத் தோற்றுவிக்கின்றனர்.

சமூகத்திலுள்ள ஆதரவற்றவர்களை அரவணைத்துச் செல்லும் PAQ அமைப்பின் செயற்பாடுகள் கலந்துரையாடப்படுகின்றன. நடுநிசி கடந்து, கண்கள் விழித்து சமூகம் பற்றிய கலந்துரையாடல் தொடர்கின்றது. வேலையிலிருந்து வந்து ஓரிரு மணித்தியாலங்களில் மீண்டும் வேலைத்தளத்திற்கு செல்வதற்கே நேரம் போதுமாக இருக்கிறது. குடும்பத்தைப் பார்த்துக் கொள்வதற்கு உறவினர் இன்றி கடல் கடந்து வந்தும் கணவனை எதிர்பார்த்திருந்த மனைவியருக்கும்



கடல் கடந்து சென்ற கணவனை தொலைபேசி வழியாக எதிர்பார்த்திருந்த மனைவியருக்கும் தந்தையை எதிர்பார்த்திருந்த பிள்ளைகளுக்கும் அந்தக் கணங்கள் ஏமாற்றத்தையே அளித்திருக்கும். தங்குமிடத்தில் நாளைய சமையலுக்கு பெயர் குறிப்பிடப்பட்டவர் ஏச்சுப்பட்ட சந்தர்ப்பங்களையும் அந்த நடுநிசிக் கலந்துரையாடல்கள் பெற்றுத்தரவே செய்தன.

ஆனாலும், பிறந்த மண்ணையும் உறவுகளையும் பற்றிப் பேசுகின்ற பொழுது அவை பெரிதாக அலட்டிக் கொள்ளப்படுகின்ற விடயமாகவே இல்லை. ஊருக்கான வேலையை எங்கிருந்து ஆரம்பிப்பது? பல்வேறு கருத்துப் பரிமாற்றங்களின் பின்னர் மஷூரா அடிப்படையில் PAQ அமைப்பின் கன்னிச் செயற்திட்டம் தீர்மானிக்கப்படுகிறது.

23.ஜூன், 2012 அன்று சனிக்கிழமை சூரியன் மத்தியை நோக்கி நகரும் வேளை 17 குடும்பங்கள் புத்தளம் மணல்குன்று முன்பள்ளியில் ஒன்று சேர்கின்றன முகத்தில் ஆயிரம் எதிர்பார்ப்புகளோடு. தம்மை விட்டு சிறைக்குச் சென்ற கணவன், பிள்ளை, சகோதரன் என்ற உறவுகள் தந்த கவலைகளுக்கு அப்பால், பயங்கரவாதக் குடும்பங்களாகவே தங்களைப் பார்க்கும் சமூகத்தின் நிலையை எண்ணி ஏக்கப் பெருமூச்சோடு பத்து மாதங்கள் கடந்த நிலையில் PAQ அமைப்பின் அழைப்புக்கு பதிலளிப்பதில் இருந்த ஆர்வத்தை அவர்களின் முகபாவனையில் வாசிக்க முடியுமாக இருந்தது.

எமக்கு உதவினால் கிறீஸ் மனிதன் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள எமது உறவுகளோடு அவர்களும் சிறைக்குச் செல்ல வேண்டி வரும் என்பதால் எம்மைச் சூழ இருந்த உறவுகள் எம்மையும் பயங்கரவாதிகளாகவே பார்த்தார்களோ தெரியாது. எனினும், 3,630 கிலோ மீட்டர்களுக்கு அப்பால் இருந்த புத்தளத்து கத்தாரிய உறவுகள் அவர்களின் பாலைவனத்து வியர்வைத் துளிகளால் எமது உள்ளத்தின் காயங்களுக்கு ஒத்தடம் தந்தார்கள்.

PAQ அமைப்பினால் வழங்கப்பட்ட ஒரு மாதத்துக்குப் போதுமான உணவுப் பொதியும் சட்ட ஆலோசனைகளும் எமக்குள் புதிய உற்சாகத்தை உருவாக்கியது. சமூகத்தில் பராமுகமாக இருந்த எம்மை பலரும் போட்டிபோட்டுக் கொண்டு உபசரிக்க களம் சமைத்தது.

பாலைவனத்து சுடும் வெய்யிலின் வியர்வைத் துளிகளால் சேகரிக்கப்பட்ட றியால்கள் புத்தளத்து மண்ணின் ஆதரவற்றவர்களை அரவணைக்கின்றன.

"அனுதாபம் வேண்டாம், ஆதரவு தாருங்கள்"

இது சமூகத்தில் வாழும் இன்னுமொரு சமூகத்தின் குரல். ஆம், மாற்றுத் திறனாளிகள் சமூகத்தில் பாதையோர விளையாட்டுப் பொருட்களாக ஏன் பிறந்தோம் என வீட்டுக்குள்ளேயே ஏங்கி அழும் ஜீவன்களாக மறைத்து வைத்தும், சுமையாக அவர்களை எண்ணி நாள்தோறும் கவலை கொண்டு வாழும் சமூகப் பாரம்பரியம் உடைத்தெறியப்படுகின்றது.

இறைவன் மனிதனுக்களித்த திறமைகள் ஆச்சரியமானவை. மாற்றுத் திறனாளிகள் எமக்கு நிகரானவர்கள். ரமழானிய ஆன்மிக செழிப்போடு ஸாஹிறா ஆரம்பப் பாடசாலை பிரதான மண்டபத்தில் சமூகத்தின் முக்கியஸ்தர்கள் சமமாக அமர்ந்து அவர்களோடு இப்தார் செய்த காட்சியும் அன்பளிப்புகள் வழங்கி அவர்களை ஆனந்தம் அடையச் செய்ததும் கண்கொள்ளாக் காட்சி!

கத்தாரில் கிடைக்கின்ற ஒரு நாள் வெள்ளி விடுமுறையில் வியாழன் இரவு நண்பர்களுடன் இணைந்து வயிறார உண்டு, விளையாடி மகிழும் உள்ளமும் உணர்வுகளும் மாற்றுத் திறனாளிகளுக்கும் உண்டு என்ற உணர்வு எம்மை ஒரு முறை சிந்திக்க வைத்தது உண்மை.

பெருநாளுக்கு முந்திய இறுதி இரவில் நாளைய பகலுணவுக்காக கடன் பெற்று எமது வயிற்றுப் பசியைப் போக்கி எம்மை மகிழ்வித்த பெற்றோரின் தூய அன்பை இம்முறை ரமழானில் புத்தளத்து மண்ணின் ஒரு கோடியில், மஸ்ஜிதுல் கூபாப் பகுதியில்,ஆதரவற்ற உறவுகளோடு பகிர்ந்து கொண்ட சந்தர்ப்பம் அது. கடல் கடந்து வாழ்ந்தாலும் பெருநாள் பகலுணவு வேளையில் அவர்களது அடி மனதுப் பிரார்த்தனைகள் எமக்கு மன அமைதியை உருவாக்கியது.

முச்சக்கர வண்டியில் ஸ்பீக்கர் கட்டி வீடு வீடாக சில்லறைப் பணம் சேர்த்து சத்திர சிகிச்சை செய்வதற்குள் நோயாளியின் நிலை என்னவாகும்? இறைவன் அருளால் கூட்டு முயற்சியால் புற்று மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு சில நூறாயிரம் ரூபாய்கள் வழங்கப்பட்டன. சமூகத்தில் தங்கி வாழ்ந்த எமது உறவுகளுக்காகவும் எமது றியால்கள் நீண்டு சென்றுள்ளன. ஸனஇய்யாவின் முகாம்களுக்குள் காய்ச்சலால் அவதிப்படும் போதெல்லாம் உள்ளம் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றது.

கல்வி பெரும் உரிமை அனைவருக்கும் சமம் என்பர். புத்தளம் அசன் குத்தூஸ் பாடசாலையும் அங்கு பயிலும் மாணவர்களும் இதற்கு விதிவிலக்கா? மாணவர்களையும்

**அபூ அப்கஹம்**

பாடசாலைக்குத் தேவையான வளங்களையும் விருத்தியுறச் செய்வதும் சமூகக் கடமை அல்லவா? சில பத்து கத்தார் றியால்கள் எமது மறுமை வாழ்வுக்கு நிரந்தர நன்மைகளை ஈட்டித் தந்தது, அல்ஹம்துலில்லாஹ். புதிதாக அமைக்கப்பட்டு வரும் 120 அடி நீளமான சுற்று மதிலும் முதலாம், இரண்டாம் தர மாணவர்களின் கரங்களில் தவழும் அப்பியாசக் கொப்பிகளும் காகிதாதிகளும் றியால்களின் பெறுமதியை ரூபாவில் ஞாபகப்படுத்தி மன நிம்மதியை ஏற்படுத்துகின்றன.

எம்மைப்போல், தாய் மண்ணையும் உறவுகளையும் துறந்து தொழில் வாய்ப்புக்காக கத்தாருக்கு வரும் எமது மண்ணின் முதன்மைச் சொந்தங்களின் தொழில் தேடுகின்ற பணியில் பத்திரிகை விளம்பரம் முதல் நட்புடன் வழிகாட்டல்களை வழங்கி உறவுகளின் சுக துக்கங்களில் பங்கேற்கும்போது, தூர இருக்கும் இரத்த உறவுச் சகோதரனுடன் சண்டை இட்ட காட்சிகள் மனதைக் காயப்படுத்துகின்றது. மீண்டும், அந்த உறவுகளோடு அன்பாக உறவாட எமது உள்ளம் ஆவல் கொள்கின்றது.

மாதாந்தம் பெறும் 600 கத்தார் றியாலில் எனது தனிப்பட்ட, குடும்ப தேவைகளுக்கு அப்பால் நான் வழங்கிய 10 றியால் ஒரு வருடத்தில் ஒன்றரை மில்லியன் ரூபாவாக 1,500 குடும்பங்கள் பயனடைந்து வியாபித்தமை இறைவன் அல்குர்ஆனில் குறிப்பிடுகின்ற ஒரு பயிரின் உதாரணத்துக்கு ஒத்ததாகும். எமது எதிர்பார்ப்புகள் சில சந்தோஷங்கள், பாராட்டுதல்கள், புகழாரங்கள் அல்ல. எல்லாவற்றுக்கும் அப்பால் அல்லாஹ்வுடைய திருப்தியும் உயர்ந்த சுவனபதியுமாகும்.

23. ஜூன், 2013 அன்று ஒரு வருடம் கடந்து கத்தாரின் Landmar ஆகக் காணப்படும் பனாரில் எமது வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. பனார் கத்தாரின் கலாசார மத்திய நிலையம் மட்டுமல்ல, இன்று பனாரில் குழுமியிருக்கின்ற உறவுகள் புத்தளத்துக்கு புதிய கலாசாரத்தை ஏற்படுத்திய முன் மாதிரிகள். பனார் கட்டடத்தால் கத்தார் பெருமை அடைகிறது. இன்று பனாரில் கூடியிருக்கின்ற எமது உறவுகளால் புத்தளம் பெருமை அடைகிறது.

இவ்வமர்வில் உங்கள் உள்ளங்களோடு நானும் இணைகிறேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியியல் பாட ஆசிரியர்களின்றி மாணவர்கள் சிரமம்

எம்.ரீ.எம். பாரிஸ்

ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவின் மீராவோடை அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தில் அண்மைக் காலமாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருவதால் கற்றல் நடவடிக்கையில் பின்னடைவு காணப்பட்டு வருகின்றது.

இப்பாடசாலையில் 2015ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள 33 மாணவர்கள் புவியியல் கற்கையை தேர்வு செய்திருக்கின்றனர். இந்நிலையில், புவியியல் பாடத்திற்கான ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை.

இது விடயத்தில் கவனம் செலுத்திய பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள், மாணவர்கள், குறித்த பாடத்தை தெரிவு செய்த உயர்தர மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் அடங்கிய குழுவினர் கடந்த 31.05.2013 ஏறாவூர், மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்திற்கு விஜயம் செய்திருந்திருந்தனர்.

வலயக் கல்விப் பணிப்பாளருடனான இச்சந்திப்பின்போது, பாடசாலையில் நிலவி வரும் புவியியல் பாட ஆசிரியரின் வெற்றிடத்தை நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் வெகு விரைவில் இத்தேவையைப் பூர்த்தி செய்து தருவதாகவும் இதற்கான சில முயற்சிகளை பெற்றோர் மற்றும் அதிபர் முன்னெடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இச்சந்திப்பில் ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் கே.வி.எஸ். ஹமீட், ஓட்டமாவடி கோட்டக் கல்வி அதிகாரி எம். சுபைர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தலைமைத்துவப் பயிற்சி நெறி

எம்.ரீ.எம். பாரிஸ்



மட்டக்களப்பு மத்திய வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலக பிரிவின் உயர்தர மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறி மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலய பாடசாலை அதிபர் ஐ.எல். மஃறூப் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை ஊடக கற்கை பொறுப்பாசிரியர் எச்.எல்.எம். முஹைதீனின் ஒருங்கிணைப்புடன் இடம்பெற்றது.

எதிர்கால இலங்கையை அறிவு கேந்திரமாக்கும் அபிவிருத்தி இலக்கை உறுதிப்படுத்துவதற்கு 1000 இடைநிலைப் பாடசாலைகளையும் 5000 ஆரம்ப பாடசாலைகளையும் மீளமைக்கும் தேசிய வேலைத்திட்டம் கல்வி அமைச்சின் நிதியுதவியுடன் நாடளாவிய ரீதியில் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கல்வி அமைச்சின் கல்வித் துறை சார் அபிவிருத்திக் கோட்பாடு மற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் ஊக்குவிப்பு வழங்கல் செயற்திட்டத்தினூடாக உயர்தர மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறி வழக்கப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சி நெறியின் வளவாளர்களாக மட்டக்களப்பு மத்திய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர், ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். சுபைர், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ரீ.எம். றிஸ்வி, ஆசிரியர்களான எம். மஜீத், எம். இரனேஸ்பரன் உள்ளிட்ட வளவாளர்கள் இப்பயிற்சி நெறியை வழங்கினர்.



யாழ்ப்பாணம் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் அண்மையில் நடத்தப்பட்ட புத்தாண்டு விழாவில் யாழிலுள்ள சமூக சேவையாளர்கள் 11 பேர் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் பத்திரிகையாளரும் சமூக சேவையாளருமான மீரா லெப்பை லாபீர், யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் க. சின்னத்தம்பியினால் பொன்னாடை போர்த்தி 'சமூக திலகம்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவதையும் சங்கத்தின் தலைவர் கலாநிதி த. தணேந்திரன், ஜே 183 கிராம சேவகர் சசிகலா ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# ஒலுவில் கடல்சார் தொழில் பயிற்சி நிலையத்தை மூடுவதற்கு மக்கள் எதிர்ப்பு

எம். பைஷல் இஸ்மாயில்



இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அட்டாளைச்சேனை-ஒலுவில் துறைமுக மகாபொல கடல்சார் தொழில் பயிற்சி நிலையத்தை மூடிவிட்டு அதற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு கையளிக்கும் பொருட்டு எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் அப்பிரதேச மக்கள் மிகக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பொறியியல் பீடத்துக்கான இடம் மற்றும் கட்டிடத் தேவையை பூர்த்தி செய்வதற்காகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஒலுவில் பிரதேசத்தில் மேற்படி மகாபொல கடல்சார் தொழில் பயிற்சி நிலையம் கடந்த 15 வருடங்களாக இயங்கி வருகின்றது. இப்பயிற்சி நிலையத்தை மூடிவிட எடுக்கும் நடவடிக்கை இப்பிரதேச மக்களை மிகக் கவலையடையச் செய்துள்ளது.

ஒலுவில் துறைமுகத்துக்குத் தேவையான ஆளணிகளை உருவாக்குவதற்கும் அதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கும் மேற்படி மகாபொல கடல்சார் தொழில் பயிற்சி நிலையம் உருவாக்கப்பட்டது. ஆனால், ஒலுவில் துறைமுக நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்று துறைமுகம் செயற்படவுள்ள தற்போதைய காலகட்டத்தில் இப்பயிற்சி நிலையத்தை மூடுவதானது இப்பிரதேசத்து மக்களுக்குச் செய்யும் பாரிய துரோகமாகும் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த தொழில் பயிற்சி நிலையத்தில் சுயதொழிலைச் செய்யும் நோக்குடன் வீடு மற்றும் தொழிற்சாலை மின்னிணைப்பு, படகு இயந்திரம் திருத்துநர், அலுமினியம் பொருத்துநர், பாரம் தூக்கு இயந்திர இயக்குநர் ஆகிய பயிற்சிகளோடு, உருக்கி ஒட்டுதல் மற்றும் பொறிச்சாலை பயிற்சி நெறிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. பாரம் தூக்கு இயந்திரம் (போர் கிலிப்) இயக்கும் பயிற்சி நெறியில் 175 பேரும் வள்ளங்களுக்கான மோட்டார் திருத்தும் பயிற்சியில் 150 பேரும் அலுமினியம் பொருத்துதல் பயிற்சியில் 150 பேரும் உருக்கி ஒட்டும் தொழில் பயிற்சியில் ஏராளமானோரும் மிக வெற்றிகரமாக பயிற்சிகளை முடித்து வெளியேறி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நல்ல வருமானங்களுடன் தற்போதும் தொழில் புரிந்து வருகின்றனர்.

இந்த தொழில் பயிற்சி நிலையத்தின் மூலம் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயனடைந்து, அம்மாணவர்கள் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு பயிற்சிக் கட்டணங்களையும் வழங்கி வந்துள்ளனர். மேலும் ஒலுவில் துறைமுக நிர்மாண நடவடிக்கைக்காக காணிகளை இழந்தவர்களின் பிள்ளைகளான 900 பேருக்கு இந்த தொழில் பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர, பயிற்சி நிலையத்தில் தற்போதும் கூட பலர் தொழில் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறனதொரு நிலையில் இப்பயிற்சி நிலையத்தை மூடிவிட்டு அதன் கட்டிடங்களையும் அதனோடிணைந்த காணிகளையும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு வழங்குவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று இப்பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

இந்த மகாபொல தொழில் பயிற்சி நிலையம் மூடப்படுமாயின் ஒலுவில் துறைமுகத்துக்குத் தேவையான பயிற்றப்பட்ட ஆளணியினரை இப்பிராந்தியத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியாமல் போகும். எனவே, வெளியிடங்களில் உள்ளவர்களைக் கொண்டே ஒலுவில் துறைமுகத்துக்கான ஆளணி வெற்றிடங்கள் நிரப்ப வேண்டிய நிலைவரமொன்று உருவாகும் என அஞ்சப்படுகிறது.

எனவே, இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான ஒலுவில் மகாபொல கடல்சார் தொழில் பயிற்சி நிலையத்தை மூடும் திட்டத்தைக் கைவிட்டு அந்த தொழில் பயிற்சி நிலையத்தினை தொடர்ந்தும் செயற்படுத்த வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்களுக்கு இராணுவத்தினரால் வீடுகள் கையளிப்பு

கிண்ணியா நிருபர்

2006ஆம் ஆண்டு அசாதாரண சூழ்நிலை காரணமாக மூதூர், சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு புதிய வீடுகள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

சுமார் 9.5 மில்லியன் ரூபா செலவில் சீனன் வெளி இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட 28 வீடுகளே இவ்வாறு இடம் பெயர்ந்த மக்களுக்கு கையளிக்கப்பட்டன.

கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக கட்டை பறிச்சான், பட்டித்திடல், கிளிவெட்டி ஆகிய இடைத் தளங்கள் முகாம்களிலும் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் இடம் பெயர்ந்து இருந்தவர்களுக்கே இவ்வீடுகள் வழங்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இவ்வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர் என். பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் எஸ். அருள் ராசா, மாவட்ட செயலாளர் மேஜர் ஜெனரல் ரீ.ரீ. ஆர்.டி. சில்வா, கிழக்குப் பாதுகாப்பு முப்படைத் தளபதி லால் பெரேரா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சமாதான நீதவான்



அம்பாறை மாவட்டம், இறக்காமம் பிரதேசத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு ஒபசேகரபுர ராஜகிரியவை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் பி.எம். றிஸ்வான் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் கொழும்பு-10 மாளிகாகந்த நீதவான் நீதிமன்ற நீதிபதி எல். லியனாரச்சி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். பல்வேறு சமூக சேவைகளில் ஈடுபடும் இவர் இறக்காமம் சமூக மேம்பாட்டுச் சங்கத்தின் ஸ்தாபகரும் இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரி மற்றும் கல்முனை சாஹிரா கல்லூரி என்பவற்றின் பழைய மாணவரும் கொழும்பு பல்கலைக்கழக சுதேச மருத்துவ பீட பட்டதாரியுமாவர். மேலுமிவர் இறக்காமம் ஆறாம் பிரிவைச் சேர்ந்த மர்ஹூம் பக்கீர் முகைதீன்-றுக்கியா உம்மா ஆகியோரின் புதல்வராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-மலைஞானி

# கட்சியை மக்கள் மயப்படுத்த

## தொண்டமான் நூற்றாண்டை இ.தொ.கா. பயன்படுத்துமா?

சௌமியமூர்த்தி தொண்டமானின் நூறாவது ஜனன தினம் எதிர்வரும் ஆகஸ்ட் 30ஆம் திகதி வருகிறது. அன்றிலிருந்து அடுத்த ஒரு வருட காலம் தொண்டமான் நூற்றாண்டு விழாவை பல வடிவங்களில் கொண்டாட முடியும். 101வது பிறந்த தினத்துடன்தான் நூற்றாண்டு முடிவடையும். பெரிய மனிதர்களின் நூறாவது ஆண்டை ஒரு வருட காலத்துக்கு நினைவு கூர்வது மரபு.

நூற்றாண்டு ஜனன தின முன்னோட்டமாக கடந்த ஜூன் இரண்டாம் திகதி, கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் ஒரு நினைவு வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை- இந்திய சமுதாய பேரவை இதை ஏற்பாடு செய்திருந்தது. முக்கியஸ்தர்கள், முதலாளிமார் மற்றும் அழைக்கப்பட்டவர்கள் கலந்து கொண்ட இந்த வி.ஐ.பி. மாநாட்டில் தொண்டமான் நினைவுப் பேருரையை அமைச்சர் ரவூப் ஹக்கீம் நிகழ்த்தியிருந்தார். பிரதமர்களின் செயலாளராகப் பணியாற்றிய பிரட்மன் வீரக்கோனும் இங்கே உரையாற்றியிருந்தார்.

நினைவுப் பேருரை நிகழத்துவது ஒன்றும் புதிதல்ல; வழமையானது, வரவேற்கக் கூடியது. ஆனால், இந்த நினைவுப் பேருரை வைபவம் ஊடகங்களில் பரபரப்பு செய்தியாக வெளியிடப்பட வில்லை; முக்கியத்துவம் கொடுக்கப்பட வில்லை. இதற்குக் காரணம், மீடியாக்காரர்களை வழமை போலவே இ.தொ.கா.

> எத்தனை சோதனை வந்தாலும் நாங்கள் விழமாட்டோம் என்று இ.தொ.கா. வினர் அடிக்கடி சொல்லிக் கொள்வார்கள். அது சரிதான். நாமும் சரி, இ.தொ.கா. வை விமர்சிக்கும் வேறு பலரும் சரி, அது வீழ்ந்து விடக்கூடாது என்றுதான் மனசார விரும்புகிறார்கள். அவதம் விமர்சனங்களும் அந்த நோக்கத்துடனேயே முன்வைக்கப்படுகிறது. இ.தொ.கா. என்ற இயக்கம் இன்னும் பலம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமும் கூட. ஆலமரம் விழுந்து விட்டால் அந்த இடம் பொட்டலாகி விடும்; அதை இட்டு நிரப்பப்போவது யார்? இ.தொ.கா. வீழ்ந்து விட்டால் அந்த இடத்தை விமல் வீர வன்சையை வைத்தா நிரப்புவது?

அண்டவிடாமல் செய்ததாக இருக்கலாம். இ.தொ.கா. வின் மற்றும் தொண்டமான் அமைச்சின் ஊடகப் பிரிவுகள் என்றைக்குமே நொண்டிக் குதிரைகள்தான். குதிரைக்காரர் குதிரையை தேற்றி எடுத்து ஓடச் செய்தால், இதென்னடா இந்த மீடியாக் குதிரை தங்களை மிஞ்சி ஓடுகிறதே என்ற கவலையில் அதன் காலை முறித்து தொத்தல் குதிரையாக்கி விடுவது இ.தொ.கா. தலைமையின் மாறாப் பண்பு.

ஆனால், ஆகஸ்ட் மாத நூற்றாண்டு பிறந்த தினத்தை வழமைபோல சிலைக்கு பூமாலை சூடுதல், விநாயகர் வழிபாடு, இட்லி, தோசை காலை உணவு. பின்னர் கொட்டகால ஆலய பூஜை வழிபாடு, அன்னதானம், உலர் உணவு பொட்டல விநியோகம் என்று கொண்டாடி மேற்கொண்டு அடுத்த ஆகஸ்ட் 30ஆம் திகதி வரை அதைக் கிடப்பில் போட்டு விடுவார்கள் என்பது போலத்தான் தெரிகிறது. இ.தொ.கா. தலைமையின் உற்சாகமற்ற போக்கைப் பார்க்கும்போது, இவ்வாறு மௌனமாக இருந்து விட்டு இறுதித் தருணத்தில், தொண்டமான் ஞாபகார்த்தமாக இவற்றை எல்லாம் செயல்படுத்தவுள்ளோம் என்று அறிவித்து எங்களைப் போன்ற சந்தேகப் பிராணிகளை அதிர வைக்கும் திட்டம் ஏதும் இ.தொ.கா. தலைமையிடம் இருக்கிறதோ தெரிய வில்லை. அப்படியானால், நாங்கள் கொடுத்து வைத்தவர்கள்தான். எனினும், இ.தொ.கா. வின் செயற்பாடுகளை சீர்தூக்கிப் பார்க்கும்போது இப்படி அதிர்ச்சி வைத்தியம் செய்வதற்கான திராணி இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இ.தொ.கா. வை சுருக்கமாக வர்ணிப்பதென்றால் அது முதலாளிமாரினால் நடத்தப்படும் தொழிலாளர் இயக்கமே தவிர, வேறில்லை. ஒரே ஆறுதல், அங்கே முத்து சிவலிங்கம் இருப்பது மாத்திரம்தான். இன்னொரு ஆறுதல், புதியவரவாக அருள்சாமி இ.தொ. கா.வில் இணைந்திருப்பதுதான். இ.தொ. காவை விட்டு விலகிச் சென்று ஒரு சுற்றுச் சுற்றி வந்து, இடையில் அதிஷ்டவசமாகக் கிட்டிய மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் பதவியையும் ஐந்தாண்டுகள் அனுபவித்ததோடு அல்லாமல், தொழிலாளர் விடுதலை முன்னணி என்ற ஒரு தேர்தல் குதிரையை கட்சியாக வரிந்து இன்னொரு வலம் வரவும் செய்தார் அருள்சாமி.

இறுதியாகக் கடந்த பொதுத் தேர்தலில் மண் கௌவிய அவர் மாகாண சபை மகுடங்களையும் இழந்து ஜனாதிபதியிடம் தஞ்சமடைந்தார். அவர் தன்னை அண்டியவர்களைக் கை விடுவதில்லை. பத்தோடு பதினொன்றாக ஓர் ஆலோசகர் பதவியையும் போட்டுக் கொடுத்தார். கடந்த சில வருடங்களாக வெற்று மேசை மீது இராஜாங்கம் பண்ணிக் கொண்டிருந்த அருள்சாமி, இப்போது மறுபடியும் இ.தொ.கா. வில் தஞ்சமடைந்திருக்கிறார்.

இவ்வகையில், இ.தொ.கா. சிறப்புப் பெறுகிறது. இ.தொ.கா. வில் பல ஒட்டை உடைசல்கள் இருந்தாலும், பணக்காரர் ஆட்சியாக மாறிப் போனாலும் தம்பி நடையானாலும் பேச்சு பல்லக்கு என்பதுபோல, இன்றைக்கும் ஸ்தான ரீதியாக இலங்கும் மற்றும் மலையகத்தின் முன்னணிக் கட்சியாகத் திகழும் ஒரே தமிழ் அரசியல் கட்சி இ.தொ.கா. தான். அதன் செல்வாக்கு படிப்படியாக வீழ்ச்சி கண்டு வருகின்ற போதிலும், தேசிய அரசியலில் குரல் கொடுக்கக் கூடிய கட்சியாக அதனால் திகழ முடிகிறது.

இ.தொ. காவை விட்டுப் பலர் விலகிச் சென்ற போதிலும், எதிர்பார்த்த வீழ்ச்சியை பிரிந்து சென்றவர்களினால் இ.தொ.கா. வில் உருவாக்க முடிய வில்லை. பின்னர் தமது இருப்பே கேள்விக் குறியானபோது, பிரிந்து சென்றவர்கள் போக்கிடமின்றி மீண்டும் இ.தொ.கா.வுக்கே திரும்ப வேண்டியதாயிற்று.

எம்.எஸ். செல்லசாமி, சென்னன், அருள்சாமி, கணபதி கனகராக என்று பட்டியல் நீழ்றது. இவர்கள் திரும்பவும் தாய்க் கட்சிக்கே திரும்பி வந்தவர்கள். வந்த பின்னர் கடைசி பெஞ்சில் அமர்ந்திருக்கும் மாணவர்களைப் போல 'கப்சிப்' ஆனவர்கள். அருள்சாமியின் அரசியல் அத்தியாயமும் இப்படித்தான் 'கப்சிப்' பென முடிந்துவிடப் போகிறது. இது, தோற்றுப்போன அரசியல்வாதிகளின் Survival Tactice- இருத்தலுக்கான மூலோபாயம் என்று குறிப்பிடப்படுவதே சரியாக இருக்கும்.

ஆனாலும், எமக்கு ஓர் ஆறுதல், இ.தொ.கா. என்ற முதலாளிமார் சங்கத்தில், தோட்டங்கள், தொழிலாளர்கள், அவர்களின் அரசியல், நாளாந்த பிரச்சினைகள் என்பனவற்றை சரிவரத் தெரிந்த இன்னொரு இ.தொ.கா. பிரமுகர் என்றால், அவர் அருள்சாமிதான். அவரை எவரும் அணுகலாம், பிரச்சினைகளைச் சொல்லலாம். பிரச்சினைகள் அவருக்குத் தெரியும், புரியும். முத்து சிவலிங்கத்தைத் தவிர இப்போது அணுகவும் பேசவும் புரிந்து கொள்ளவும் ஓர் அருள்சாமி இருக்கிறார்.

எத்தனை சோதனை வந்தாலும் நாங்கள் விழமாட்டோம் என்று இ.தொ.கா. வினர் அடிக்கடி சொல்லிக் கொள்வார்கள். அது சரிதான். நாமும் சரி, இ.தொ.கா. வை விமர்சிக்கும் வேறு பலரும் சரி, அது வீழ்ந்து விடக்கூடாது என்றுதான் மனசார விரும்புகிறார்கள். அவர் தம் விமர்சனங்களும் அந்த நோக்கத்துடனேயே முன்வைக்கப்படுகிறது. இ.தொ.கா. என்ற இயக்கம் இன்னும் பலம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமும் கூட. ஆலமரம் விழுந்து விட்டால் அந்த இடம் பொட்டலாகி விடும்; அதை இட்டு நிரப்பப்போவது யார்? இ.தொ.கா. வீழ்ந்து விட்டால் அந்த இடத்தை விமல் வீர வன்சையை வைத்தா நிரப்புவது? விமர்சனம் செய்பவர்கள் அனைவருமே, தலைமை தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும். அண்டி நிற்கும் முதலாளிகளையும் தொழிற்சங்க அரசியல் தெரியாதவர்களையும் பிடுங்கித் தின்ன சுற்றி வரும் கழுகுகளையும் அகற்றி விட்டு அதைத் தொழிலாளர்- சாமானியர்- இயக்கமாக மாற்ற வேண்டும், அதிக ஜனநாயக நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதைத்தான் அழுத்தம் திருத்தமாக சொல்லி வருகிறார்கள். இப்படியே போனால் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி விடுமோ எனப் பயப்படுகிறார்கள்.

அ.தி.மு.க. வீழந்தால் தி.மு.க. இருக்கிறது. இங்கே முஸ்லிம் காங்கிரஸ் அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பு வீழ்ந்தால் அந்த இடத்தைப் பிடிக்க இன்னொரு பேரியக்கம் இல்லை. இ.தொ.கா. வீழ்ந்தால் அந்த இடத்தைக் கைப்பற்றி நிர்வகிக்கும் ஆற்றலுடன் மலையக மக்கள் முன்னணி இல்லை. அவ்வாறான ஒரு நிலை தோன்றினால் இராதா கிருஷ்ணனை துரத்தி விட்டு அந்த இடத்தைப் பிடிப்பது யார் என்ற கோஷ்டி மோதல் ஏற்பட்டு விடும். ஏனெனில், இராதா கிருஷ்ணன் எம்.பி. மலையக மக்கள் முன்னணியைப் பொறுத்தவரை வந்து குடியேறிய ஒருவர், மலையக அரசியல்வாதிகளை சொற்ப விலைக்கே வாங்கி விடக்கூடிய சக்தியுடன் பிரதான சிங்கள எதிர்கட்சிகள் இன்னொரு புறம் உள்ளன.

இவற்றை எல்லாம் மனதில் வைத்துத்தான் இ.தொ.கா. விழக்கூடாது, தலைமை தன்னைத் திருத்திக் கொண்டு மக்கள் கட்சியாக அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று விமர்சகர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஆறுமுகன் தொண்டமான் அரசியலுக்கு அழைத்து வந்த அவரது அக்காள் மகன் செந்தில் தொண்டமான் ஒரு குறுநில மன்னரைப்போல பதுளையில் நடந்து கொள்கிறார் என்றும் தொழிலாளர்களை அந்த காலத்து 'பரதேசி' கங்காணிமார் போல கேவலமாக நடத்துகிறார் என்றும் பரவலாக செய்திகள் வெளியாகி வருகின்றன.

அவர் அரசியல் பிரவேசம் செய்தபோது, இ.தொ.கா. வுக்கு புது இரத்தம் பாய்ச்சுவார் என எதிர்வு கூறப்பட்டது. ஆனால், அவரோ ஊவா மாகாணத்தில் இ.தொ.கா. வின் கௌரவத்தை சீரழித்துக் கொண்டிருப்பதாகவே பதுளை இ.தொ.கா. வட்டாரத்தில் பேசிக் கொள்ளப்படுகிறது.

(20ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு மாகாண அமைச்சர் ஹாபிஸ் நசீர் தனது அமைச்சின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவைகளை அண்மையில் திருகோணமலை மாவட்டத்தின் பல இடங்களுக்கும் சென்று பார்வையிட்டார். இந்நிகழ்வுகளின்போது விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களுக்கு தொழில் உபகரணங்கள் வழங்குவதையும் அமைச்சின் திணைக்களப் பணிப்பாளர்களையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: பழுலுல்லாஹ் பர்ஹான்



அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் புதிய நிர்வாக சபைத் தெரிவுக்கான ஒன்றுகூடல் அண்மையில் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் உரையாற்றுவதையும் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக சபை உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

படமும் தகவலும்: அஸ்ரப் ஏ. சமத்



எதிர்வரும் புனித ரமழானை முன்னிட்டு நோன்பாளிகளுக்கு வழங்கவென சவூதி அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்பட்ட பேரீத்தம் பழங்களில் கம்பஹா மாவட்டத்திற்குரிய பழங்களை அப்பகுதியிலுள்ள பள்ளிவாசல்களுக்கு வழங்கும் நிகழ்வு அண்மையில் கம்பஹா காதி நீதிமன்றக் கட்டிடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி உரையாற்றுவதையும் பேரீத்தம் பழங்கள் பள்ளிவாசல் நிர்வாகிகளிடத்தில் வழங்கி வைக்கப்படுவதையும் அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர் டுலிப் விஜயசேகர, நீர்கொழும்பு நகர சபை பிரதி மேயர் சகாவுல்லா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் மௌலவி நூறுல் அமீன் உட்பட பல பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: ஏ.எஸ்.எம். ஜாவித்



இவ்வருடம் புனித ஹஜ் பயணத்தை மேற்கொள்வதற்காக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்தவர்களில் 2800 பேருக்கான நேர்முகப் பரீட்சையும் கருத்தரங்கும் மாவட்ட ரீதியாக திணைக்களத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. அண்மையில் அக்குறனை அஸ்ஹர் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்கில் திணைக்களப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஸமீல் விளக்கமளிப்பதையும் ஹஜ்ஜுக்காக விண்ணப்பித்தவர்கள் கலந்து கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: ஏ.எஸ்.எம். ஜாவித்



சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு கொடி வாரத்தை முன்னிட்டு கிராம மட்ட சமுர்த்தி தலைவர்களுக்கான விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு அண்மையில் கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது கல்முனை பிரதேச சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ் உரையாற்றுவதையும் கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம். நௌபல் நன்கொடை நிதியளிப்பதையும் கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.டப்ளியூ.ஏ. கப்பார், கல்முனை ஹலால் திணைக்கள பொறுப்பதிகாரி நியுட்டன் அவுஸ்போன் ஆகியோரையும் நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்களையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: மருதமுனை றாசிக் நபாயிஸ்

# புரூணையில் சில நாட்கள்...

—— பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com

தொடர்-04



அப்படியானால் என்னதான் சொன்னது அந்த ஸ்கேனர்?

நண்பர் இஸ்மத் அலிக்கும் 'சேர் வீட்டுக்கும்' (இவரைப் பற்றி பிறகு சொல்கிறேன்) என சில உணவுப் பண்டங்களை எடுத்துச் சென்றிருந்தேன். அதில் பிடகொடுவையில் வாங்கிய சில உள்ளூர் மிட்டாய்கள் சுற்றப்பட்டிருந்த விதம் என்னைப் போதைப் பொருள் கடத்தல் காரனாகக் காட்டிக் கொடுத்திருக்கிறது அந்த ஸ்கேனருக்கு! நான் அப்படிப்பட்டவன் இல்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டதும் தோளில் தட்டி சொறி கேட்டார்கள். 'டஸ் ஓகே' சொல்லி வெளியேறினேன்.

உள்நாட்டு வர்த்தகத் தேவைக்காகவும் புரூணை விமானப் படைத்தளத் தேவைக்காகவும் 1953ல் ஆரம்பிக்கப்பட்ட புரூணை விமான நிலையம் பெலைட (Belait) மாவட்டத்திலேயே அமைந்திருந்தது. பின்னர் சர்வதேச நாடுகளுடனான தொடர்புகள் வலுப் பெறவே முஆரா (Muara) மாவட்டத்தில் 1974ல் தற்போதைய விமான நிலையம் உதயம் பெற்றது.

இந்த விமான நிலையத்தின் சிறப்பம்சத்தில் ஒன்று 2005ஆம் ஆண்டிலிருந்து புரூணை மன்னருடைய சொந்த விமானம் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் (Terminal) நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சுல்தான் நாடு கடந்து எங்காவது பயணம் மேற்கொண்டால் இந்த விமானத்திலேயே செல்வார். அதிலிருக்கும் தங்க முலாம் பூசப்பட்ட குழியலறை விவகாரம் தொட்டு அந்த விமானம் பற்றிய சுவையான பல கதைகளை பின்னர் சொல்கிறேன்.

கண்ணாடி அறைக்கு அப்பால் பட்டென்று பார்வையில் தென்பட்டார் நண்பர் இஸ்மத் அலி. என்னை வரவேற்பதற்காக நண்பர்களான இஸ்மத் அலியும் ஸிஹானும் (மாத்தளையை சேர்ந்த இவர், இஸ்மத் அலி கற்கும் அதே பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருந்தார்) வந்திருந்தார்கள். பயணிகளை வரவேற்க வந்திருக்கும் அந்தக் கூட்டத்தில் அதுவும் கண்ணாடி அறைக்கு அப்பால் நண்பர்களை எப்படி விரைவாக அடையாளம் கண்டு கொண்டேன் தெரியுமா? அந்த சுவாரஷ்யமான 'அசல்' கதையையும் பிறகு சொல்கிறேன்.

என்னை அழைத்துச் செல்ல காரில் வந்திருந்தார்கள், நண்பர்கள் இருவரும். பிற்பகல் நான்கு மணி கடந்து விட்டதால் புரூணையின் மாலைச் சூரியனின் அழகை முழுமையாக ரசித்தபடி ஒரு பூந்தோட்டத்தை ஊடறுத்து கார் நகர்ந்து கொண்டிருந்தது. இருபது கிலோ மீட்டர் தூரம் கடந்தும் அந்தப் பூந்தோட்டம் முடிவதாய் இல்லை!

கொத்துக் கொத்தாய் பல நிறங்களில் பூத்துக் குலுங்கிய மலர்க்காடு! யௌவனப் பருவத்தில் நெஞ்சு நிமிர்த்தி நின்ற அந்த பூந்தோப்பின் இடையிடையே சிகை அலங்காரம் செய்யப்பட்டு பச்சைக் கம்பளம் போர்த்திய மணப் பெண்ணாய் அழகிய சின்னச் சின்ன மரங்கள்!

ஒவ்வொரு மலர் வடிவத்திலும் செதுக்கப்பட்ட மின் கம்பங்களில் பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ்கள் எரிவதற்குத் தயாராய்க் காத்திருந்தன. வரிசையாய், வேகமாய் நகர்ந்து கொண்டிருந்தன கார் வண்டுகள்.

இருபது நிமிட பயணத்திலும் முடியாத இந்த நீளமான பூந்தோட்டம்தான் உலக சாதனை படைத்த மிக நீளமான பூந்தோட்டமாக இருக்க வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே அந்த வீடு வந்து சேர்ந்தது.

ஓஹ்! இவ்வளவு நேரமும் நாம் பயணித்துக் கொண்டிருந்தது ஒரு பூந்தோட்டமல்ல புரூணையின் பிரதான வீதியில் ஒன்றுதான் என்பதை உணர்ந்து கொண்ட நான், முதல் நாளிலேயே அந்த தேசத்தின் அழகில் லயித்துப் போனேன். என்னை வரவேற்க அந்த வீட்டின் கதவு தாழ்ப்பால் இட்டுக் கொள்ளாமலேயே காத்திருந்தது.

தரப்பட்ட குளிர்பானத்தை அருந்திவிட்டு, விடாமல் துருவிக் கொண்டிருந்த இஸ்மத் அலிக்கு நாட்டுக் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தேன். எனக்காக ஏற்கனவே தயார் செய்யப்பட்டிருந்த மதிய உணவு சாப்பாட்டு மேசையை நிறைத்திருந்தது.

விமான நிலையத்திலிருந்து வரும்போது ஸிஹானுடன் மனம் விட்டு சுவாரஷ்யமாக பேசிக் கொண்டு வந்ததால் வயிற்றுக்குத் துரோகம் செய்ய வெட்கம் முன்வரவில்லை. புரூணையின் 'மலே' ருசியும் நம் நாட்டின் அசைவ ருசியும் கலந்த மிகவும் சுவையான அந்த சாப்பாடு இன்னும் அடிநாக்கில் நிற்கிறது.

பருப்பு– பார்த்தவுடன் எனக்கு சிரிப்பு வந்தது. "நீங்க இங்கயுமா" திருவாளர் பருப்பு அவர்களைப் பார்த்து சலித்துக் கொண்டேன். பானும் பருப்பும் எங்கள் காரியாலய சமையற்காரரின் கூட்டாளிகள். தவிர, வெளி இடங்களில் நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும் பெரும்பாலும் பானும் ப்ருப்பும்தான் அன்றைய காலைப் பொழுதை கை கொடுத்து வரவேற்கும்.

"நாங்க ஜாமிஆ நளீமிய்யாவில சாப்பிட்ட பாணையும் பருப்பையும் குவிச்சி வெச்சா உஹது மலையளவில் வரும்" என்று இஸ்மத் அலி அடிக்கடி சொல்வதை ஞாபகமூட்டினேன்.

புரூணையில் பருப்பு அப்படி ஒன்றும் இலேசுபட்ட சமான் அல்ல!

நான் இலங்கையிலிருந்து சென்றிருப்பதால் நமது தேசிய கறியையும் வழங்கி கௌரவப் படுத்தும் நோக்கிலேயே பருப்புக் கறியையும் வைத்திருப்பதாக அறிந்து கொண்டேன்.

சாப்பிட்டு ஓய்வு எடுக்கும் போதுதான் 'அந்த சேர்' வந்தார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன விருத்தியில் சிக்கலை ஏற்படுத்திவரும் இரசாயனப் பொருட்கள்

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com


வட பசுபிக் சமுத்திரத்தில் கடற் கரையிலிருந்து 2000 மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு தீவு குறித்து MIDWAY Film நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட 3 நிமிட குறுந் திரைப்படம் ஒன்று பார்க்கக் கிடைத்தது. மனித நடமாட்டமில்லாத தொலை தூரமிருக்கும் அத்தீவில் ஒரு நாளைக்கு மட்டும் நூற்றுக் கணக்கான எல்பட்ராஸ் பறவைகள் இறந்து மடிகின்றன. காரணம், 2000 மைல்களுக்கு அப்பால் மனிதர்கள் பயன்படுத்தும் பிளாஸ்டிக் நச்சுப் பொருட்கள்தான். இறந்த இடத்தில் பறவைகளின் உக்கிப்போன எச்சங்கள் இருந்தாலும் இன்னும் உக்காது அவற்றின் வயிற்றிலிருக்கும் பிளாஸ்டிக் பொருட்களை ஒரு சுற்றுச் சூழல் ஆர்வலர் புகைப்படமெடுப்பதை அக்குறுந் திரைப்படம் சுட்டிக் காட்டுகிறது.







ஆய்வு கூடங்கள், தொழிற்சாலைகள், விவசாய நிலங்கள், பண்ணைகள் வர்த்தக நிலையங்கள், மாடி வீடுகள் எனப் பல்வேறு இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படும் 70000 இற்கும் மேற்பட்ட நச்சு, இரசாயனப் பொருட்கள் கழிவுப் பொருட்களுடன் கலப்பதன் காரணமாக நிலம், நீர், வளி என்பன அண்மைக் காலமாக மிக துரித கதியில் மாசுபட்டு வருவதை விஞ்ஞான உலகம் இனங்கண்டுள்ளது.



இதில் பாரதுரமானவை என்னவென்றால், உயிரினங்களைக் கருவிலேயே பாதிப்படையச் செய்து அவற்றை ஒட்டு மொத்தமாக அழிவுறச் செய்யும் ஒருவகை மோசமான இரசாயனப் பதார்த்தங்கள் நாம் பயன்படுத்தும் செயற்கைப் பொருட்களில் இருப்பதாக சமீபத்திய ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது. இவ்வகை, இரசாயனம் உயிரினங்களின் பரம்பலுக்குக் காரணமான பால் விருத்தியைத் தொடர்ந்தும் பாதிப்பிற்குள்ளாக்கிவருவதால் அவற்றின் இன விருத்தி குறைந்து வருவதாகவும் பூமியில் உயிரினங்களே இல்லாது அழிந்துபோகும் சாத்தியம் உருவாகும் எனவும் ஆய்வாளர்கள் எச்சரிக்கை செய்கின்றனர்.

கருத்தடை மாத்திரைகள், ஆணுறைகள் மற்றும் வீரியத்தைத் தூண்டும் மருந்துகள் போன்றன கழிவாக்கப்படும்போது அவற்றிலிருந்து வெளியேறும் ஒஸ்டஜின் எனும் நச்சுப் பொருளே உயிரினங்களின் இன விருத்தியைப் பாதிப்பதாக இங்கிலாந்து சுற்றாடல் சபை செய்தி வெளியிட்டுள்ளது.

தென்மேற்கு இங்கிலாந்தின் கடற்கரைப் பகுதியொன்றில் சில வகை ஆண் பறவைகள் புழு பூச்சிகளை உண்பதற்காக குப்பைகளைக் கிளறியதில் அங்கிருந்த கருத்தடை மாத்திரைகளையும் உண்டதால் அதில் காணப்படும் ஒஸ்டஜின் பறவைகளின் இயல்பு நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாக அறியக் கிடைத்துள்ளது. இத்தகைய நச்சுப் பொருட்கள் உணவுடனும் நீருடனும் கலப்பதாலும் பறவைகள் அவற்றை உணவாகக் கொண்டதாலும் அவற்றின் மூளைப் பகுதி பாதிப்படைந்துள்ளது. இதனால் அவை வழமைக்கு மாற்றமாக அசாதாரண ஒலி எழுப்பிக் கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பொதுவாக, பறவை இனங்கள் அனைத்திலும் இத்தகைய பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இத்தகைய இன விருத்தி அல்லது கருவளப் பிரச்சினை ஒஸ்டஜினால் மட்டும் உருவாவதல்ல. பொதுவாக, அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாம் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களே இத்தகைய நச்சுப் பொருட்கள் எம்முடலில் கலக்கக் காரணமாக அமைகிறது.

இரசாயனப் பதார்த்தங்களால் தாக்கமுற்ற உயிரினங்கள் மூளை பாதிப்படைந்து இதனால் அவை தொடர்ந்தும் அசாதாரண முறையில் ஒலி எழுப்பிக் கொண்டிருப்பதாகவும் இன்னும் சில விலங்குகளின் குட்டிகள் இன விருத்திச் சிக்கலுடன் பிறப்பதாகவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதிலும் அண்மைக் காலமாக மனிதர்களில் ஆண் சந்ததியாகப் பிறக்க வேண்டிய பல நூறு குழந்தைகள் பெண் சிசுக்களாகப் பிறப்பதாகவும் அதற்கும் இத்தகைய இரசாயனப் பொருட்கள் உணவு,

(18ஆம் பக்கம் பார்க்க)

---

ஜே.எம். அஸீம்

சென்ற இதழ் தொடர்...

## புதிய மாற்றங்களுடன்...

YouTube

தொழிநுட்ப உலகில் மாற்றங்கள் இல்லையென்றால் பெரும் நிறுவனங்களுக்கு ஏமாற்றங்கள்தான் மிஞ்சும். ஏனெனில், அவர்களின் வாடிக்கையாளர்கள் அவர்களைக் கைவிட்டு விடுவார்கள். அதுவும் உலகில் போட்டி நிறைந்த சமூக ஊடகங்களில் மாற்றங்கள் இல்லையென்றால் அதன் பாவனையாளர்கள் மற்றைய சமூக ஊடகத்திற்குத் தாவி விடுவார்கள். இந்த வகையில் வீடியோக்களில் மக்களை மூழ்கடித்துள்ள Youtube அண்மையில் சில மாற்றங்களை மேற்கொண்டுள்ளது.

சென்ற இதழில் Youtubeஇலிருந்து வீடியோக்களை பதிவிறக்கம் (Download) செய்வதற்கான முறையொன்றை கூறியிருந்தோம். அதேபோல்

YTD Video Downloader எனும் மென்பொருள் மூலமும் Youtubeஇல் இருந்து வீடியோக்களை பதிவிறக்கம் (Download) செய்யலாம்.

Youtubeஇன் புதிய மாற்றங்களுடன் அடுத்த இதழில்...

YouTube Downloader YTD
Download › Convert › Play Videos


---

# சுருங்கும் உலகம் விரியும் இணையம்

கணினி, மடிக் கணினி, கைப்பேசி என உலகம் மாறிவிட்டிருந்தாலும் கைப்பேசியிலும் கண்ணிமைக்கும் நேரத்தில் கற்பனை செய்து பார்க்க முடியாத மாற்றங்கள், அசுர வேகத்தில் தொழிநுட்பம் வளர்ந்து அனைவரையும் பிரமிக்க வைப்பது ஆச்சரியமில்லை. ஆச்சரியம் என்னவென்றால் பதின்ம வயதுச் சிட்டுக்கள் புதுமை புதுமையாக இவற்றில் சாதிப்பதுதான்.

'நிக் டி அலோய்சியோ' எனும் 17 வயதுடைய பள்ளி மாணவனின் சாதனையை என்னவென்று விபரிப்பது? எமக்குத் தோன்றும் பிரச்சினைகளும் அவற்றுக்கு நாம் தேடும் தீர்வுகளும் எமக்குப் புதிய வழிகளை ஏற்படுத்தித் தரும். இப்படிப்பட்ட தேடல்கள்தான் உலகில் எண்ணற்ற கண்டுபிடிப்புகளுக்கு காரணமாக அமைந்திருக்கின்றன.

இப்படித்தான் 'நிக்' உம். பழைய கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. நூல்களை வாசிப்பதில் ஆர்வமுள்ள ஓர் அரசன் தன் அமைச்சர்களிடம் தனக்கு உலகிலுள்ள தலைசிறந்த நூல்களை எல்லாம் திரட்டித் தருமாறு கூறினான். எப்படியோ கஷ்டப்பட்டு அந்தப் பணியை அவர்கள் நிறைவேற்றியதும் மலைபோல் திரண்டிருந்த நூல்களைப் பார்த்த அரசன் திகைத்துப் போய் இவற்றை எனக்கு சுருக்கமாக் கித்தாருங்கள் என்றான். பல ஆண்டுகள் பல அறிஞர்கள் ஒன்றிணைந்து சுருக்கமாகத் தொகுத்துக் கொடுத்துவிட்டு தமது பணி முடிந்து விட்டதாக பெருமூச்சு விட்டனர்.



அவற்றைப் பார்த்த அரசன், திருப்தியடையாமல் தனக்கு அனைத்தையும் சுருக்கி ஒரே ஒரு நூலாகத் தருமாறு கேட்டான்... என்று இக்கதை தொடர்கிறது.

'நிக்' உம் அப்படித்தான். ஆனால், நிக் அரசன் அல்ல. இணையதளத்தில் கற்பதில் ஆர்வமுள்ள நிக்கிற்குத் தான் பார்க்கும் இணையதளங்களிலுள்ள விஷயங்களை சுருக்கமாகப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. தேடலும் முயற்சியும் இணைந்து இணையத்திலுள்ள விடயங்களை உள்வாங்கி அதே விடயத்தை சுருக்கமாக மொபைல் ஸ்கிரீனுக்கு ஏற்ப மாற்றித்தரும் அப்ளிகேஷனைக் கண்டு பிடித்து அதற்கு சம்லி (சுருக்கமாகக் கூறு) எனப் பெயர் வைத்து விட்டான்.

என்ன ஆச்சரியம், 2012ஆம் ஆண்டுக்கான சிறந்த மொபைல் அப்ளிகேஷனுக்கான அப்பிள் நிறுவனத்தின் விருதை வென்றிருப்பதாக அறிவிக்கப்பட்டான். இந்த அப்ளிகேஷனை வாங்க பெரும் நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டன. இறுதியாக கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதிக்கு அந்த அப்ளிகேஷனை வாங்கிக் கொண்டது யாஹூ நிறுவனம். நிக்கையும் யாஹூ வேலைக்குச் சேர்த்துக் கொண்டது. அதுவும் 'பார்ட் டைம்' ஜொப்தான்.

இவ்வளவு பணத்தை வைத்து என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு நிக் சொன்ன பதில்தான் ஆச்சரியம். "வழியை விடுங்கோ, நான் பரீட்சைக்குப் படிக்கணும் பாஸாகணும்" என்று சொல்லிவிட்டு பாடசாலைக்குச் சென்று விட்டான்.

இவ்வளவு பணத்தை வைத்து என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு நிக் சொன்ன பதில்தான் ஆச்சரியம். "வழியை விடுங்கோ, நான் பரீட்சைக்குப் படிக்கணும் பாஸாகணும்" என்று சொல்லிவிட்டு பாடசாலைக்குச் சென்று விட்டான். தொழிநுட்ப உலகம் எங்கோ விரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் சகவாழ்வுக்கு பங்களிப்புச் செய்யவே தேசிய ஷூரா சபை உருவாக்கப்படுகிறது

## இடைக்கால ஷூரா சபையின் அங்கத்தவர் அஷ்ஷெய்க் நஜா முஹம்மத்

பொது பல சேனாவின் பிரச்சினை என்பது நாங்கள் சமகாலத்தில் எதிர் கொள்ள வேண்டிய ஒரு சவால். ஆனால், இந்தப் பிரச்சினையை மையப்படுத்தித்தான் தேசிய ஷூரா சபையின் செயற்பாடுகள் அமையும் என்பது இல்லை. தேசிய ஷூரா சபையின் செயற்பாடுகளில் அதுவும் சிறியதொரு அம்சமாக இருக்கலாம். ஆனால், அதனைவிட நீண்ட காலத்தில் திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய பல விவகாரங்கள் இருக்கின்றன என இடைக்கால ஷூரா சபையின் அங்கத்தவர் அஷ்ஷெய்க் நஜா முஹம்மத் தெரிவித்தார்.

எங்கள் தேசம் பத்தரிகைக்கு அவர் வழங்கிய நேர்காணலின் முக்கிய பகுதிகள் இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

**எங்கள் தேசம்: தேசிய ஷூரா சபையை அமைப்பதற்கான காரணம் என்ன?**

**நஜா முஹம்மத்:** தேசிய அளவிலான கட்டமைப்பைக் கொண்ட ஷூரா சபை என்பது ஆலோசனைகளை வழங்குகின்ற சபையாக அமைய வேண்டுமென்ற வகையில் இம் முன்னெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இதனை ஆரம்பிப்பதற்கு பல்வேறு நோக்கங்கள் இருக்கின்றன. குறிப்பாக, யுத்தத்தின் பின்னர் எமது நாடு புதிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டது. தேசிய ஒருமைப்பாடு, இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, பொருளாதார அபிவிருத்தி, பாதுகாப்பு, வெளிநாட்டு சக்திகளின் தலையீடுகள் என்று பல்வேறு சவால்களை எமது நாடு எதிர் நோக்குகின்றது.

முஸ்லிம் சமூகம் நாடளாவிய ரீதியில் பரந்து வாழ்கின்ற ஒரு சமூகம். நீண்ட காலமாக பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களோடும் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களோடும் மிகவும் அந்நியொன்னியமாக வாழ்கின்ற அதேநேரத்தில், பல்வேறு அரசியல், பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்நோக்கி வருகின்றது.

அந்த வகையில், தேசிய விவகாரங்களிலும் முஸ்லிம் சமூகத்தின் விவகாரங்களிலும் பொதுவான நிலைப்பாடுகளை எடுத்து ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாடுகளின் அவசியத்தை உணர்ந்துதான் இத்தகையதொரு தேசிய ஷூரா அமைய வேண்டுமென்றும் கருதி அதற்காக நாங்கள் செயற்பட ஒரு குழுவாக முன்வந்தோம். நாட்டில் இருக்கின்ற பிரதானமான சன்மார்க்க தலைமைத்துவத்தையும் அரசியல் தலைமைத்துவத்தையும் சிவில் தலைமைத்துவத்தையும் ஒன்றிணைத்த, அதேநேரம் கொழும்பை மாத்திரம் மையப்படுத்தி செயற்படுகின்ற கட்டமைப்பாக அன்றி, மாவட்ட மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலும் கிராம மட்டத்திலும் மேலிருந்து கீழ் நோக்கிச் செல்கின்ற ஒரு தேசிய ரீதியான கட்டமைப்பைக் கொண்ட அமைப்பாக இது வரவேண்டும் என்ற நோக்கிலேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

சமூக விவகாரங்களில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் சன்மார்க்க அறிஞர்கள், புத்திஜீவிகள், துறை சார்ந்தவர்கள், நிபுணர்கள், சிவில் அமைப்புகள், அரசியல் தலைமைகள் அனைவருடைய கருத்துக்களையும் உள்வாங்கி ஒரு கலந்தாலோசனையின் அடிப்படையில் கொள்கைகளையும் தீர்மானங்களையும் வகுக்கின்ற ஒரு பொறிமுறையை உருவாக்குவதுதான் இதனுடைய மிக முக்கியமான நோக்கமாகும். பிரதானமான இலக்காக இனங்களுக்கிடையே, மதங்களுக்கிடையே புரிந்துணர்வு நாம் அனைவரும் இலங்கையர் என்ற அடையாளத்துக்குள் சகல வேறுபாடுகளையும் மறந்து ஒரு சமூகம் என்ற வகையில் நாங்கள் செயல்படுவதுடன் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் பங்கெடுக்கின்ற ஒரு சூழ்நிலையையும் உருவாக்க வேண்டும்.

**எங்கள் தேசம்: தேசிய சூரா சபையின் கட்டமைப்பு எவ்வாறு அமையவுள்ளது?**

**நாஜா முஹம்மத்:** இது பல தளங்களைக் கொண்டதாக இருக்கும். அதில் ஒன்று தேசிய ரீதியான பிரதான அமைப்புகள். அதாவது, ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் கவுன்சில், சமூக நிறுவனங்கள், இஸ்லாமிய இயக்கங்கள், புத்திஜீவிகள், துறை சார்ந்தவர்கள் உள்ளடக்கியதாக ஒரு தேசிய



மட்ட சபை உருவாக்கப்படும். அதன் கீழ் ஒரு நிறைவேற்றுக் குழு செயற்படும். அதனுடன் சேர்ந்து செயலகம் ஒன்றும் செயற்பட இருக்கின்றது. அந்த செயலகத்துக்கும் கீழ் பல்வேறு இணைக் குழுக்கள் உருவாக்கப்படும்.

உதாரணமாக, பொருளாதாரம், கல்வி, சட்டம், கலாசார, மத விவகாரங்கள், வறுமை ஒழிப்பு, ஊடகம், சகவாழ்வு ஏனைய சமூகத்துடனான உறவு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் என்று பல குழுக்களாக அந்த செயலகம் செயற்படும்.

அதேநேரம் பிராந்திய மட்டத்திலான ஒரு சபையும் கிராம மட்டத்திலான சபைகளும் உருவாக்கப்படும். எனவே, மேலே எடுக்கப்பட்ட கொள்கைகளை, தீர்மானங்களை தேசிய ஷூரா சபையில் அங்கத்துவம் பெறுகின்ற அனைவருடைய கருத்துக்களையும் உள்வாங்கி நிறைவேற்றுக் குழுவின் ஊடாக கீழ் மட்டத்திற்கும் கொண்டு சென்று அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இங்கு காணப்படுகின்றன. இங்கு பிராந்திய ஷூராக்களினதும் கிராம மட்ட சூராக்களினதும் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கும்.

அதேநேரம், இந்த தேசிய ஷூரா கட்டமைப்பில் தேசிய ரீதியாக வலையமைப்பைக் கொண்டிருக்கின்ற ஜம்இயதுல் உலமா போன்ற அமைப்புகள் ஊடாகவும் விடையங்கள் முன்னெடுத்துச் செல்லப்படலாம். அதேபோன்று, இஸ்லாமிய தஃவா அமைப்புக்கள், சமூக நிறுவனங்கள், சிவில் தலைமைத்துவங்கள் ஊடாகவும் தீர்மான விடையங்கள் கீழ் மட்டத்திற்குக் கொண்டு செல்லக்கூடியஏற்பாடு இங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே, எடுக்கப்படுகின்ற கொள்கைகளை, தீர்மானங்களை எந்தெந்தத் தரப்பினூடாக கொண்டு செல்லப்பட வேண்டுமோ அதற் குரிய அனைத்து வழிமுறைகளையும் இந்தப் பொறிமுறையில் உருவாக்கியிருப்பது மிகவும் முக்கியமாகும்.

**எங்கள் தேசம்: சமூகத்தில் இனி ஒரு பிரச்சினைக்கு தீர்மானம் எடுப்பதாக இருந்தால் அது தேசிய ஷூரா அமைப்பிலிருந்து எடுப்பதற்கான ஏற்பாடுகள், அதற்கான அதிகாரம் தேசிய ஷூரா சபைக் கு உள்ளதா?**

**நஜா முஹம்மத்:** தேசிய சூரா சபை, ஜம்இய்யதுல் உலமாவையும் முஸ்லிம் கவுன்சிலையும் ஏனைய அமைப்புகளையும் இயக்கங்களையும் துறை சார்ந்தவர்களையும் உள்ளடக்கியதான ஒரு பொறிமுறையே.

எனவே, இந்த தேசிய ஷூரா சபை பல்வேறு இயக்கங்களின், அமைப்புகளின் தலைமைத்துவத்திலிருக்கின்ற அதிகாரபூர்வமாக தீர்மானங்களை எடுக்கக் கூடியவர்களை உள்ளடக்கியிருக்கும். எனவே, அங்கு எடுக்கின்ற தீர்மானத்தில் எல்லோருக்கும் பங்கிருக்கின்றது. எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கு எல்லோரும் கட்டுப்பட வேண்டும் என்ற சூழ்நிலையும் அங்கு ஏற்படுத்தப்படுகின்றது.

எனவே, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சமூகத்தின் முக்கிய விவகாரங்களில் தீர்மானங்களை எடுக்கின்றபோது அங்கு கூட்டுத் தலைமைத்துவம் ஒன்றும் கூட்டாக முடிவெடுக்கின்ற ஒரு நிலையும் காணப்படுகின்றது. எனவே, தீர்மானங்களும் முடிவுகளும் அதிகார பூர்வமானதாகவும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்; இருக்க வேண்டும் என்பதுதான் ஷூரா சபையினுடைய எதிர்பார்ப்பாகும்.

**எங்கள் தேசம்: இனங்களுக்கிடையிலான நல்லுறவை ஏற்படுத்துவதற்கு தேசிய ஷூரா சபை எவ்வகையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்?**

**நஜா முஹம்மத்:** யுத்தத்திற்கு பிற்பட்ட கால சூழலில் இனங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவிப்பதில் வெளி சக்திகளின் தலையீடு இருப்பதை உணர முடிகிறது. இந்த சக்திகளின் பிரதான உபாயமாக இருப்பது சமூகங்களிடையே பிளவை ஏற்படுத்துவதாகும். பிரித்தாளும் தந்திரத்தை சமூகத்தின் பல விடயங்களிலும் பயன்படுத்தி நாடுகளுக்கிடையேயும் சமூகங்களுக்கிடை

**தேசிய ஷூரா சபை இன நல்லுறவுக்கு ஒரு காத்திரமான பங்களிப்பைச் செய்யும். இது முஸ்லிம் சமூகத்திற்குரிய விவகாரங்களில் மாத்திரம் கவனம் செலுத்துகின்ற ஷூராவாக அன்றி, இந்த நாட்டிற்கெதிராக வருகின்ற சவால்களை அடையாளம் கண்டு நாம் எல்லோரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்துக்குள் ஒற்றுமைப் படுத்துகின்ற முக்கியமான பணியை தேசிய ஷூரா சபை மேற் கொள்ளும்.**

**உலமாக்களும் புத்திஜீவிகளும் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளும்தான் இந்த ஷூரா சபையில் அங்கத்துவம் பெற்று தீர்மானம் மற்றும் முடிவுகளை எடுப்பார்கள். அரசியல் தலைமைத்துவத்தைக் கொண்டவர்கள் இந்தக் கட்டமைப்புக்குள் எப்படி வருவார்கள் என்றால் அரசியல் சார்ந்த அல்லது அரசியல் தலைமைத்துவத்தாலேயே சமூகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்கின்ற விடயங்களைப் பற்றிய தீர்மானங்கள், கொள்கைகள் வகுக்கின்றபோது ஆலோசனைகள் உள்வாங்கப்படும். அதேநேரம் எடுக்கின்ற தீர்மானங்களை அரசாங்க மற்றும் அரசியல் கட்சிகளுக்கு எடுத்துச் செல்வதற்க அரசியல் தலைமைத் துவங்களினுடைய உதவி பெறப்படும்.**

*நேர்காணல்: ஏ. முஹம்மத் பாயிஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேயும் பிளவுகளை, மோதலை ஏற்படுத்துகிறார்கள்.

தேசிய ஷூரா சபை இன நல்லுறவுக்கு ஒரு காத்திரமான பங்களிப்பைச் செய்யும். இது முஸ்லிம் சமூகத்திற்குரிய விவகாரங்களில் மாத்திரம் கவனம் செலுத்துகின்ற ஷூராவாக அன்றி, இந்த நாட்டிற்கெதிராக வருகின்ற சவால்களை அடையாளம் கண்டு நாம் எல்லோரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்துக்குள் ஒற்றுமைப் படுத்துகின்ற முக்கியமான பணியை தேசிய ஷூரா சபை மேற்கொள்ளும்.

**எங்கள் தேசம்: தேசிய சூரா சபையில் அரசியல் தலையீடுகள் காணப்படுமா?**

**நஜா முஹம்மத்:** இந்த ஷூரா சபைக்கு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் போன்ற தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தற்போதைக்கு உள்வாங்கப்படமாட்டார்கள்.

எனவே, உலமாக்களும் புத்திஜீவிகளும் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளும்தான் இந்த ஷூரா சபையில் அங்கத்துவம் பெற்று தீர்மானம் மற்றும் முடிவுகளை எடுப்பார்கள். அரசியல் தலைமைத்துவத்தைக் கொண்டவர்கள் இந்தக் கட்டமைப்புக்குள் எப்படி வருவார்கள் என்றால் அரசியல் சார்ந்த அல்லது அரசியல் தலைமைத்துவத்தாலேயே சமூகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்கின்ற விடயங்களைப் பற்றிய தீர்மானங்கள், கொள்கைகள் வகுக்கின்றபோது அவர்களுடைய ஆலோசனைகள் உள்வாங்கப்படும். அதேநேரம் எடுக்கின்ற தீர்மானங்களை அரசாங்க மற்றும் அரசியல் கட்சிகளுக்கு எடுத்துச் செல்வதற்க அரசியல் தலைமைத் துவங்களினுடைய உதவி பெறப்படும்.

எனவே, இந்த கட்டமைப்புக்குள் நேரடியாக மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்ற அரசியல் தலைமைகள் உள்வாங்கப்படமாட்டாது. ஆனால், அரசியல் ரீதியாக செயற்படுகின்ற அரசியல் செயற்பாட்டாளர்கள், அரசியல் அறிஞர்கள் இந்த அமைப்புக்குள் உள்வாங்கப் படுவார்கள்.

**எங்கள் தேசம்: பொது பல சேனாவின் செயற்பாடுகள் தொடர்பில் தேசிய ஷூரா சபையின் கருத்து என்ன?**

**நஜா முஹம்மத்:** பொது பல சேனா என்பது பெரும்பான்மை சமூகத்தில் இருக்கின்ற ஒரு தீவிரவாத அமைப்பு. இவ்வாறான அமைப்புகள் காலத்துக்குக் காலம் தொடர்ந்தும் நாட்டில் இருந்து வந்திருக்கின்றன. அவை உருவாகி மறைந்து வந்திருக்கின்றன. எனவே, இந்த பொது பல சேனாவின் பிரச்சினை என்பது நாங்கள் சமகாலத்தில் எதிர் கொள்ள வேண்டிய ஒரு சவால். ஆனால், இந்தப் பிரச்சினையை மையப்படுத்தித்தான் தேசிய ஷூரா சபையின் செயற்பாடுகள் அமையும் என்பது இல்லை. தேசிய ஷூரா சபையின் செயற்பாடுகளில் அதுவும் சிறியதொரு அம்சமாக இருக்கலாம். ஆனால், அதைவிட நீண்ட காலத்தில் செயற்பட வேண்டிய திட்டமிட வேண்டிய பல விவகாரங்கள் இருக்கின்றன.

எனவே, இந்த பொது பல சேனாவுக்கு பதில் சொல்வதாக அல்லது பொது பல சேனாவின் பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கான ஒரு குறுகிய அல்லது வரையறுக்கப்பட்ட நோக்கத்தைக் கொண்டதாக இந்த தேசிய ஷூரா அமையமாட்டாது. இது எதிர்காலத்தில் திட்டமிட்டுச் செயற்படக் கூடிய பரந்த நோக்கத்தைக் கொண்ட அமைப்பாக செயற்படும்.

**எங்கள் தேசம்: தேசிய ஷூரா சபைக்கு முன்னர் முஸ்லிம்களுக்காக பல அமைப்புகள் உருவாகி செயற்பட்டு வருகின்றன. இந்நிலையிலேயே தேசிய சூரா சபையும் தற்பொழுது உருவாகியிருக்கிறது. இவ்வாறு உருவாகுவதற்கு கடந்த காலங்களில் நீங்கள் காண்கின்ற குறைபாடுகள் என்ன?**

**நஜா முஹம்மத்:** நாடு தழுவிய தேசிய கட்டமைப்பு உருவாக வேண்டுமென்ற சிந்தனை முஸ்லிம்களிடத்தில் மிக நீண்ட காலமாக இருந்து வருகின்ற ஒரு கருத்தியல். இதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் செயல் வடிவம் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, 1983 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தமிழ்-சிங்கள இன முரண்பாட்டைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்துக்கும் பல அச்சுறுத்தல்கள் ஏற்படலாம் அல்லது இத்தகைய சூழ்நிலை ஏற்படலாம் என்று கூறி அக்காலத்தில் இருந்த உலமாக்கள், புத்திஜீவிகள், ஆர்வலர்கள் 'இத்திஹாதுல் முஸ்லிமீன்' என்றதொரு அமைப்பைத் தோற்றுவிப்பதற்கு முயற்சித்திருக்கின்றார்கள்.

(20ம் பக்கம் பார்க்க)

# ஷூரா கவுன்சிலை பொதுமக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

*லதீப் பாரூக், சிரேஷ்ட ஊடகவியலாளர்*

இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு சவால்களை எதிர் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் ஷூரா கவுன்சில் போன்ற ஓர் அமைப்பின் தேவை இன்றியமையாதது.

ஏனென்றால், இன்று முஸ்லிம்கள் எதிர் கொண்டிருக்கும் சில சக்திகளின் திட்டமிட்ட சவால்களுக்கு முகம் கொடுக்க முஸ்லிம் சமூகம் நம்பியிருக்கும் இரு பிரதான பகுதியினருக்கு போதிய ஆளுமை இருப்பதாகத் தெரியவில்லை. முதலாவது உலமாக்கள், அடுத்து முஸ்லிம் அரசியல்வாதிகள் முதலானோரே அந்த இரு பகுதியினருமாவர்.

உலமாக்கள் மார்க்க அறிவைப் பெற்று மார்க்க ரீதியில் சமூகத்தை வழிநடத்தும் போதிய திறமையைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அவ்வப்போது எழுகின்ற முஸ்லிம்களுக்கு எதிரான நவீன திட்டமிட்ட சவால்களை முறியடிக்கப் போதுமான நவீன அணுகுமுறைகள் அவ்வளவு தூரத்திற்குப் இல்லை என்றே கூற வேண் டியிருக்கிறது.

சமூகம் நம்பியிருக்கின்ற நமது அரசியல்வாதிகளின் நிலையை சொல்லித்தான் அறிய வேண்டும் என்றில்லை. அவர்கள் சமூகத்தையே விற்றுப் பிழைக்கும் வேலையை செய்து கொண்டிருக்கிறார்கள்.

எனவே, சமூகத்திலுள்ள புத்திஜீவிகளை ஒன்றிணைத்த சிறந்த தலைமைத்துவம் ஒன்றின் கீழான ஓர் அமைப்பின் இவ்வாறான மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

இன்று நிலவுகின்ற அமைதியைப் பார்த்து முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான வீச்சலைகள் ஓய்ந்து விட்டதாகக் கருதி விட முடியாது. இது வெறுமனே ஓரிருவரால் ஓரிரு குழுக்களால் அரங்கேற்றப்படுவதல்ல. சர்வதேசத்தின் பாரிய திட்டமிடலுடனும் உதவியுடனும் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கையாகும்.

இன்று முஸ்லிம் சமூகம் வறுமை மற்றும் அறியாமை எனும் இரு கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த இக்கட்டான சூழ்நிலைகளை வைத்தே இவர்கள் தாக்கப்படுகின்றனர்.

எனவே, பிரிந்திருந்து காலம் கடத்தியது போதும். புத்திஜீவிகளும் சிவில் சமூக அமைப்புகளும் இஸ்லாமிய இயக்கங்களும் பொதுமக்களும் இணைந்து முஸ்லிம் சமூகத்திற்கெதிரான சவால்களை முறியடிக்க வேண்டிய காலம் வந்திருக்கிறது.

இதன் ஆரம்பப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல உதயமாகியிருக்கும் ஷூரா கவுன்சிலை பொதுமக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கான ஆற்றல்மிகு தலைமைத்துவமொன்றும் அதனை வழிநடத்த வேண்டும்.

# ஷூரா கவுன்சில் அரசாங்கத்துடன் இணைந்த வகையில் முஸ்லிம்களது பிரச்சினைகளை தீர்க்கும் பொறிமுறைகளையே கையாள வேண்டும்

*மௌலவி ஹஸ்புள்ளாஹ், தலைவர் ஷரீஆ கவுன்சில்*

வரலாற்றில் என்றுமில்லாதளவு முஸ்லிம் சமூகம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. முஸ்லிம்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமையின்மையும் பிளவுகளும் இறைவனுடனான தொடர்பிலுள்ள குறைபாடுகளுமே இதற்குக் காரணம் எனலாம்.

இன்னொரு புறம், முஸ்லிம்கள் கல்வியிலும் வியாபாரத்திலும் பின்னடைவு கண்டு வருகின்றனர். பிரபலமான சிங்களப் பாடசாலைகளில் முஸ்லிம் மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றன. முஸ்லிம் மாணவிகளும் ஆசிரியைகளும் ஹிஜாப் அணிந்து பாடசாலைகளுக்கு செல்வதில் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர். முஸ்லிம் பெண்கள் அணியும் ஹிஜாபை ஒழித்துக்கட்ட வேண்டும் என சில தீய சக்திகள் களத்தில் குதித்துள்ளன. முஸ்லிம் பெண்களின் ஆடை அல்லாஹ்வால் சொல்லப்பட்ட, இஸ்லாம் வலியுறுத்துகின்ற ஆடைக் கலாசாரம். அதனை விட்டுக் கொடுக்க முடியாது.

கடந்த 30 வருட யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் அமைதியை ஏற்படுத்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சியில் சேறுபூச நினைக்கும் சக்திகள் சில இப்பிரச்சினைகளின் பின்னணியில் இருப்பது தெரிகிறது.

இன்று நாட்டின் அபிவிருத்திக்காக பல முஸ்லிம் நாடுகள் அள்ளி இறைக்கின்றன. மத்திய கிழக்கு நாடுகள் உட்பட முஸ்லிம் நாடுகளில் இலங்கைத் தொழிலாளர்கள் கௌரவமாக வேலை செய்கிறார்கள். இதையெல்லாம் சகித்துக் கொள்ளாத சில சக்திகளே இதன் பின்னணியில் உள்ளனர்.

ஆனால், சாதாரண சிங்கள மக்களும் பல பௌத்த மத குருமார்களும் முஸ்லிம்கள் குறித்தும் அவர்களுடைய ஆடைக் கலாசாரம் குறித்தும் ஹலால் உணவு குறித்தும் நல்ல கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமை மகிழ்ச்சி அளிக்கிறது.

எனவே, இப்படியான ஒரு காலப் பின்னணியில் முஸ்லிம் சமூகத்தை வழி நடத்தும் பொதுவாக நாட்டுக்கு சேவை செய்யும் ஷூரா கவுன்சில் போன்ற ஓர் அமைப்பின் தேவை இன்றியமையததாகும்.

இலங்கை முஸ்லிம்கள் எந்தக் காலத்திலும் நாட்டை ஆட்சி செய்த எந்தவொரு அரசாங்கத்துக்கும் துரோகமாக செயற்பட வில்லை. நமது வரலாறுகளைப் பார்த்தால் நாம் அனைத்து அரசாங்கத்திற்கும் ஒத்துழைப்பு வழங்கி, இணங்கியே சென்றிருக்கிறோம். உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஷூரா கவுன்சிலின் செயற்பாடுகளும் அரசாங்கத்துடன் இணைந்த வகையில் முஸ்லிம்களது பிரச்சினைகளை தீர்க்கும் பொறிமுறைகளையே கையாள வேண்டும்.

# ஜம்இய்யதுல் உலமாவின் வழிகாட்டலில் புத்திஜீவிகளை உள்ளடக்கிய அமைப்பு உருவாக்கப்படுவது காத்திரமாக இருக்கும்

*மௌலவி ஆதம்பாவா, தலைவர்- அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா- அம்பாரை கிளை*

முஸ்லிம்களுக்கெதிரான சவால்களையும் முஸ்லிம் சமூகத்துக்குள்ளேயே இருக்கின்ற பிரச்சினைகளையும் எதிர் கொள்ள புத்திஜீவிகளை உள்ளடக்கிய நுற்பம், அறிவு, ஆன்மிகப் பலத்துடனான கூடிய அமைப்பொன்று தேவை என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை.

ஆனால், இன்று தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஷூரா கவுன்ஸில் இந்நோக்கத்தை நிறைவேற்றுமா என்பதில் கேள்விகள் இருக்கவே செய்கின்றன. ஏனென்றால், ஷூரா கவுன்சில் அமைக்கப்படும் பட்சத்தில் அதற்கென ஒரு தலைமைத்துவம் இருக்க வேண்டும். குறித்த இந்த தலைமைத்துவத்தை சமூகம் எந்தளவு அங்கீகரிக்கும் என்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். எனவே, சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான தலைமைத்துவம் ஒன்றின் கையில் ஷூரா கவுன்சில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

எனவே, இலங்கை முஸ்லிம் சமூகத்தால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள ஜம்இய்யதுல் உலமாவின் வழிகாட்டலில் ஏனைய இஸ்லாமிய இயக்கங்கள் சிவில் சமூக அமைப்புகள், புத்திஜீவிகளை உள்ளடக்கிய அமைப்பு உருவாக்கப்படுவது காத்திரமாக இருக்கும்.

இன்று முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான எந்தவொரு பிரச்சினை வந்தாலும் குறிப்பிட்ட ஒரு சிலரே அதனைத் தலைக் கெடுத்து ஓடித் திரிகின்றனர். சமூகத்திலுள்ள பெரும்பாலான புத்திஜீவிகள் ஒதுங்கியே இருக்கின்றனர். எனவே, இவர்களை உள்வாங்கி சமூகத்தின் நலவுக்காகப் பயன்படுத்துவதற்கு இவ்வாறான அமைப்பொன்றின் தேவை இன்றியமையாததாகும்.

இன்னொரு புறம் குறித்த ஷூரா சபை அமைக்கப்படும் பட்சத்தில் சமூகத்தில் முன்றாம் தரப்பான அரசியல்வாதிகளின் வகிபங்கு அதில் எப்படி இருக்கும் என்பதும், அவர்களை எப்படிப் பயன்படுத்தப் போகிறோம் என்பதும் தெளிவாக இருக்க் வேண்டும்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தின் பிரசன்னமும் அங்குள்ள அரசியல்வாதிகளின் நிலையும் ஏனைய பிரதேசங்களைவிட வித்தியாசமானவையாக காணப்படுவதால் இது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: அலா அஹமதி

# புடினும் அவரது மனைவியும் விவாகரத்து



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் அவரது பாரியாரான லை யூட்மிக் உம் சேர்ந்து தமது விவாகரத்தை 30 வருட திருமண வாழ்வின் பின் அறிவித்துள்ளனர்.

இது எமது இருவரினதும் கூட்டு முடிவாகும் என 60 வயதை எட்டியுள்ள புடின் தேசிய தொலைக்காட்சியில் தெரிவித்தார்.

28 ஜூலை 1983இல் புடின் லையூட்மிக் ஆகிய இருவரும் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். இவர்களுக்கு மரியா (24 வயது), யேகாடரினா (26 வயது) என்ற இரண்டு பெண் மக்களும் உள்ளனர்.

# ஆப்கான் உயர் நீதிமன்றத்தை இலக்கு வைத்து தற்கொலை குண்டுத் தாக்குதல்

ஆப்கானிஸ்தான் காபுல் நகரில் உயர் நீதிமன்ற அதிகாரிகளை ஏற்றி வந்த பஸ் வண்டியுடன் தற்கொலையாளி மோதியதில் 17 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 40 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கத் தகவல் தெரிவிக்கின்றது.

மேற்படி அதிகாரிகளை ஏற்றி வந்த பஸ் வண்டியானது அமெரிக்க தூதுவராலயத்திற்கு அருகில் வரும்போதே தற்கொலைதாரி வெடி குண்டுடன் கொண்டு வந்த தனது வாகனத்தை பஸ் வண்டியுடன் மோதி வெடிக்கச் செய்துள்ளதாக குற்றப் புலனாய்வு தலைமை அதிகாரி முஹம்மத் ஸாஹிர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் சர்வதேச விமான நிலையத்திற்குச் செல்வதற்கான வீதியில் ஐக்கிய அமெரிக்க தூதுவராலய கட்டிடத்துக்கு மிக அண்மையிலேயே இடம் பெற்றுள்ளது.



# டுவிட்டரில் குவைத் மன்னருக்கெதிராக செயற்பட்ட பெண்ணுக்கு சிறைத் தண்டனை

அண்மையில் குவைத் நீதிமன்றம் பெண்ணொருவருக்கு 11 வருட சிறைத் தண்டனைத் தீர்ப்பை வழங்கியது. குவைத் அமீருக்கு எதிராக அவமரியாதையாகவும் அவரது ஆட்சி முறைமைக்கு எதிரான கருத்துக்களை டுவிட்டரில் பதிவு செய்தமையே இத்தீர்ப்புக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

குதா அல்அஜ்மி என்ற 37 வயதான ஆசிரியையே இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டவர். அவர் சபாஹ் அல்அஹ்மத் அல்ஸபா ஷெய்க்இற்கு எதிராக அவமரியாதையான கருத்துக்களைப் பதிவு செய்தமையே இத்தீர்ப்புக்கு காரணமாகும்.

குவைத்தில் இது போன்று பெண்கள் அரசியல் குற்றங்கள் மூலம் சிறை செல்வது அரிதாகும். இந்த சம்பவத்தின் முன் இரண்டு பெண் செயற்பாட்டாளர்கள் நீதிமன்றத்தால் சிறைத் தீர்ப்பு அளிக்கப்பட்டனர். ஆனால், அத்தீர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் அமீருக்கு எதிராக அவமரியாதையாக நடந்தார் என்று எதிர் அரசியல்வா திக்கும் ஐந்து வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு பின் மேல் நீதிமன்றம் அத்தீர்ப்பை நீக்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமை கண்காணிப்பகம் (Human Rights Watch) பெப்ரவரியில் 25 பேர் அளவில் அமீருக்கு எதிராக செயற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகவும் அவ்வமைப்பு தெரிவிக்கின்றது.

# சட்டவிரோத சுரங்கத் தொழிலில் ஈடுபட்ட சீனர்கள் கானாவில் கைது



161 சீனர்கள் சட்டவிரோதமாக சுரங்கத் தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டின் காரணதால் கானா பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக சீனத் தூதரகம் தெரிவித்தது.

அவ்வாறு கைதானவர்கள் சீனாவுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள் என கானாவின் குடியேற்ற காரியாலயம் சார்பாக பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கானா சுரங்க காரியாலயத்தின் சமூக உறவு அதிகாரியான இஸாக் கோஜோ ஆப்ரஹாம் இது பற்றிக் கூறுகையில்; இவர்கள் அனைவரும் தேவையான ஆவணங்கள் இல்லாத நிலையில் சட்டவிரோதமாக சுரங்கத் தொழிலில் ஈடுபட்டவர்கள் எனக் கூறினார்.

கானா நீதிமன்றத்தால் இவர்களுக்கு தண்டப் பணமும் விதிக்கப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

கானா, ஆபிரிக்காவில் தங்க சுரங்கத் தொழிலில் இரண்டாவது இடத்தை வகிப்பதுடன், 2011இல் தங்க ஏற்றுமதி மூலம் 4.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டியதும் குறிப்பிடத்தக்கது.

2011இல் 14% பொருளாதர வளர்ச்சியையும் கானா அடைந்தது. தங்கம், கொக்கோ மற்றும் எண்ணெய் உற்பத்திகளே இந்த வளர்ச்சிக்கு மிக முக்கிய காரணங்களாகும்.

# ஈராக் குண்டுத் தாக்குதல் 48 பேர் பலி

கடந்த வாரம் ஈராக் மௌஸூல் நகரில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 48 பேர் இறந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதலில் பெரும்பாலும் ஸூன்னி முஸ்லிம்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத் தாக்குதல் குறித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறும்போது, பாதுகாப்பு கட்டமைப்பு மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மீது 4 குண்டுத் தாக்குதல்கள் இலக்கு வைக்கப்பட்ட நிலையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாக தெரிவித்தார்.

இக் குண்டுத் தாக்குதலில் இறந்தவர்களில் 3 ஆயுத தாரிகளும் அடங்குவதுடன், பொதுமக்கள் 80 பேரளவில் காயம் அடைந்துள்ளனர்.

இத்தாக்குதலுக்கு முதல் நாள் மத்திய ஈராக்கில் உள்ள இரு சந்தைக் கட்டிடங்களில் 2 கார் குண்டுகள் வெடித்துள்ளன. இவ்வெடிப்பில் 22 பேர் இறந்ததுடன் 30 பேர் பலத்த காயத்திற்குள்ளாகினர்.

ஈராக்கின் ஷீயா தலைவர்களுக்கும் சிறுபான்மை ஸூன்னி முஸ்லிம்களுக்குமிடையே அரசியல் குழப்பங்கள் அதிகரித்து வருவதால் அங்கு தொடர்ந்தும் குண்டுத் தாக்குதல் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. நா. சபை கணிப்பீட்டின்படி, கடந்த மே மாதத்தில் குறைந்தது 1045 ஈராக் பிரஜைகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் ஏப்ரலில் இத்தொகை 712 எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வதேசம்

# 'அந்நக்பா' 65ஆவது வருட நிறைவும் உள்ளக அரசியல் விரிசல்களும்

அந்நக்பா என்ற அரபுப் பதம் பேரழிவு என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், மத்திய கிழக்கு அரசியல் பரிபாசையில் 1948ஆம் ஆண்டு பலஸ்தீன முஸ்லிம்கள் தமது சொந்த நிலத்திலிருந்து நிராயுதபாணியாக விரட்டியடிக்கப்பட்ட நிகழ்வைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. மேலும், 1967இல் இடம்பெற்ற அரபு - இஸ்ரேலிய யுத்தத்தில் இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்ட மேலதிக நிலத்திலிருந்து பலஸ்தீன மக்கள் வெளியேற்றப்பட்டமை உட்பட, அப்போது இஸ்ரேலிய இராணுவத்தால் அரங்கேற்றப்பட்ட இனச் சுத்திகரிப்பையும் இச்சொல் குறிக்கிறது. இந்த ஜுன் மாதத்துடன் பலஸ்தீன மண் ஆக்கிரமிக்கப்பட்டு அறுபத்து ஐந்து வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. மறுபுறத்தில், பலஸ்தீனப் பிரச்சினையை வெற்றி கொள்வதில் அரபு முஸ்லிம் நாடுகளின் பிரயத்தனங்களின் முன்னேற்றத்தை திரும்பிப் பார்த்தால், தொடர்ந்தும் கையறு நிலைதான் தென்படுகிறது.

அரபு வசந்தம் பலஸ்தீனப் பிரச்சினை தொடர்பாக ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றை உள்ளங்களில் பாய்ச்சியது உண்மை. அரபு வசந்தத்தைத் தொடர்ந்து நிகழ்ந்த பலஸ்தீனுக்கான சர்வதேச அரசியல் விற்பன்னர்களின் விஜயங்கள், பலஸ்தீனம் தொடர்பான முஸ்லிம் உம்மத்தின் அபிலாஷைகள் சர்வதேசமயப்படுத்தப்பட்டதும் உண்மை. இவையெல்லாம் அரபு வசந்தம் பலஸ்தீனப் பிரச்சினைக்கு அளித்த பெரும் திருப்பு முனைகள், மைற்கற்கள். ஆனால், பலஸ்தீனத்தின் உள்ளக நிலைமைகளை நுணுக்கமாக அவதானிக்கும்போது, பலஸ்தீனப் பிரச்சினை தொடர்ந்தும் அதற்காகப் போராடும் குழுக்களுக்கு மத்தியில் பிளவை ஏற்படுத்தும் ஒரு காரணியாக தொடர்ந்திருப்பது கவலையளிக்கும் விடயமாகும். அரசியல் விமர்சகர் அபூபிராஸ் பலஸ்தீனப் பிரச்சினையை எவ்வாறு அணுகுவது என்ற அம்சம் இன்று பெரும் பிரச்சினையாக மாறியிருப்பதுதான் இன்றைய பிரச்சினை என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

இன்றைய பலஸ்தீன் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கிறது. அதில் முதல் அம்சம், பலஸ்தீனின் அதிகாரம் தொடர்பாக ஹமாஸ் மற்றும் பதாஹ் அமைப்புகளுக்கு இடையில் காணப்படும் கருத்து மோதலாகும். அண்மையில், ஹமாஸ்-பதாஹ் இயக்கங்களுக்கு மத்தியில் ஓர் உடன்பாட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தம் எகிப்தின் தலைமையில் கைரோவில் இடம்பெற்றது. இந்த ஒப்பந்தத்தை சீரியஸாக பின்தொடரப் போவதாக எகிப்திய அரசு அறிவித்து அதில் ஓரளவு வெற்றியும் கண்டது.

**பலஸ்தீனர்கள் முழு நாட்டு சனத்தொகையில் 49 வீதமாக வாழ்கின்ற அதேவேளை பலஸ்தீன நிலத்தில் வாழும் யூதர்கள் நாட்டில் 51வீதம் என கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் பலஸ்தீன் நிலத்தில் 85வீத நிலப்பரப்பில் வாழ்கின்றனர். ஒரு பலஸ்தீனுக்கு கிடைக்கும் சராசரி இடப் பெறுமானம் ஐந்து அடிகள் மட்டுமேயாகும்.**

ஆனால், அவ்வப்போது, மஹ்மூத் அப்பாஸ் தலைமையிலான பதாஹ் அமைப்பினர் தனது மேற்கு சார்புக் கொள்கையை விட்டுக் கொடுக்க தயாரில்லை என்ற செய்தியை வெளிப்படுத்தி வருவதால், உடன்படிக்கை ஒரு தேக்க நிலையை அடைந்து வருகின்றமை நோக்கத்தக்கது. குறிப்பாக, அண்மையில் பலஸ்தீனின் பிரதமராக இருந்த ஸலாம் பயால் இராஜிநாமா செய்தார். அவர் தனது பதவியை பயன்படுத்தி நிதி மோசடியில் ஈடுபட்டதாக பதாஹ் அமைப்பினர் காரணமும் கூறினர்.

அவரின் இராஜிநாமாவைத் தொடர்ந்து மஹ்மூத் அப்பாஸ் தன்னிச்சையாக புதிய ஓர் அமைச்சரவையை அறிவித்ததுடன், புதிய பிரதமரொருவரையும் நியமித்தார். இந்த தன்னிச்சையான நியமனம் காஸாப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஹமாஸை சினமூட்டியது. புதிய பிரதமர் நியமனம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என ஹமாஸ் தெளிவாக அறிவித்தது. அவரின் அரசு உத்தியோகபூர்வமற்ற சபை என உறுதிப்படுத்தியது. பலஸ்தீன அரசியல் பகுப்பாய்வாளரான ஜோர்தான் பல்கலைக்கழக பேராசிரியர் அப்துல் காஸிம் சத்தார், தெளிவாக பலஸ்தீன் எதிர்கொள்ளும் அவ்வதிகாரப் பிரச்சினையின் மையத்தை பட்டவர்த்தனமாக தொட்டுக் காட்டுகிறார்.



மஃமூத் அப்பாஸ் தலைமையிலான பதாஹ்வே பலஸ்தீனத்தின் அனைத்து பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமாகும். ஏனென்றால், பதாஹ்வை எப்போதும் ஒரு சங்கடம் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. பலஸ்தீனப் பிரச்சினைக்கான தீர்வை ஆராயும்போது, பலஸ்தீன மக்களினதும் அரபு முஸ்லிம் மக்களினதும் எதிர்பார்ப்புகளுக்கு முக்கியத்தும் அளிப்பதா? அல்லது தான் அமெரிக்காவுடனும் இஸ்ரேலுடனும் போட்டுக் கொண்ட உடன்படிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதா? என்பதே அந்த சங்கடம். பெரும்பாலும் பெற்ற பணத்துக்கு நன்றியுடன் இருக்க வேண்டும் என்பதற்காக இரண்டாவதையே பதாஹ் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. இதனால், பலஸ்தீன மற்றும் அரபு இஸ்லாமிய உம்மத்தின் எதிர்பார்ப்புகளுக்கு முக்கியத்தும் அளிக்கும் ஹமாஸுடன் மோத வேண்டிய, அதன் நடவடிக்கைகளுக்கு எதிராக கீழறுப்பு வேலைகளில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் பதாஹ்விற்கு ஏற்படுகிறது என்கிறார் பேராசிரியர் சத்தார்.




உண்மையில், பலஸ்தீன் இன்று எதிர் கொள்ளும் முதன்மை சவால் இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை மீட்டுதல் என்பதைவிட, பதாஹ்வினால் ஏற்பட்டிருக்கும் உள்ளக அரசியல் விரிசல் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. பதாஹ்வின் இத்தகைய இரட்டை முக செயற்பாடுகளால் பலஸ்தீன மக்கள் இன்னும் ஆழமான பாதாளத்தில் விழும் நிலையே காணப்படுகிறது. சுருங்கச் சொன்னால், பலஸ்தீன் எதிர் கொள்ளும் ஏனைய அனைத்து பிரச்சினைகளும் பதாஹ்வின் போலி நாடகத்தால் ஏற்படும் விளைவுகளே எனலாம்.

### இஸ்ரேலின் குடியேற்றத் திட்டங்கள்

அந்நக்பா நிகழ்வு 65வது வருடத்தை

(18ஆம் பக்கம் பார்க்க)

ஸகி பவுஸ் (நளீமி)
விரிவுரையாளர் இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தேசம்



## அற்புதத் திருமறை



கி.பி. 1933 ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டில், அந்நாட்டு மியுனிச் பல்கலைக்கழகத்தில் அல்குர்ஆனை ஆய்வு செய்வதற்கான ஒரு சபை நிறுவப்பட்டது.

இந்த குர்ஆன் ஆய்வுப் பிரிவினர் உலகத்தில் விதர்ப்பமான நாடுகளில் பெறப்பட்ட அல்குர்ஆனுடைய மிகவும் பழமையான பிரதிகளை ஒன்று சேர்த்தனர். அதில் சில குர்ஆன் பிரதிகள் மூன்றாம், நான்காம், ஐந்தாம் நூற்றாண்டிற்குரியவை. இவ்வாறாக உலகளவில் இருந்த பல்வேறு நூதனசாலை மற்றும் நூலகங்களிலிருந்தும் பெறப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்டது. அல்குர்ஆனின் மூலப் பிரதிகள் உட்பட நகல் எடுக்கப்பட்ட பிரதிகளும் இதற்காக ஒன்று சேர்க்கப்பட்டன.

டாக்டர் பிரிக்ஷில் கூறுகிறார்: இவ்வாறாக சுமார் 42000 படிமையான அல்குர்ஆனுடைய பிரதிகளை ஒன்று சேர்த்தோம். அறிஞர்கள், ஆய்வாளர்களின் மிகப் பெரும் குழுவே இந்த ஆய்வை நடத்தியது. இந்த ஆய்வுக் குழு மிக நீண்ட காலமாக ஒப்பு நோக்கும் பணியில் ஒரு மிகப் பெரும் ஆராய்ச்சியில் ஈடுபட்டது. அல்குர்ஆன் வசனங்களுக்கு மத்தியில் ஏதேனும் ஓர் அமைப்பில் கருத்து வேற்றுமை அல்லது வித்தியாசம் உள்ளனவா? எனத் தீவிரமாக ஆராயப்பட்டன. இந்த ஆய்வுப் பணிக்கு பல வருடங்கள் பிடித்தன. இந்த ஆய்வுப் பணிகளுக்கு மத்தியில் இச்சபையின் மூலம் ஓர் இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டது.

"சுமார் 42000 பழமை வாய்ந்த அத்தனை அல்குர்ஆன் பிரதிகளில் வெறுமனே இரண்டே இரண்டு இடங்களில் தான் வித்தியாசம் தென்பட்டது. அதாவது 'பிஸ்மில் லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்ற வசனத்தில் இடம்பெறும் 'ரஹ்மான்' என்ற வார்த்தையில் மொழியப்படும் குறியீடு சிறியதாக எழுதப்பட்டிருந்தது. மற்றைய வேறுபாடு சில இடங்களில் 'அலிப் லாம்' உடைய எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தது. சில இடங்களில் அது எழுதப்படாமல் விட்டுவிடப்பட்டிருந்தது. சில இடங்களில் எழுத்து வடிவம் சற்று வித்தியாசமாக இருந்தது. ஆனால், அல்குர்ஆனின் வசனங்களுக்குரிய சொற்கள் அனைத்தும் எவ்வித வித்தியாசமுமின்றி நூற்றுக்கு நூறு ஒரே மாதிரியாக இருந்தது. அவற்றில் எந்தவித வித்தியாசங்களையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை." எனத் தெரிவித்தார்.

இறைவன் என்பவன் அனைத்து விடயங்களையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவன். அவனது ஆற்றல் எல்லையில்லாதது. அவனால் இயலாதது எதுவும் இல்லை. அவன் அனைத்துப் பொருட்களின் மீதும் சக்தி பெற்றவன். இப்படிப்பட்டவன்தான் இறைவன்.

எனவே, நாம் அனைவரும் பகுத்தறிவுள்ள மனிதர்கள். நாம் எது சரி, எது தவறு என்று புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். எனவே, எமது திருமறையான அல்குர்ஆனின் வசனங்களை ஆதாரமாகக் கொண்டு செயற்படுவதோடு அதன்படி வாழ்வையும் அமைத்துக் கொள்வோமாக!

ஏ. பாத்திமா றிகாஸா,
தேசிய பாடசாலை, சம்மாந்துறை.

## இவ்வார சிந்தனைக்கு

எங்கே நல்ல
புத்தகங்கள்
எரிக்கப்படுகின்றனவோ
அங்கே விரைவில்
நல்ல மனிதர்களும்
எரிக்கப்படுவர்

-சேகுவாரா-



## அலைகள்



கடலில் அலைகள் தோன்றுவதைப் போலவே ஏரிகளிலும் குளங்களிலும் கிணறுகளிலும் அலைகள் ஏற்படுவதுண்டு. ஆனால், இவற்றில் காணப்படும் அலைகள் வேகம் குறைந்த சிற்றலைகளாக, சக்தி குறைந்தவையாக இருக்கும். நீரின் கொள்ளளவிற்கும் பரப்பளவிற்கும் ஏற்பவே அலைகளின் வேகமும் சக்தியும் அமைகின்றன.

காற்று வேகமாக வீசும்போதும் புயலின்போதும் அலைகள் உயரமாக ஏற்படும். அலைகள் உருவாக காற்றைவிட வேறு சில காரணங்களும் உள்ளன.

வானில் உள்ள சூரியனும் சந்திரனும் பூமியைத் தம்பால் ஈர்க்கின்றன. இந்த ஈர்ப்பு விசையே அலைகள் உருவாகக் காரணமாகின்றன. பௌர்ணமி, அமாவாசை நாள்களில் கடலில் பேரலைகள் ஏற்பட்டு கடல் கொந்தளிப்பு உண்டாகும்.

இதற்குக் காரணம், பௌர்ணமி, அமாவாசை நாள்களில் சூரியனின் ஈர்ப்பு விசையும் சந்திரனின் ஈர்ப்பு விசையும் ஒரே நேரத்தில் அமைவதால் அலைகளும் பெருமளவில் தோன்றுகின்றன. இந்த நாள்களில் தென்னை மர உயரத்திற்குக்கூட கடல் அலைகள் எழும்பவும் செய்கிறது.

நில அதிர்ச்சி உண்டாகும்போதும் பூகம்பம் ஏற்படும்போதும் கடலுக்கு அடியில் உள்ள எரிமலைகள் வெடிக்கும்போதும் கடல் கொந்தளிப்பு ஏற்படும். அப்போது, கடல் அலைகளின் எழுச்சியும் அதிகமாக இருக்கும்.


எஸ். எம். சர்ஜுன்,
கமு/அல் ஜலால் வித்தியாலயம்,
சாய்ந்தமருது.

## உயரமான ஏரி

தென் அமெரிக்காவின் ஆண்டெஸ் மலையில் அமைந்துள்ள டிட்டிகா ஏரிதான் உலகத்திலேயே மிக உயரமான ஏரியாகும். இது கடல் மட்டத்திலிருந்து 4,000 மீட்டர் உயரத்திலுள்ளது.

இந்த டிட்டிகா ஏரி 220.8 கிலோ மீட்டர் நீளமும் 110.4 கிலோ மீட்டர் அகலமும் கொண்டதாகும். பல ஆறுகள் ஓடிச் சென்று இந்த ஏரியில் கலக்கின்றன. டெஸ் கவுடெரா என்னும் ஆறு மட்டும் இந்த ஏரியிலிருந்து புறப்படுகிறது.

கடல் மட்டத்திலிருந்து அதிக உயரத்தில் அமைந்திருப்பதால், பூமத்திய ரேகைக்கு மிக அருகில் இருந்தும் கோடை காலத்தில் அமெரிக்காவில் உள்ள மற்றய எல்லா ஏரிகளையும்விட இவ்வேரி குளிர்ந்திருக்கிறது. ஆனாலும், ஏரியின் சுற்றுப்புறச் சூழ்நிலை வறண்டே காணப்படுகிறது. இதற்கான காரணம் இன்னும் தெரிய வில்லை. ஏரியின் கரையோரங்களில் காணப்படும் சில மர்மமான அழிவுச் சின்னங்களைப் பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.





## துணுக்குச் செய்திகள்

தொகுப்பு: எஸ்.எம். அர்ஷத்தீன்
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்



யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் 18 வது நாடாக லதுவியா இணைந்து கொள்ளவுள்ளது. அடுத்த வருடம் முதல் யூரோ நாணயத்தைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் லதுவியாவுக்கு கிடைக்கவுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தினால் அங்கத்துவம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் லதுவியா, யூரோ நாணயத்தைப் பயன்படுத்தவுள்ளது. குறைந்தளவான பணவீக்கம், பொதுப் படுகடன் மட்டம், வட்டி வீதம் ஆகியவற்றை கருத்திற் கொண்டு லதுவியாவுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்தி வரும் லதுவியா, ரஷ்யாவில் தங்கியிருப்பதைக் குறைத்து வருகின்றது. யூரோ வலய நாடுகளில் நிதி நெருக்கடிகள் தொடரும் நிலையில் புதிதாக லதுவியா சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

அதிகளவில் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்கள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள தர வரிசைப் பட்டியலில் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் மகேந்திர சிங் தோனி 16ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். 31.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவர் கடந்த வருடத்தில் சம்பாதித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.



இந்தப் பட்டியலில் கோல்ஃப் வீரர் டைக்கர் வூட்ஸ் முதல் இடத்தைப்பிடித்துள்ளார். ஃபெப் சஞ்சிகை இந்த விபரங்களை வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் டென்னிஸ் வீரர் ரொஜர் பெடரர் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இலங்கையில் முதல் முறையாக ஆளில்லா உளவு விமானமொன்றைத் தயாரித்த குழுவுக்கு பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்ட மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட இறுதியாண்டு மாணவரான ஆபித் ருஷ்டி தலைமை தாங்கியுள்ளதுடன், அனுருத்த தென்னகோன், அசோக் அரவிந்த, பசிந்து மதுசங்க, ஹேமேஷ் வத்சலய ஆகிய பொறியியல் பீட நான்கு மாணவர்களும் பங்களித்துள்ளனர். பல்கலைக்கழக பேராசிரியர் சுதத் ரோஹனவின் மேற்பார்வையில் இந்த ஆளில்லா உளவு விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற வல்லரசு நாடுளில் மாத்திரம் காணப்படும் இந்த ஆளில்லா உளவு விமான தொழில்நுட்பம், இன்று இலங்கை நாட்டில் தயாரிக்கப்பட்டதானது இந்நாட்டு தொழில்நுட்ப வரலாற்றில் மைல் கல்லாக கருதப்படுகின்றது. 200 மீட்டர் உயரத்தில் பறந்து 12 நிமிட நேரத்திற்கு உளவுப் பணியில் ஈடுபட்டு தகவல்களை வழங்கக் கூடிய வகையில் இந்த விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விமானத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட உள்ளது. அனுமதி கிடைத்தவுடன் அனுசரணையாளர்களின் உதவியுடன் விமானத்தை மேலும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



புரூஃபன் மற்றும் டிக்லோஃபெனக் போன்ற பெயின்கில்லர் மாத்திரைகளை அதிக அளவில் வழமையாகப் பயன்படுத்துபவர்களுக்கு மாரடைப்பு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று ஆய்வின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இது தெரிய வந்துள்ளது. 600 சோதனைகள் நடத்தப்பட்டதில், ஒவ்வொரு 1000 நோயாளிகளில் மூன்று பேருக்கு மேலதிகமாக இருதய நோய் வருவதாகவும் அதில் ஒருவருக்கு அது மிகவும் கடுமையாக இருப்பதாகவும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். ஆனால், சிறிய அளவில் இந்த மாத்திரைகளை எடுப்பவர்கள் கவலைப்படத் தேவையில்லை என்றும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# நோய் விசாரிக்கச் செல்கிறீர்களா...?

நோய் விசாரிக்கச் செல்வதற்கு இஸ்லாம் அதிக அவதானத்தையும் ஊக்கத்தையும் வழங்குகிறது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு முஸ்லிம் தம் சகோதரனை காலையில் உடல் நலம் விசாரித்தால், அன்று மாலை வரை அவருக்காக எழுபதாயிரம் மலக்குகள் துஆச் செய்வார்கள். அவரை மாலையில் உடல் நலம் விசாரித்தால், மறுநாள் காலை வரை எழுபதாயிரம் மலக்குகள் அவருக்காக துஆச் செய்வார்கள்"



அறிவிப்பாளர்: அலி (ரழியல்லாஹு அன்ஹு) ஆதாரம்: திர்மிதி

நோய் விசாரிக்கச் செல்லும்போது உண்மையாகவே அந்நோயாளி நலம் பெற வேண்டும் என்ற தூய்மையான உள்ளத்தைக் கொண்டு செல்லுங்கள்.

நலம் விசாரிக்கப்படுபவர், நோயாளியாக இருக்கலாம் அல்லது நோயிலிருந்து அண்மையில் குணமடைந்தவராக இருக்கலாம். எனவே, 5-15 நிமிடங்களுக்குள் அங்கிருந்து வெறியேறி விடுங்கள். அதிக நேரம் தாமதிப்பது அவருக்கோ, அவரது குடும்பத்தினருக்கோ அசௌகரியத்தைக் கொடுக்கலாம். இதனைப் புரிந்து, நடந்து கொள்ளுங்கள். நோயாளி வேண்டிக் கொள்ளும் பட்சத்தில், அவருக்கு அதிக நெருங்கியவராக இருக்கும்போதில் மட்டும் நீங்கள் இன்னும் சற்று நேரம் எடுத்துக் கொள்வதில் தப்பில்லை.

நோயாளிகளிடமோ, அவர்களது குடும்பத்தாரிடமோ இதேபோன்ற நோய்களுக்கு ஆளானவர்களைப் பற்றியோ அல்லது அண்மையில் மரணித்தவர்களைப் பற்றியோ பேசுவதை கண்டிப்பாகத் தவிர்ந்து கொள்ளவும். முக்கியமாக, நோயாளியின் நிலைமையைக் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

அவரோடு பேசிக் கொண்டிருப்பது ஏற்றதா, என்ன வகையான சாப்பாட்டு வகைகளை அவருக்கு எடுத்துச் செல்லலாம்? என்பதையும் தெரிந்து செயற்படுங்கள்.

நோயாளியோடு அளவளாவும்போது அவருக்கு விருப்பமான விடயங்களையே பேசுங்கள். அவரது தன்நம்பிக்கையை, ஆரோக்கியத்தை அதிகரிக்கும் வகையில் கதைப்பது நோயிலிருந்து விடுபடுவதற்கான ஊக்குவிப்பை வழங்கும்.

நீங்கள் மருத்துவராக மாறி நோயாளியைக் குழப்ப வேண்டாம். சிலர் ஹோமியோபதி மருந்து எடுங்கள், நாட்டு மருந்து எடுத்தால் நோய் பறந்தே போய்விடும், இந்த மருத்துவ நிபுணரைவிட அந்த நிபுணர் கைராசிக்காரர் என்றெல்லாம் தலைக்கு வருவதையெல்லாம் சொல்லி நோயாளியை பெரும் சங்கடத்திற்கு ஆளாக்குவார்கள். இதனை முற்றாக தவிர்ந்து கொள்ளுங்கள்.

நோயாளிகளை நலம் விசாரிக்கச் செல்லும் நீங்கள் அவரது நோய் அறிகுறிகளை உங்களுக்கிருக்கும் சில அறிகுறிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து நீங்கள் நோயாளியாக மாறிவிட வேண்டாம்.

நோய் விசாரிக்கும்போது முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர்கள் என்ற பாகுபாடு காட்ட வேண்டாம். முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அந்நிய மதத்தவர்களை நலம் விசாரிக்கச் சென்ற வரலாறுகள் எமக்கு முன்னுதாரணமாகவுள்ளன.

நோயாளியை ஆறுதல் படுத்துவதாக நினைத்துக் கொண்டு வேதனைப்படுத்த வேண்டாம். குறிப்பாக, அவர்களது பொறுப்புக்களை ஞாபகமூட்டுவது அவர்களது இயலாமையை அதிகரிக்கும். நோயாளியின் வீட்டுத் தகவல்களை காவிக் கொண்டு மற்றவர்களிடம் பரப்பித் திரியாதீர்கள். சில வேளை நோயாளி தன் நோய் பற்றி மற்றவர்கள் அறிவதை விரும்பாமல் இருக்கலாம்.

நோயாளி நலம் பெற இறைவனிடம் பிரார்த்திப்பதோடு, விரைவாகக் குணம் பெற வாழ்த்துக்களையும் சொல்லுங்கள்.

# ஊடகங்களில் காட்டப்படும் பெண்கள்



செய்திகளை உள்வாங்கி உருவாக்கும் பொறுப்புக்களில் பெண்களின் பங்கு குறைவாகவும் செய்திகளை நளினத்தோடு வாசிப்பவளாகப் பெண்கள் ஊடகங்களில் தென்படும் மோசமான நிலையும் இருக்கின்றது.

ஊடகங்களில் வெற்றியாளராகவும் சாதனையாளராகவும் தலைமைத்துவம் சார்ந்த பெண்கள், தனித்துப் பயணிக்கக்கூடிய, பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடிய, பாலியல் பகுத்தறிவுமிக்க பெண்கள் பெரும்பாலும் காண்பிக்கப்படுவதே இல்லை.

இங்கு உலகமயமாதலையும் ஊடகங்களின் நிலைப்பாட்டையும் எதிர்க்க வருவோரின் உள்ளக் கிடக்கை பெண்கள் மீது கரிசனம் கொண்டுள்ளதா எனப் பார்த்தால் அதுவுமில்லை.

ஊடக வியாபாரிகள் பெண்களை வைத்துப் பணம் செய்வதுடன் பெண்களைத் தாமே சுகிக்கவும், தமக்குக் கீழ் கொண்டுவரவுமே பார்க்கின்றனர். இது பாலியல் சமத்துவமின்மையை பெருக்கிக் கொண்டே செல்கின்றது. ஒன்று, பெண்கள் முற்றும் முழுவதுமாக வீடுகளுக்குள் முடக்கப்படுகின்றனர் அல்லது அவளை ஒரு பாலியல் பண்டமாக்கி வீதிகளில் உலாவவிடுகின்றனர்.

அமெரிக்காவில் சராசரியாக பதின்மவயதினர் நாள்தோறும் 10 மணி நேரம் 45 நிமிடங்கள் ஊடகத் தாக்கத்துக்கு உள்ளாகின்றனர். தொலைக்காட்சி, பாடல்கள், திரைப்படங்கள், சஞ்சிகைகள், இணையதளங்கள் ஆகியவை இவற்றுள் அடங்கும். இத்தகைய ஊடகங்களில் தோன்றும் பெண்கள் தலைமைத்துவக் குணம் படைத்த, பொறுப்பான, அறிவில் சிறந்த பெண்ணாகக் காட்டப்படுவதில்லை மாறாக பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு பண்டமாகவே காட்டப்படுகின்றனர். இது பெண்கள் குறித்தான பார்வையை இளம் சமூகத்தில் தவறாக விதைத்து விடுகின்றது.

இன்றைய உலகச் சந்தையில் விற்கப்படும் பல பொருட்களில் பெண்ணின் தேகமும் ஒன்றாகிவிட்டது என்பதில் ஐயமே இல்லை. என்றுமில்லாத அளவுக்கு உலகம் இன்று ஊடகங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அவற்றிலும் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், தொலைக்காட்சிகள், இணையதளங்கள், விளம்பர பதாகைகள் எனக் காட்சி ஊடகங்களே தினந்தோறும் நமது வாழ்வை பெருமளவில் பாதிக்கின்றன.

மனித இனத்தின் இருப்பை, ஊடகங்கள் தரும் தகவல் பரிமாற்றங்கள் பெரும் தாக்கத்துக்கு உள்ளாக்கியுள்ளன. இதில் என்ன சிக்கல் என்றால், நாம் இன்று பெறுகின்ற தகவல்கள் அனைத்தினதும் நன்மை-தீமைகளை, உண்மை பொய்களைத் தீர்மானிக்கும் மிகப் பெரும் பொறுப்பும் நம் கைகளிலேயே கொடுக்கப்பட்டுள்ளதுதான்.

இன்றைய ஊடகங்களில் பெண்கள் மீதான ஊடக பூதக் கண்ணாடி அவர்களை ஒரு பாலியல் நுகர்வுப் பொருளாகவே காட்டி வருகின்றது. உலகின் அனைத்துப் பகுதிகளிலும் இதே நிலைதான் தொடர்கின்றது.

**ஊடகங்களில் காட்டப்படும் பெண்கள் பாலுணர்வைத் தூண்டுகின்றனரா?**

தினசரி நாம் வாசிக்கும் செய்தித்தாளாக இருக்கட்டும் தொலைக்காட்சியாக இருக்கட்டும் இணையதளங்களாக இருக்கட்டும் எல்லாவற்றிலும் பாலியல் அடையாளப் படுத்தப்பட்ட பெண்களே நம் கண் முன்னே நிறுத்தப்படுகின்றனர். பெண்களைப் பாலியல் சார்ந்த விடயமாகவும் இச்சைகள் தீர்க்கும், இன விருத்தி செய்யப்படும் இயந்திரமாகவும் நினைக்கும் பழம் சமூகத்தின் உச்சக்கட்ட வளர்ச்சியே இன்றைய ஊடகங்களின் இந்த நிலைப்பாடுகளுக்கு முக்கிய காரணமாகும். ஊடகம் உருவாக்குவோரும் நுகர்வோரும் யாராக இருக்கின்றனர்? ஊடகங்கள் சமூகத்தில் எந்தப் பிரிவினரை மகிழ்ச்சிப்படுத்திப் பணம் வாங்கப் பார்க்கின்றது என்று சிந்தித்துப் பாருங்கள்.

இது வருங்கால சமூகங்களில் எத்தகைய மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாம் சற்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் அல்லவா?

மேற்கு நாடுகளில் கடந்த பத்தாண்டுகளில் ஊடகத்துறைக்குள் பிரவேசிக்கும் பெண்களின் தொகை மூன்றில் ஒரு பங்கு உயர்வடைந்துள்ளது. இருந்தபோதும் இது போதுமான அளவிற்கு இல்லையே எனலாம். ஊடகம், பாலினக் கண்காணிப்பகத்தின் தகவலின்படி, உலகம் முழுவதும் 24 செய்திகள் மட்டுமே பெண்கள் குறித்தானவையாக இருக்கின்றன. இவற்றில் எத்தனை சதவீதம் தலைமைத்துவம், சாதனைகள் போன்றவற்றைக் கூறுகின்றன; எத்தனை சதவீதம் சினிமா, இசை சார்ந்த பாலியல் மயமாக்கப்பட்ட பெண்களின் செய்திகளைக் கூறுகின்றன. என்பதல்லாம் ஆராயப்பட வேண்டியவை.

-சமீலா யூசுப் அலி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

('அந்நக்பா')... 15ஆம் பக்கத் தொடர்

எட்டிப் பிடித்துள்ள இத்தருணத்தில், பலஸ்தீன மக்கள் முகங்கொடுக்கும் மற்றொரு பிரச்சினை குத்ஸ் மற்றும் மேற்குக் கரைப் பகுதியில் அதிகரித்து வரும் இஸ்ரேலின் குடியேற்றத் திட்டங்களாகும். சர்வதேசத்தின் கண்டனத்தையும் தாண்டி இஸ்ரேலிய அரசு மக்களை குடியேற்றிக் கொண்டிருக்கிறது. பலஸ்தீனின் குத்ஸ் மற்றும் மேற்குக் கரைப் பகுதியில் இடம்பெற்று வரும் குடியேற்றத் திட்டங்கள் தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்ட பகுப்பாய்வாளர் ஸாலிஹ் நுஃமானி, இஸ்ரேலின் குடியேற்றத் திட்டங்களை துரிதப்படுத்துவதில் பதாஹ் அரசு பின்னணியில் நிற்கிறது என்கிறார்.

எவ்வாறென்றால், இஸ்ரேலிய அரசு பதாஹ் அரசின் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காகப் பாரிய நிதியுதவிகளை செய்து வருகின்றது. அண்மையில் கூட, நிதி நெருக்கடி அதிகரிக்கவே மோசடிக் குற்றச்சாட்டின் பெயரில் பிரதமர் ஸலாம் பையால் நீக்கப்பட்டார். நெருக்கடியை எதிர்கொள்வதற்காக பதாஹ் அரசு மிகக் கடுமையான சில வரி விதிப்புகளை திட்டமிட்டது. அத்தகைய செயற்பாடுகள் பதாஹ்வை பாதிக்கும் என்பதால் இஸ்ரேல் குறுக்கிட்டு நிதியுதவிகளை பதாஹ் அரசுக்கு வழங்கியது. மாத்திரமின்றி, பதாஹ்வின் ஆளுகைக்கு உட்பட்ட மேற்குக் கரையில் அரச தொழில் புரிபவர்களுக்கு மாதாந்த சம்பளத்தையும் வழங்க ஏற்பாடு செய்து கொடுத்தது. இவையனைத்திற்கும் பகரமாக நெதன்யாகு கேட்பது இரண்டு விடயங்களை மாத்திரமே! ஒன்று, ஹமாஸுடனான பேச்சுவார்த்தைகள் பதாஹ் இஸ்ரேலுடன் போட்டுக் கொண்டுள்ள உடன்படிக்கைக்கு சவாலாக வரும்போது, பேச்சுவார்த்தைத் தீர்மானங்கள் அடங்கிய காகிதங்களை கிழித்தெறிய வேண்டும். இரண்டு, இஸ்ரேலின் குடியேற்றத் திட்டங்கள் தொடர்பாக திடீர் தீர்மானங்களுக்கு வரக்கூடாது. குறிப்பாக, குத்ஸ் மற்றும் மேற்குக் கரையில் குடியேறியுள்ள யூதர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் பதாஹ் இராணுவம் இஸ்ரேலிய இராணுவத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்பனவாகும்.

வாய்ப் பேச்சில் இஸ்ரேல் குத்ஸ் மற்றும் மேற்குக் கரையில் அதிகரிக்கும் குடியேற்றத் திட்டங்களை பதாஹ் எதிர்கிறது. ஆனால், மேற்குக் கரையில் 25 வீதமான நிலங்களை புதிய குடியேற்றத் திட்டங்கள் உள்ளடக்கியுள்ளன. மாத்திரமன்றி, இந்த 25 வீத நிலமும் எந்தப் பேச்சுவார்தையிலும் விட்டுக் கொடுக்கக் கூடாது என தீவிர யூத மத வெறியர்கள் அரசை எச்சரித்துள்ளனர். மறுபுறத்தில் பொறுப்பான பதாஹ் அரசு நாங்கள் இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் செல்வோம் என போலியாக ஊடகங்களுக்கு அறிக்கை விடுகின்றனர். தனது சொந்த ஆளுகைப் பிரதேசத்திலேயே குடியேற்றத் திட்டங்களை தடுக்க முடியவில்லை பதாஹ்வுக்கு.

பலஸ்தீன அகதிகளின் அவலங்கள் இன்னொரு சோக கீதம். பலஸ்தீன மக்களின் சனத்தொகை கிட்டத்தட்ட 11 மில்லியன். அதில் 4 மில்லியன் மக்களே பலஸ்தீனில் வாழ்கின்றனர். அதிலும் கூட பலர் அகதி முகாம்களில்தான் தமது வாழ்நாளைக் கழிக்கின்றனர். அண்மையில் வெளியிடப்பட்ட தகவலொன்றின்படி, 11 மில்லியன் பலஸ்தீன் மக்களும் வெறும் 27 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலேயே வாழ்கின்றனர். அதாவது, கிட்டத்தட்ட முழு பலஸ்தீன நிலத்திலும் 15 வீதம் மாத்திரமே.

பலஸ்தீனர்கள் முழு நாட்டு சனத் தொகையில் 49 வீதமாக வாழ்கின்ற அதேவேளை பலஸ்தீன நிலத்தில் வாழும் யூதர்கள் நாட்டில் 51வீதம் என கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் பலஸ்தீன் நிலத்தில் 85வீத நிலப்பரப்பில் வாழ்கின்றனர். ஒரு பலஸ்தீனருக்கு கிடைக்கும் சராசரி இடப் பெறுமானம் ஐந்து அடிகள் மட்டுமேயாகும்.

இஸ்ரேலிய இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலஸ்தீன கைதிகள் இன்னொரு பிரச்சினை. 1967ஆம் ஆண்டு முதல் இன்று வரை 8 இலட்சம் பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்றும் 5000க்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் ஸியோனிஸ சிறைகளில் வாடுகின்றனர். இவர்களது விடுதலையை ஹமாஸ் தனது கிட்டிய எதிர்கால திட்டங்களில் முதன்மையானது என அறிவித்துள்ளது. ஆனால், பதாஹ் அரசு இவர்களை விடுதலை செய்வதற்காக எவ்வித முனைப்பான செயற்பாடுகளையும் செய்யவில்லை.

இவ்வாறு, பலஸ்தீன மண்ணில் மீட்டிப் பெற வேண்டிய ஏராளமான அம்சங்கள் உட்பட, தீர்க்கப்பட வேண்டிய நிறைய சவால்கள் இருக்கின்ற நிலையில், பதாஹ்வின் சாணக்கியமற்ற அரசியல் நகர்வுகளால் ஏற்படும் பிளவுகள் இன்னும் இஸ்ரேலை வலுவூட்டுகிறது.

பலஸ்தீனர்கள் வெளியேற்றபட்டு 65 வருடங்களாகியும் ஓர் அரசியல் ஒருமைப்பாடு காணப்படாமை கவலைக்குரிய அம்சமாகும். பலஸ்தீன மக்கள் அதனை ஒரு போதும் அங்கீகரிக்கப் போவதில்லை. முஸ்லிம் உம்மத்தும் அதனை அங்கீகரிக்க தயாராக இல்லை.

(இன விருத்தி)... 11ஆம் பக்கத் தொடர்

நீர், வளி என்பவற்றுடன் கலந்து எம்முடலில் செலுத்தப்படுவதே எனவும் மேற்படி சுற்றாடல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

DTR போன்ற பூச்சி நாசினி மருந்து வகைகள் உள்ள உணவை உட்கொண்ட றொபின் பறவைகளின் குஞ்சுகள் மூளைப் பாதிப்புக்கு உட்பட்டிருப்பதை அல்பெஸ்ட்ரா பல்கலைக்கழக பேராசிரியர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

புளோரிடா மாநிலத்தில் ஆய்வாளர்கள் அங்கிருந்த தவளை இனத்தை ஆராய்ச்சிக்கு உட்படுத்தியபோது ஒரே தவளை ஆண், பெண் ஆகிய இரண்டு இனத்தினதும் ஜனன உறுப்புகளைக் கொண்டிருந்ததை அவதானித்தனர். இது ஆய்வாளர்களைப் பெரிதும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இதற்குக் காரணம் அப்பகுதியில் கொட்டப்படும் வைத்தியசாலைக் கழிவுப் பொருட்களில் காணப்பட்ட நச்சுப் பதார்த்தங்கள் இவற்றில் கலந்ததாகும்.

ஒரு சுப்பர் மார்க்கட்டில் தட்டிலிருந்து எடுக்கப்பட்ட 14 வகை உணவுப் பொருட்களை ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்தபோது அவற்றில் இன விருத்திச் சிக்கலைத் தோற்றுவிக்கும் BCB மற்றும் தலேற்று போன்ற நச்சுத் தன்மை வாய்ந்த இரசாயனப் பதார்த்தங்கள் இருந்தமை உலக வன விலங்கு நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது. இந்த இருவகை நச்சுப் பொருட்களும் உயிரினங்களின், குறிப்பாக மனித சந்ததியினர் கரு வளத்தைப் பயங்கரமாகப் பாதிக்கும் தன்மை கொண்டவையாகும்.

BCB மற்றும் தலேற்று நச்சுப் பொருள் பாதிப்புக்கு உட்பட்ட தாய்மாருக்குப் பிறந்த ஆண் குழந்தைகளின் ஆண் உறுப்பு வித்தியாசமான மிகச் சிறியனவாகக் காணப்பட்டன என நிவ்யோர்க் றொச்செஸ்டர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். வட அமெரிக்கப் பகுதியிலும் இத்தகைய பாதிப்புக்குட்பட்ட ஒரு பகுதியில் வாழும் மக்களில் ஆண் சிசுக்களைவிட இரட்டிப்பு எண்ணிக்கையான பெண் சிசுக்கள் பிறந்திருப்பதாக வைத்தியசாலைப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் இயற்கைக்குப் பங்கம் ஏற்படுத்தும் இத்தகைய காரணிகளால் ஆண்கள் விந்து வளம் குறைந்தவர்களாகவும் பெண்கள் மலட்டுத் தன்மை கொண்டவர்களாகவும் மாறி வருகின்றமை இன்று சர்வதேச ரீதியில் பேசப்பட்டு வருகிறது. இருபது நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், கடந்த 50 ஆண்டு காலப் பகுதியில் ஆண்களிடம் ஆண்மைக் குறைவு ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கின்றன. ஆண்களிடம் விந்துகளின் சராசரி அளவு ஏறத்தாழ அரைப் பங்காக வீழ்ச்சியடைந்திருப்பதாக மேலும் அது சுட்டிக்காட்டுகின்றது.

எப்படியோ இந்த விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியை மறுக்கவோ, தவிர்க்கவோ முடியாத கட்டத்தில் நாம் வாழ்கின்றோம். இதுபோன்ற ஆயிரத்தி எட்டு ஆய்வுகளைச் செய்பவர்கள்தான் சுற்றுச் சூழலை மாசுபடுத்துவதிலும் முன் நிற்கின்றார்கள் என்பதையும் மறுக்க முடியாதுள்ளது. இலாப நோக்கத்தையும் வல்லரசாதிக்க சிந்தனையையும் கைவிட்டு மனிதன் தான் படைக்கப்பட்ட உண்மையை விளங்கும் போதுதான் பசுமையான தொழில்நுட்ப வளர்ச்சியைக் காண முடியும்.

(வடக்குத் தேர்தல்)... 5ஆம் பக்கத் தொடர்

மனித உரிமை மீறல், யுத்தக் குற்றம் போன்ற குற்றச் சாட்டுகளும் வெளிநாட்டு முதலீட்டின் தேக்கம், ஜி.எஸ்.பி. சலுகை ரத்து, இந்தியாவினதும் சர்வதேச நாடுகளினதும் ஓரக் கண்பார்வை என்ற பல பிரச்சினைகளுக்குள் வட மாகாண சபையை நடத்துவதே தீர்வாக அமையும் என்று அரசாங்கத்துக்குத் தெரியாதா என்ற கேள்வியும் எழும். ஆனால், இனவாதச் சிந்தனையால் மூழ்கடிக்கப்பட்டுள்ள இலங்கையில் இப்பிரச்சினை வேறு விதமாகவே நோக்கப்படுகின்றது.

யுத்த வெற்றியின் பெருமிதத்தால் ஜனரஞ்சகமான தலைமைத்துவம் வென்றெடுத்த அரச அதிகாரத்தை நீண்ட நாட்கள் தக்க வைத்துக் கொள்ளும் கருவியாக இன்று இலங்கையில் இனவாதமும் மதவாதமும் மாறியுள்ளது. சமூக ஏற்றத் தாழ்வு, அதிகரித்த விலைவாசிகள், கொலை, கொள்ளை, வன்முறை, சிறுவர்கள்-பெண்களுக்கு எதிரான வல்லுறவு, உரிமை மீறல்கள், கடத்தல், காணாமற் போதல் என்ற எண்ணற்ற சமூகப் பிரச்சினைகளை மூடி மறைக்கும் சக்தி வாய்ந்த கவசமாக இனவாதம் உள்ளது. பொருந்தியபடி தமிழ் மக்களுக்கு எவ்வித சீர்திருத்தமும் வழங்காமைக்கு இதுவே காரணமாகும். அவ்வாறு செய்ய முற்படும்போது இனவாதத்தின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட கோட்டை சரிந்து விழும் என்பதனாலாகும்.

நிறைவேற்று நிர்வாக அதிகாரமும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் எட்டு மாகாண சபைகளின் அதிகாரமும் தன்வசம் இருக்கும்போது அரசாங்கம் உள்ளே இருக்கும் சிறு குழுவுக்கு ஏன் பயப்பட வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. இவ்வளவு பலம் இருந்தபோதும் இனவாதச் சக்திகளின் செல்வாக்கு பொதுமக்களிடையே செல்வாக்குப் பெறுமானால், அரசாங்கத்தை மாற்றியமைக்கும் பலம் வாய்ந்த காரணியாக அது மாறிவிடும் என அரசாங்கம் அஞ்சுவதில் நியாயமுள்ளது.

2000ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஜே.வி.பி. உட்பட இனவாத, தேசியவாத அமைப்புகள் திட்டம் தீட்டும்போது அறுதிப் பெரும்பான்மை கூட பெற முடியாத, கட்சியின் தலைமைத்துவம் கூட அற்ற, சர்வதேச உதவிகளற்ற ஒரு தலைமையாகத் தான் இருந்தது. எனினும், பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து உலகளாவிய மூலதனப் பாய்ச்சலும் ஜனாதிபதியின் கையைப் பலப்படுத்தவென வெளிக்கிட்ட உள்நாட்டு முதலாளித்துவச் சக்திகள் கூட்டும் நிலைமைகளை தலைகீழாக மாற்றி விட்டது.

இப்போது ஜே.வி.பியும் இன்றி சிறுபான்மை கட்சிகளுடன் பேரம் பேசலுமின்றி ஆட்சி அமைக்க முடியும் என்றும் அதனை தேசியவாதிகள், இனவாதிகளின் பக்கபலத்தால் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது. சர்வதேசத்தின் விமரிசனங்களுக்கு உட்பட்டாலும் தமிழ் மக்களின் வெறுப்புக்கு உள்ளானாலும் சிங்களப் பெரும்பான்மையின் மத்தியில் சரியாத செல்வாக்கை அரசு கொண்டுள்ளது. அதன் நீடிப்பு இனவாத, தேசிய வாதச் செயற்திட்டத்தை முகாமைத்துவம் செய்வதிலேயே தங்கியுள்ளது. அதனை எந்த வகையிலும் சரியவிட அரசாங்கம் தயாராக இல்லை.

சந்திரிக்காவின் அரசில் 39 ஆசனங்களையும் அமைச்சர்களையும் கொண்டிருந்த ஜே.வி.பி. இன்று மூன்று எம்.பீ.க்களுடன் சுருங்கி மீண்டும் உயிர்த்தெழ தருணம் பார்த்துள்ளது. 1987களிலேயே மாகாண சபை முறையை எதிர்த்த நிலையில் இன்று மீண்டும் அதே கோஷத்துடன் மக்கள் ஆதரவைப் பெற அது பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்கிறது. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவதை இலங்கையில் கூறுபோடும் முயற்சியாக வரைவிலக்கணப்படுத்துகிறது.

அரசுக்கு வெளியே பொது பல சேனா, ராவணா பலய என்று 29 இனவாத அமைப்புக்கள் வட மாகாண சபைத் தேர்தலுக்கு எதிராக களமிறங்க முன்வந்துள்ளன. அரசாங்கம் உண்மையில் அதிகாரப் பரவலாக்கத்தை விரும்பினாலும் சர்வதேசத்திற்கான கடப்பாட்டை நிறைவேற்ற விரும்பினாலும், அதிகாரத்தைத் தாரைவார்க்க விரும்பாமையே இதற்கான அடிப்படைக் காரணம் என்று கூறலாம்.

அரசுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பிரிவினரிடையே யார் தேசத் துரோகி என்ற கணக்கில் ஏற்பட்டுள்ள பலப் பரீட்சையில் அரசாங்கம் பார்வையாளராக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியும் மௌனம் சாதிக்கிறது.

இந்தியாவிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் தான் கொடுத்த வாக்குறுதி பற்றியோ, தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டிய அவசியம் பற்றியோ சிங்கள மக்களை அறிவூட்டுவதன் மூலம் சாதிக்க முடியாதென அரசும் அறிந்தேயுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்புடன் அரசாங்கத்துக்கிருக்கும் முறுகல் நிலைக்கு இந்த பின்னணியே முக்கிய காரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடயத்தில் மற்றுமொரு பலமான காரணமும் உண்டு என்பதை மறக்கலாகாது. அதாவது, பதவி, சலுகை, தலைமைத்துவம் என்ற பூச்சாண்டிகளுக்குள் பிடிபடாத ஒரு கட்சியாக அது தன்னைப் பேணி வருகிறது. வேறு விதமான கொடுக்கல்-வாங்கல்களை கொள்வனவு செய்ய முடியாத நிலை தொடர்ந்துமுள்ளது. சம்பந்தனும் தேசியக் கூட்டணியும் எதிரியாகப் பார்க்கப்பட இதுவே காரணமாக உள்ளது.

அரசாங்கம் தமிழர் விடயத்தில் இதுவரை தனது நிலைப்பாட்டைக் கூற வில்லை. பாராளுமன்றத் தெரிவுக் குழுவை அமைத்து தமிழ்த் தேசியக் கூட்டணியை பொறிக்குள் மாட்டி விடவே விரும்புகிறது. பாம்பும் சாகாமல் கோலும் முறியாமல் பாதுகாக்கும் அரசாங்கத்தின் இந்த மெத்தனமான போக்கு எதில் போய் முடியும் என்பது தெரியாது. ஏலவே, தமிழ் டயஸ்போரா 13 பிளஸ்-மைனஸ் மூலம் தமிழ் மக்களுக்கு விடிவில்லை, சுயாட்சி ஒன்றே தீர்வு என்று அறிவித்துள்ள நிலையில், தனி நாடு கோருவதில்லை என்ற உறுதிப்பாட்டைப் பகிரங்கமாக வழங்கிய தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் கைகோர்க்க அரசு முன்வருவது ஒன்றே எல்லோருக்கும் நல்லதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்

மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)



கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழி பெயர்ப்புத் தொடர்

(தொடர் 18)

### கருத்து முரண்பாடு கொள்ளாத இரண்டு யதார்த்தங்கள்

நாம் பேசும் இவ்விடயத்தை தெளிவுபடுத்துவதற்காக இரண்டு உண்மைகளை இங்கு எடுத்துக் கூறுவது கட்டாயம் என நான் கருதுகிறேன். அவை குறித்து முரண்பட்ட கருத்துக்கு இடமில்லை என அல்லது கருத்து முரண்பாடு கொள்ளக்கூடாது என நான் நினைக்கின்றேன். அவையிரண்டும் வருமாறு:

முதலாவது, சுன்னாவின் பெரும்பாலான பகுதியான சொல், செயல், அங்கீகாரம் சட்டவாக்கமாக அமைந்திருந்தவையாகும். "அவரைப் பின்பற்றுங்கள், நீங்கள் நேர்வழியை அடையலாம்" (அல் அஃராப்: 158) என நேர்வழியைப் பெறுவதற்காக எமக்கு பின்பற்றுமாறு ஏவப்பட்டுள்ள நபிகளாரை இவ்விவகாரங்களில் பின்பற்றுவது எம்மீது கடமையாகும்.

இரண்டாவது, சுன்னாவில் சட்டவாக்கமாக அமையாத ஒரு பகுதியும் உண்டு. அதில் நபிகளாருக்கு அடிபணிவது கடமையல்ல. உலக விவகாரமாகக் கருதப்படுவன இதிலடங்கும். "பேரீத்த மகரந்தச் சேர்க்கை தொடர்பாக உங்கள் உலக விவகாரம் குறித்து நீங்களே நன்கறிந்தவர்கள்" என்ற ஹதீஸ் மூலம் நாடப்பட்டது இப்பகுதியாகும்.

இவ்விரண்டு யதார்த்தங்களும் ஏகோபித்து ஏற்றுக் கொள்ளப்பட்டனவாக இருந்தால் அதில் கருத்து வேறுபாடு ஏற்பட முடியாது. ஆயினும், இந்த அடிப்படையை சில ஹதீஸ்களில் பிரயோகிக்கும்போது கருத்து வேறுபாடு ஏற்பட முடியும். உண்ணுதல், பருகுதல், ஆடை அணிதல், அலங்காரம் செய்தல், சுர்மா இடுதல், வாசனை பூசுதல், குறிப்பிட்ட மருந்துகளை நோய் நிவாரணியாகக் கொள்ளல் போன்ற சில துறைகள் சார்ந்த ஹதீஸ்கள் சம்மந்தமாக அவை எமக்கு பொறுப்புச் சாட்டப்பட்ட, நாம் நன்கறிந்த உலக விவகாரங்களாகும். ஏனெனில், இவ்விவகாரங்களில் மக்களைக் கட்டாயப்படுத்தி ஏவலையோ, விலக்கலையோ வஹீ கொண்டு வரவில்லை. அல்லது இவை நாம் வஹீ மூலம் பெற்றுக் கொள்ள வேண்டிய, நாம் கட்டாயம் எடுத்துப் பின்பற்ற வேண்டிய மார்க்க விவகாரங்களா என்ற கருத்து வேறுபாடு எழ முடியும்.

பொதுமை, நிரந்தரம் ஆகிய இரண்டு பண்புகளையும் பெறாத ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடமிருந்து வெளிப்பட்ட சில சட்டவாக்கங்களும் உண்டு. ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவற்றின் மூலம் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட சில நிலைமைகளுக்குரிய தீர்வினை வழங்கினார்கள். இதனைத்தான் அறிஞர்கள் தலைமைத்துவம், அதிகாரம், நீதி வழங்குதல் என்ற வகையில் வெளிப்பட்ட ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது சுன்னாக்கள் என தலைப்பிட்டுள்ளனர். அதன் அடிப்படை குறித்து ஏகோபித்த கருத்து நிலவினாலும், சில கிளை விவகாரங்களில் அதனைப் பிரயோகிப்பதில் முரண்பாடான கருத்துக்கள் உள்ளன.

### கடும்போக்கு-பொடுபோக்கு எனும் இரு துருவங்கள்

நாம் எமது அதிகமான சமகால விவகாரங்களில், குறிப்பாக சிந்தனா ரீதியான விவகாரங்களில் இரு முரண்பட்ட துருவங்களில் நிற்பதனை வழக்கமாக்கிக் கொண்டிருப்பதுபோல, இப்பெரு விவகாரத்திலும் பொடுபோக்கு-கடும்போக்கு ஆகிய எதிரும் புதிருமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளோம்.

**ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவற்றின் மூலம் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட சில நிலை மைகளுக்குரிய தீர்வினை வழங்கினார்கள். இதனைத்தான் அறிஞர்கள் தலைமைத்துவம், அதிகாரம், நீதி வழங்குதல் என்ற வகையில் வெளிப்பட்ட ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது சுன்னாக்கள் என தலைப்பிட்டுள்ளனர்.**

"உங்களின் உலக விவகாரங்கள் குறித்து நீங்களே நன்கறிந்தவர்கள்"

என்ற ஹதீஸை அதாரமாகக் கொண்டு உலக விவகாரங்களில் நாம் ஏலவே குறிப்பிட்டவற்றிலிருந்தும் நாம் குறிப்பிடாத கொடுக்கல்-வாங்கல் விடயங்களிலிருந்தும் சட்டவாக்க ஆடையை எங்களில் சிலர் களையப் பார்க்கின்றனர்.

"எமது நபியின் சுன்னாவைப் பின்பற்றும்படி நாம் ஏவப்பட்டுள்ளோம்"

இந்த ஏவல் அல்குர்ஆன், சுன்னா மற்றும் இஜ்மாஃ மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை ஆதாரமாகக் கொண்டு, சுன்னாவில் சட்டவாக்கமாக அமையாத பகுதி ஒன்றுள்ளது என்பதை ஏற்க மறுப்போரும் எம்மில் உள்ளனர். சுன்னாவில் பின்பற்றாதிருக்க முடியுமான ஒரு பகுதி எங்கனம் இருக்க முடியும் என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.


### நபித் தோழர்கள் மற்றும் முன்னோர்களிடத்தில் சுன்னா பற்றிய விளக்கம்

நபித் தோழர்கள் மற்றும் அவர்களை அழகிய முறையில் பின்பற்றிய தாபிஊன்கள் தலைமுறையைச் சேர்ந்த அறிஞர்களான நம் முன்னோர்கள் இவ்விவகாரம் குறித்து ஆய்வு செய்துள்ளனர் என்பதை இங்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஆனால், அவர்களது ஆய்வு சுன்னாவை சட்டவாக்கமாக அமைந்த சுன்னா, சட்டவாக்கமாக அமையாத சுன்னா என்று பகுத்து நோக்கவில்லை. மாறாக, அவர்கள் இவ்விவகாரத்தைப் பிறிதொரு தலைப்பில் அணுகினர். ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது குறிப்பிட்ட செயல் சுன்னாவா இல்லையா? என்றே அவர்கள் நோக்கினர். அதாவது, அவர்கள் இதன் மூலம் அதி முக்கியத்துவம் வாய்ந்த இரு விடயங்களை வகுத்தனர்.

ஒன்று, ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது நடவடிக்கைகளில் பின்பற்றுமாறு ஏவப்பட்ட சுன்னாவாக அமைந்தவை.

இரண்டாவது, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நடவடிக்கைகளில் சுன்னாவாக அமையாதவை. இதனை பல நவீன கால அறிஞர்கள் சட்டவாக்கமாக அமையாத சுன்னா என விபரிக்கின்றனர். ●

# இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம்



▸ சட்டத்தரணி ஸகி இஸ்மாயில்

### முஸ்லிம் அரசியல் அடையாளம்

இலங்கை முஸ்லிம்கள் தமது சமயம் மற்றும் கலாசார அடையாளங்களைப் பாதுகாத்துக் கொள்வதிலும் இன ரீதியாக தாம் வேறுபட்டவர்கள் என்பதனை வெளிக்கொணர்வதிலும் தீராத பற்றுக் கொண்டவர்கள். இத்தகைய முஸ்லிம்களின் தனித்துவ அடையாளமானது இல்ங்கை வரலாற்றில் முதன் முறையாக சோதனைக்கு உட்படுத்தப்பட்டது பொன். இராமநாதனின் காலத்திலாகும். இலங்கை முஸ்லிம்கள் பூர்வீகத்தில் தமிழர்களாக இருந்து இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக் கொண்டவர்கள் என்று அவர் வாதிட்டார். இவருடைய கருத்தானது அன்று சட்டசபையில் அங்கம் வகித்த எம்.ம் அப்துல் அஸீஸ் அவர்களுடன் பிற்காலத்தில் இவ்விடயம் தொடர்பில் வாதிடுவதற்கு காரணமாக அமைந்தது.

எவ்வாறிருப்பினும், இராமநாதன் அவர்களின் இத்தகைய கருத்துக்களுக்கு மாற்றமாக அன்று பிரிட்டிஷ் ஆளுநராக பதவி வகித்த கோடன், சட்ட சபையில் முஸ்லிம்களுக்கென பிரதிநிதித்துவமொன்றுக்கு அனுமதித்ததுடன், 1889ஆம் ஆண்டில் சட்ட சபைக்கென எம்.சி. அப்துல் றஹுமான் என்பவர் நியமனம் செய்யப்பட்டார். இலங்கை வரலாற்றில் இரண்டாவது முறையாக முஸ்லிம்களின் அடையாளம் மீதான எதிரலை 1915ஆம் ஆண்டின் ஆரம்ப கட்டங்களில் இடம்பெற்ற சிங்கள-முஸ்லிம் கலவரத்தின் விளைவாக எழுந்தது. அன்று சிங்கள தேசியவாதத்தை வளர்க்கவென முன்னின்று உழைத்த அநாகரீக தர்மபால குறிப்பாக, வணிகத்தில் அப்போது ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீதும் சிங்களவர்கள் வெறுப்பைக் காட்டும் வண்ணமாக தப்பெண்ணங்களைப் பரப்பினார். முஸ்லிம்கள் என்போர் இனத்தாலும் சமயத்தாலும் மொழியாலும் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் என்று கூறி சிங்கள-முஸ்லிம் மக்கள் மத்தியில் குழப்ப நிலையையும் உண்டு பண்ணினார். இதனால் ஏற்பட்ட சிங்கள-முஸ்லிம் வணிக போட்டியானது உள்நாட்டில் வாழ்ந்த சாதாரண முஸ்லிம் மக்களைவிட வணிகத்தில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்களை பெரிதும் பாதித்தது. இருப்பினும், 1915ஆம் ஆண்டில் ஏற்பட்ட இத்தகைய வன்முறையை கட்டுப்படுத்த அப்போதைய ஆங்கில ஆட்சியாளர்கள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

குறிப்பிட்ட சிங்கள-முஸ்லிம் காழ்ப்புணர்வுப் பிரச்சாரம் வாணிபத்தில் ஈடுபட்டவர்களையும் கரையோர முஸ்லிம்களையும் அதிகம் பாதிப்பதாக அமைந்திருந்தபோதிலும் பிரதேச வேறுபாடுகள் எதுவுமின்றி அனைத்து முஸ்லிம்களும் ஒன்று திரண்டு அதனை எதிர்த்துக் குரல் கொடுத்தனர். அன்று தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மதிக்கப்பட்ட தமிழ் மக்களில் உயர் வர்க்கத்தினரான பொன். இராமநாதன் ஆங்கில நிருவாகத்தினருக்குப் பகிரங்கமாக சவால் விடுத்தார். முஸ்லிம்களுக்கு எதிரான கலகத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட கலகக்காரர்களை விடுதலை செய்யவும் உதவினார். இதனைக் கண்ணுற்ற முஸ்லிம்கள் தமது சமூகத்துக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட பழிவாங்கலாகக் கருதினர்.

எனினும், இந்நிலமை நீடிக்க வில்லை. ஆங்கில அரசு முஸ்லிம்களின் தனித்துவ அடையாளத்தை ஏற்று அங்கீகரித்தது. எம்.சி. சித்திலெப்பை போன்றோரால் ஆங்கில ஆட்சியாளர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக, முஸ்லிம்களின் குடும்பப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான 1886ஆம் ஆண்டின் 8ஆம் இல. மற்றும் 1888ஆம் ஆண்டின் 2ஆம் இல. முஹம்மதிய திருமண பதிவுச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் ஒரு சுவாரஷ்யமான விடயம் யாதெனில், இத்தகைய முஸ்லிம்களின் திருமணம் தொடர்பான தனியார் சட்ட முறைமை ஒன்றின் வருகைக்கு பொன். இராமநாதன் பின்னர் தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்ததுதான். இந் நடவடிக்கை மூலம் இராமநாதன் முஸ்லிம் சமூகத்தின் மீது கொண்டிருந்த வெறுப்பை தளர்த்திக் கொள்ள முயற்சித்தார்.



1930 மற்றும் 40 ஆண்டு காலப்பகுதிகளில் முஸ்லிம்களின் தலைமைகள் மீண்டும் திரும்பிச் சென்று சிங்கள அரசியல் கட்சிகளுடன் சங்கமமாகிக் கொண்டனர். அப்போது, 1915ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களை மறந்து தமது சுகபோகங்களுக்காக சேனநாயக்க அரசாங்கத்துடன் முஸ்லிம் தலைமைகள் இணைந்து கொண்டதாக தமிழர் தரப்பிலிருந்து விமரிசனங்களும் எழுந்தன.

(மீதி அடுத்த இதழில்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்சியை மக்கள்... 09ம் பக்கத் தொடர்

அவர் வந்த புதிதில் தொண்டமான் குடும்பத்தில் இருந்து இன்னொரு இளவட்டமும் களத்தில் இறங்கப் போகிறது என்று ஒரு பேச்சு எழுந்தது. நல்ல வேளையாக அது நிறைவேற வில்லை. ஒருவர் செய்யும் அழிச்சாட்டியங்களே போதும் சாமி!

தொண்டமான் நூற்றாண்டு தொடர்பாக நிறையவே பேசி விட்டோம். தொண்டமான் நூற்றாண்டு ஏன் விமரிசையாகவும் அர்த்த புஷ்டியாகவும் கொண்டாடப்பட வேண்டும் என்பதையும் பார்த்து விடுவோம்.

இ.தொ.கா. தலைமையின் அலட்சியமும் ஆடம்பரமும் கர்வமும் மிக்க போக்கினால் அதனுடன் இணைந்து பணியாற்றப் பலரும் தயங்குகிறார்கள். நல்லெண்ணத்துடன் அணுகினாலும் அங்கே இவர்களைப் பயன்படுத்தி விட்டு கறி வேப்பிலையாகத் தூக்கி எறிவது எப்படி என்ற சிந்தனையே காணப்படுகிறது.

மலையக மக்கள் முன்னணி ஒரு பேரெழிச்சியுடன் புறப்பட்டது. பெரிய சாமி சந்திரசேகரன் செய்து முடிப்பேன் என்று எழுந்து நின்றார். பின்னர் என்னவாயிற்று? அவர் மதுவுக்கு அடிமையானார்; சுற்றத்தார் ஓடினர்; காக்கைகளும் கூடின. இறுதியில் அவரும் வீழ்ந்தார். கட்சியும் வீழ்ந்தது.

தொண்டமான் என்ற பெரும் ஆகிருதிதான் இன்றைக்கும் இ.தொ.கா.வை இத்தனை சீரழிவுகளின் பின்னரும் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்பதும் அவர் பெயரை தமது சுயநலன்களுக்காகத் தொடர்ந்தும் பயன்படுத்திக் கொண்டிருந்தால் அது இ.தொ.கா.வை மிகவும் பாதிக்கும் என்பதும் இங்கே ஊன்றிக் கவனிக்கத்தக்க உண்மைகள்.

எனவே, தொண்டமான் பெயரை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக இந்த நூற்றாண்டை இ.தொ.கா. கொள்ள வேண்டும்.

தொண்டமான் நூற்றாண்டு ஞாபக விழாக் குழு என்ற ஒன்று இ.தொ.கா. வில் அமைக்கப்பட்டிருக்கிறதோ தெரியாது. அப்படி ஒரு குழு அமைக்கப்பட்டு செயற்பாட்டு சுதந்திரமும் வழங்கப்படுமானால், அக்குழுவுக்கு ஆறுமுகனோ, செந்திலோ தலைவராக இல்லாதவிடத்து, பல காரியங்களை அக்குழுவினால் ஆற்றக் கூடியதாக இருக்கும்.

பழைய தொழிலாளர் கூட்டம் இன்றில்லை. அரசு தொழில் செய்யும், சொந்தத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் ஆர்வமுடைய இளைஞர்கள் ஏராளமானோர் வேட்கையுடன் வெளியே காத்திருக்கிறார்கள். அரசியலிலும் சமூக தளங்களிலும் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக அர்ப்பணிப்பு சிந்தனையுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

இவர்கள் கால் போத்தல் சாராயத்துக்கும் சோற்றுப் பார்சலுக்கும் இலவசங்களுக்கும் அடிபணியத் தயாராயில்லை. சந்திரசேகரன் புது இயக்கம் ஒன்றை ஆரம்பித்து முழங்கியபோது அவரைத் தோளில் சுமந்து ஆர்பரித்தவர்கள் இந்த இலட்சிய இளைஞர்கள்தான். அதைவிடப் பெரிய இளைஞர் பட்டாளம் பல்வேறு அணிகளாக, இயக்கங்களாக மற்றும் சங்கங்களாக காத்திருக்கிறார்கள்.

இவர்களுக்கான கதவை இ.தொ.கா. தான் மூடி வைத்திருக்கிறது. இந்தக் கதவு வழியாக இன்றைய இ.தொ.கா. வுக்குள் நுழையவும் இவர்கள் தயாருமில்லை; நம்பவும் தயாரில்லை.

ஆனால், தொண்டமான் நூற்றாண்டு ஏற்பாட்டாளர் குழுவினால் இந்த இளைஞர் அமைப்புகளுடன் பேசி அவர்களுடன் இணக்கப்பாட்டுடன் வேலை செய்ய முடியும். ஆங்காங்கே செயற்திட்டங்களை நிறைவேற்றவும் முடியும். இதன் மூலம் நல்லெண்ணமும் புரிந்துணர்வும் கட்டி எழுப்பப்பட முடியும்.

இது மறுமலர்ச்சிக்கான நல்ல வாய்ப்பு; செய்வார்களா?

## நாட்டில் சகவாழ்வுக்கு... 12ம் பக்கத் தொடர்

அதனுடைய செயற்பாடுகளின் ஆவணங்களைப் பார்க்கின்றபோது, மிகவும் பரந்த நோக்கோடு அதற்கான ஏற்பாடுகளைச் செய்து செயற்பட்டிருக்கின்றார்கள்.

பின்னர், 2000ஆம் ஆண்டுகளில் Unity forum என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இடைக்கால யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்துக்குப் பல அச்சுறுத்தல்கள், பிரச்சினைகள் வடக்கு கிழக்கிலே விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டபோது அவற்றை எதிர் கொள்வதற்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களின் வகிபங்கு என்ன, முஸ்லிம் சமூகம் அடைந்து கொள்ள வேண்டிய விடயங்கள் என்ன என்பது பற்றிய விடையங்களை Unity forum அமைப்பு மேற்கொண்டது. அதேபோன்று, சுனாமியின்போது CCRR என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அதனுடைய வளர்ச்சிக் கட்டமாகத்தான் Muslim Council of Srilanka அமைப்பும் உருவாக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் பெரிய பங்களிப்பை சமூகத்திற்கு செய்து இருக்கிறார்கள்.

இவ்வாறு கடந்த காலங்களில் உருவாகிய அமைப்புகளின் வளர்ச்சிக் கட்டமாகத்தான் இதனைப் பார்கிறோம். அதனைக் குறைபாடாகக் கருதவில்லை.

இப்பொழுது இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற புதிய சூழ்நிலைக்குள் உலமாக்களையும் புத்திஜீவிகளையும் இயக்கப் பிரதிநிதிகளையும் கொண்டதாக இந்த நாடு தழுவிய ஷூரா கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை பலரும் உணர்ந்திருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் இதனை ஒரு சமூகப் பணியாக முன்னெடுத்து, காலத்தின் தேவையை பூர்த்தி செய்கின்ற உன்னதமான பணிக்காகத்தான் இடைக்கால குழு முன்வந்து கடந்த 6 மாதங்களாக கூட்டங்கள், விவாதங்கள், கலந்துரையாடல்களை நடத்தி இத்தகையதொரு கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

*எங்கள் தேசம்: தேசிய ஷூரா சபை முஸ்லிம் சமூகத்திடமிருந்து எவ்வகையான ஒத்துழைப்பை எதிர்பார்கின்றது?*

*நஜா முஹம்மத்:* பொது பல சேனா இது சம்பந்தமான பிழையான அபிப்பிராயத்தை பத்திரிகைகளினூடாகவும் ஏனைய ஊடகங்களினூடாகவும் நாட்டுக்குக் கொடுத்து வருகின்றது. ஷூரா சபையை ஒரு தீவிரவாத அமைப்பாக காட்டுகின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். ஆனால், ஷூரா சபை என்பது அத்தகையதொரு அமைப்பல்ல. இது நாட்டினதும் முஸ்லிம் சமூகத்தினதும் நலனை அடிப்படையாகக் கொண்டு இந்த நாட்டுக்கே உரிய ஜனநாயக ரீதியாக இயங்குகின்ற ஒரு அமைப்பு, இதனை இந்த நாட்டிலுள்ள அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, பெரும்பான்மை சமூகத்துக்கு இருக்கின்ற சந்தேகத்துக்கு விளக்கத்தை, தெளிவை நாங்கள் ஒவ்வொருவரும் முன்வைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். எனவே, இந்த தேசிய ஷூரா சபையின் நோக்கங்களை, அதனுடைய செயல்பாடுகளை, அதனுடைய கட்டமைப்பை முஸ்லிம் சமூகத்தில் இருக்கின்ற ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், அதனுடைய நோக்கங்களையும் செயல் திட்டங்களையும் கட்டமைப்பு பற்றியும் பெரும்பான்மை சமூகத்துக்கு விளங்கப்படுத்துகின்ற ஒரு பணியை முஸ்லிம் சமூகத்தில் இருக்கின்ற சகலரும் மேற்கொள்ள வேண்டும். பிழையான அபிப்பிராயங்கள் பெரும்பான்மை சமூகத்திடம் சென்று விடுவதற்கு முன்னால், இது பற்றிய ஒரு சாதகமான கண்ணோட்டத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பிருக்கின்றது. இதனை சமூகத்தினருக்கான ஒவ்வொரு பிரிவினரும் மேற்கொண்டு இதற்கு பங்களிப்புச் செய்ய முன்வர வேண்டும் என்பதுதான் ஷூரா சபையின் எதிர்பார்ப்பாகும்.



# ஆரோக்கிய தேசம்

▲ தொகுப்பு: எஸ். பாமிஸா அலி ▲

## இஸ்லாத்தின் பார்வையில் மனவெழுச்சி மதிநுட்பம்

(Emotional Intelligence-EI)

கடந்த இதழ் தொடர்ச்சி...

▸ எம். முஹம்மட் பைறோஸ் MSc. (Psy)

**3. சுய ஊக்கம் (Motivating oneself)**

எமது இலட்சியத்தை அடைவதற்காக மனவெழுச்சியை ஒழுங்குபடுத்துதல் முக்கியமானதாகும். இதில் சுய கட்டுப்பாடு, மனநிறைவு, உணர்ச்சியைக் கட்டுப்படுத்துதல் என்பன எமது சாதனையை அடைந்து கொள்வதில் பங்களிக்கின்றன. ஓர் இலக்கை அல்லது பணியை அடைந்து கொள்வதற்காக பிறரதும் சூழலதும் தலையீடின்றி சுயமாகச் செயற்படும் ஆற்றலே சுய ஊக்கம் எனப்படுகிறது.

வாழ்வில் எல்லா நிலைகளிலும் தன்னைத் தயார்படுத்திக் கொள்பவர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பதுடன் வினைத்திறனுள்ளவர்களாகவும் காணப்படுவர். இஸ்லாம் இதற்காக அடிப்படை வணக்க வழிபாடுகளில் இதனை அறிமுகம் செய்கிறது. உதாரணமாக, ஒரு மனிதன் எவ்வாறு நேரத்தை முகாமை செய்வது என அறிவுறுத்துகிறது.

தொழுகை என்ற நாளாந்த வணக்கத்தின் மூலம் ஒரு முஸ்லிமின் ஆன்மிக உணர்வு புத்துணர்ச்சி பெறுவதுடன் உலகப் பணிகளையும் குறித்த நேரத்தில் மேற்கொள்ள வழிகாட்டுகிறது.

மேலும், மனிதன் தனது சுய ஊக்கத்தில் கவனம் செலுத்துவதன் மூலமே அவனது வாழ்வில் முன்னேற்றம் காண முடியும்.

**4. மற்றவர்களின் மனவெழுச்சியை அங்கீகரித்தல் (Recognizing emotions in others)**

சுய விழிப்புணர்வில் கட்டியெழுப்பப்படுகின்ற ஓர் ஆற்றலே ஒத்துணர்வு (Empathy) எனப்படும். ஒருவரது மனோநிலை, நம்பிக்கை, விருப்பு-வெறுப்பு என்பன அவர்களது உணர்வுடன் தொடர்பானது. ஒத்துணர்வு எனும் பண்பு கொண்ட ஒருவராலேயே பிறரின் சிந்தனை மற்றும் மனோநிலையை விளங்கிக் கொள்ள முடியும்.

நீங்கள் விரும்புவதை உங்கள் சகோதரனுக்கும் விரும்பாதவரை நீங்கள் விசுவாசம் கொண்டவர்களாக ஆக முடியாது. (ஸஹீஹுல் புகாரி)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் பல்வேறுபட்ட மனிதர்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொண்டனர். ஏனெனில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வேறுபட்ட மனிதர்களின் உணர்வுகளை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். ஒருவரது இயலுமை, ஆற்றல், விளங்கிக் கொள்ளும் திறன் என்பவற்றுக்கு ஏற்ப பதிலளித்தமை, நபியவர்கள் இவ்வாற்றலில் உச்ச நிலையில் இருந்தமைக்கு சிறந்த சான்றாகும். இதனால்தான் பெருமானார் அவர்களை சந்தித்து திரும்புகின்றவர்கள் தனது பிரச்சினைக்குத் தீர்வு பெற்று மனநிறைவுடன் சென்றனர்.

**5. உறவுகளைக் கையாளுதல் (Handling relationships)**

மற்றவர்களின் உணர்வுகளை மதிக்கின்ற, முகாமை செய்கின்ற திறமையின் ஒரு பகுதியாக உறவினைக் கையாளுதல் காணப்படுகின்றது. இஸ்லாம் மற்ற மனிதர்களுடனான உறவைப் பேணுவதை வலியுறுத்துகிறது. ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு சகோதரராவார் எனக் கூறி சகோதரப் பிணைப்பை உருவாக்கியுள்ளது. இதுவே இஸ்லாம் கூறும் சமத்துவமாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த சமயம் ஒருவரை ஒருவர் நேசிக்குமாறும் ஒருவருக்கு ஒருவர் வாழ்த்துச் சொல்லுமாறும் போதித்தார்கள்.
அடிமைகளிடத்தில் இரக்க சிந்தனையுடன் நடந்து கொண்டார்கள். நபிகளாரின் தோழர்கள் ஒவ்வொருவரும் தாமே நபிகளாருக்கு நெருக்கமானவர் என எண்ணும் வகையில் நபிகளார் ஒவ்வொருவருடனும் தனது உறவினைப் பேணினார்கள்.

“நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் அனைவரும் சகோதரர்களே. ஆகவே, உங்கள் சகோதரர்களுக்கிடையில் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலை நிறுத்துங்கள். இதில் அல்லாஹ்வுக்கு பயந்து நடங்கள். இதன் காரணமாக அவன் அருளை நீங்கள் அடைவீர்கள்.” (அல்குர்ஆன் 49: 10)

எனவே, இஸ்லாமிய நெறிகளைப் பின்பற்றி எமது மனவெழுச்சியையும் உணர்வுகளையும் முகாமை செய்வதன் மூலம் மேலே கூறிய மனவெழுச்சி மதிநுட்பத்தின் பண்புகளை அதிகரிக்க முடிவதுடன், அது எமது ஈருலக வாழ்வின் வெற்றியிலும் பங்களிப்புச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புறவியல்

## கிழக்குத் தென்கோடி

ஏ.எம்.எம்.ஸியாத் - இறக்காமம்

(சென்ற இதழின் தொடர்...)

### மரபுத் தொடர்கள்

மரபு வழியாகப் பயிலப்பட்டு வரும் இத்தொடர்கள் வெளிப்படையாகப் பொருளை உணர்த்தாது. நேரடிப் பொருள் காண்பதும் அரிது. இத்தொடர் உணர்த்தி நிற்கும் பொருள் வேறானதாகக் காணப்படும். உதாரணமாக, 'கை கலத்தல்' என்பது 'சண்டையிடல்' எனும் பொருளைத் தருகின்றது; வெளிப்படுத்துகின்றது. இதனைக் கற்றோர் அனைவரும் அறிந்து கொள்வர். ஒரு பிரதேசத்திற்குரித்தான மரபுத் தொடர்கள் அப்பிரதேசத்தில் செல்வாக்குப் பெற்ற சமயம், கலாசாரம், அயற் சமூகம் முதலானவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டதாகக் காணப்படும். அதனை ஏனைய பிரதேசங்களில் வாழ்கின்றவர்கள் அறிந்து கொள்வது கடினமாகும். இத்தகைய மரபுத் தொடர்கள் அப்பிரதேசத்தின் நாட்டாரியலுக்கு உட்பட்டதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

தென்கிழக்கிலங்கைக்கு உரித்தான மரபுத் தொடர்கள் சிலவற்றை படித்து அவற்றின் பொருளுண்மை எத்தகையது எனத் தெரிந்து கொள்வோம்.

ஓதவாக்கர: வீட்டிலோ, கிராமத்திலோ பெறுமானம் அற்றுத் திரிகின்றவர்களை இவ்விதம் அழைப்பர். இவர்களால் எவ்விதப் பயனுமில்லை.



கணகாட்டுப்படுத்தல்: தொல்லை கொடுத்தல்

கண் குத்துதல்: பொருளொன்றில் ஆசை வைத்தல். திருடர்கள் பொருளொன்றை பகலில் காண்பது, அதனைத் திருட வேண்டும் என எண்ணிக் கொள்ளல்; இரவு வேளையில் திருடுதல்.

அவ்வாறே அழகான பெண்ணைக் கண்டால் அவளைத் திருமணம் செய்ய வேண்டும் என முனைப்பாக இருப்பது.

கண் பிரட்டுதல்: பயமுறுத்தல்

பெரியோர் பேசிக் கொண்டிருக்கும் நேரம் பிள்ளைகள் அவ்விடம் வரும்போது, தாய் கண்ணைப் பிரட்டிப் பார்த்தால், பிள்ளைகள் அவ்விடம் விட்டும் நகர்ந்து போய்விடுவர். இதற்கு இணையான மரபுத் தொடராக 'கண் காட்டுதல்' என்பதும் பயன்படுத்தப்படுகின்றது.

கண்ணைப் பிரட்டுதல்: குளிரால் விழி பிதுங்குதல்

கரையேத்துதல்: உதவி செய்தல்

வேலைத்தலம் ஒன்றில் ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட வேலை அவரால் குறித்த நேரத்தினுள் பூர்த்தி செய்யப்படாதபோது, வேலையைப் பூர்த்தி செய்த ஏனையோர் அவருக்கு உதவி செய்து அவரின் வேலையைப் பூர்த்தி செய்தல். இது அதிகமாக வயல் அறுவடைகளின்போது பயன்படுத்தப்பட்டது.

ஏக்கலிப்பு: இல்லாமல் தவித்தல், வயிற்றுக்கு உணவில்லாது வாடுதல்.

ஏக்கலித்வன்: வறியவன்

எரப்பணி/ எரப்புணி: உலோபி

கண்டார வாலாட்டி: காணும்போது மட்டும் நட்புச் செய்பவன்

கட்டிக்கிப்புரழ்தல்: ஒருவரைஒருவர்தாக்கிச் சண்டையிடல்

கடப்படி: இழிவானன், இழிந்த செயல்களில் ஈடுபடுபவன்

சுசவாரம்: ஒழுக்கம் கெட்டவன்

சுருக்குதல்: பழி உணர்வுடன் ஒருவனை வருத்துதல்

கண்பொண்டாட்டி: கணவனை இழந்தவள்

மண் போடுதல்: பிழைப்பைக் கெடுத்தல்

மண்டையைப் பிய்த்தல்: கடுமையாக யோசித்தல்

முனியாண்டி: எப்பொழுதும்தன்குறையைக்கூறித்திரிபவன்

முட்டையில்மயிர்புடுங்குதல்: நேர்த்தியிலும்குறைகாணல்

பொட்டி வித்த: உள்ளார்ந்த இரகசியம்

பம்மாத்து: ஏமாற்று வேலை

வளப்பூத்தல்: பூஞ்சனம்

மேற்கூறப்பட்ட நாட்டார் மரபுத் தொடர்கள், குறித்த பிரதேசத்தின் பாரம்பரிய மொழிக் கோலத்தை வெளிப்படுத்துவதோடு அதன் தனித்துவத்தையும் பறைசாற்றி நிற்கின்றன. (தொடரும்)

---

## வாசகர் மனதில் வாழும் கடைசி வேரின் ஈரம்

-சம்மாந்துறை அநூஸா அஸீஸ்-




நூலின் பெயர்: கடைசி வேரின் ஈரம்
நூலாசிரியர்: கலாபூஷணம் எம்.எம். அலி அக்பர்
வெளியீடு: கிண்ணியா பேனா பப்ளிகேஷன்
விலாசம்: 18, பழைய இலங்கை வங்கி வீதி, கிண்ணியா- 04
தொலைபேசி: 075 2617513
விலை: 300.00

112 பக்கங்களுள் 12 சிறுகதைகளை உள்ளடக்கிய எம்.எம். அலி அக்பர் அவர்களின் 'கடைசி வேரின் ஈரம்' என்ற சிறுகதை தொகுதி இன்று இலக்கிய வானில் ஜொலிக்கிறது. இந்நூலில் வரும் 12 சிறுகதைகளில் கடைசி ஆசை என்ற சிறுகதையில் மகளை பிரசவித்த தாய் மறு உலகை எய்து விடுகிறாள். தனது மகளுக்காகவே வேறு எந்தப் பெண்ணையும் மணமுடிக்காமல் எல்லா சுகங்களும் இனி தன் மகனுக்காகவே என்று சப்தம் கொண்டு வாழ்கிறார் தந்தை.

அவன் படித்து உயர்வடைந்து வெளிநாட்டில் உயர் பதவி வகிக்க வேண்டும் என்பதே அவரது ஒரே ஆசை. ஆனால் விதி, மகன் பதவி கிடைத்து விமானம் ஏறும் வேளையில் தந்தையின் உயிர் பிரிவதாக இக்கதை தத்ருபமெடுக்கிறது.

மரங்களுக்கும் மரணம் உண்டென்பதை பட்டுக் கிடக்கும் மரமொன்றின் வேர்களைத் தொட்டுத் தடவிப் பார்க்கும்போது அதன் கடைசி வேர் மண்ணில் புதையுண்டு கிடப்பதைக் கண்டு, மரத்தை உண்டு பண்ணியவர் இழுத்து சுரண்டிப் பார்த்ததும் இறுதிக் கட்டம்தான் இம்மரத்திற்கும் உண்டென்பதை ஆழகாக சித்தரித்துக் காட்டியிருக்கிறார் நூலாசிரியர்.

மிகவும் அற்புதமான இக்கதைகள் வாசகர்களை வாசிக்கத் தூண்டும் அளவிற்கு படைக்கப்பட்டுள்ளது. இதே போன்றுதான் ஏனைய 10 சிறுகதைகளும் வெவ்வேறு கோணங்களில் இருந்து எழுதப்பட்டுள்ளன. இச் சிறுகதைத் தொகுப்பு நிச்சயம் வாசகர் மனதில் வாழும் என்பதில் ஐயமில்லை.

---



## நினைவுகளில் தொங்கும் நீர் ஊஞ்சல்

-ஓட்டமாவடி அறபாத்-

தொடர் - 41

போர் உச்சத்தில் இருந்த காலப்பகுதி,

2003இல் ராஜகிரியவில் மேற்கொள்ளப்பட்ட புலிகளின் அதிரடித் தாக்குதல்களை பொரல்லையில் இருந்தபடி கேட்டு அதிர்ந்திருக்கின்றேன். ஒரு விடுமுறை நாளில்தான் இந்த தாக்குதல் நடந்தது. ஜன்னல் கம்பிகள் அதிர, துவக்குகள் நேருக்கு நேர் மோதும் இசை அழகாகவும் திகிலாகவும் இருந்தது. வனவாசல் அடுக்குமாடித் தொடருக்குள்ளும் புலிகள் புகுந்திருந்தனர். அந்நேரம் என்னுடன் சஊதி அரேபிய விருந்தாளி ஒருவரும் தங்கியிருந்தார். அவர் அச்சத்தில் ஆடிப்போனார். பயத்தில் உறைந்திருந்த அவர் முகம் சிவந்து கன்றிப்போய் இருந்தது. முகம் குப்புறப் படுத்தபடி கலிமாவை வேகமாக உச்சரித்தபடி இருந்தார்.

எமக்கென்றால் இது பழகிய சங்கதிதான் பயப்பட வேண்டாம் என்றேன். எனினும், அவர் மாலையே கிளம்பி நட்சத்திர ஹோட்டலுக்கு குடி புகுந்துவிட்டார். பாராளுமன்றத்திற்கு வரும் கௌரவ உறுப்பினர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் அது என்று பேசிக் கொண்டார்கள். என்றாலும், கடைசி நேரத்தில் முறியடிக்கப்பட்டது.

அப்போது ராஜகிரிய ஆயுர்வேத மருத்துவ பீடத்திற்கு அருகிலும் சூழவும் பற்றைக் காடுகள் முளைத்திருந்தன.கொழும்பு நகரமே குப்பைக் காடாகக் காட்சியளித்த காலம். அழகியலைப் பற்றி ஆட்சியாளர்களே அலட்டிக் கொள்ளாத காலம். அதிரடித் தாக்குதல்களை சமாளித்தாலே போதும் என்றிருந்த காலம். பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்றிருந்தவர்களுக்கு அழகியல் பற்றிச் சிந்திக்க நேரமேது?

குண்டு வெடிப்பிலிருந்தும் தற்கொலைதாரிகளிடமிருந்தும் எப்படித் தப்பிப்பது என்று சண்டை பிடித்துக் கொண்டு ஆளாளுக்கு பதறித் திரிந்தார்கள். சுற்றுலாப் பயணிகள் வந்து தலைநகரின் கம்பீர அழகையும் நாட்டின் வசீகரத்தையும் இரசிக்கும்படி எதுவும் நடைபெறவில்லை. எனவே, நினைத்த நேரத்தில், நினையாத இடங்களில் குண்டுகள் வெடித்து மனிதர்கள் சிதறிக் கிடந்தனர். நாங்கள் வெளியே சென்று திரும்பி வந்தால் மட்டுமே மெய். அப்படியொரு நெருக்கடியான கொலைக் காலத்தில்தான் கொழும்பில் 10 வருடங்களைக் கடத்தியிருக்கின்றேன். சேதமில்லாதது இறைவனின் கடாட்சம்.

இப்போது கொழும்பு நகரைப் பார்க்கின்றபோது நெஞ்சம் குளிர்கிறது. அழகும் கம்பீரமும் நிறைந்த தலைநகர் வெளிநாட்டவரை மட்டுமல்ல, நம் நாட்டவரையும் சுண்டியிழுக்கின்றது. நடைபாதை, வியாபாரிகளின் தொல்லைகளும் பிச்சைக்காரர்களின் தொல்லைகளும் விலைமாதர்களின் பேரம் பேசுதல்களும் அற்ற புறக்கோட்டையைக் கடக்கும்போது கடந்தகால நெருக்கடிகள் சட்டெனத் தோன்றி நீர்க்குமிழிபோல் உடைந்து போகின்றன.

இக்காலங்களில் அடிக்கடி நான் ஊருக்குப் போகமாட்டேன். தனியாள் என்பதால் நான்கைந்து மாதங்களுக்கு ஒரு தடவைதான் ஊரை எட்டிப் பார்த்துவிட்டு வருவேன்.

இக்காலப்பகுதியில் நண்பர் பவ்சர் பார்க் வீதியில் வசித்து வந்தார். சரிநிகர் பத்திரிகை கிருலப்பனையில் இயங்கி வந்தது. பின்னர் 'நிகரி' என்ற பெயரில் அதே குழுமம் ஒரு பத்திரிகையை நடத்தியது. அங்கே நண்பர்களான ஷகீப், சிவா போன்றவர்களின் தோழமை கிடைத்தது. நண்பர் எஸ். நளீம் மருதானையில் இருந்தார். பிற்காலத்தில் முஸ்லிம் குரல் பத்திரிகையை நண்பர் பவ்சருடன் இணைந்து நாங்கள் நடத்தி வந்தோம். பவ்சர் பின்னர் வொசல் லேனுக்கு மாறிவிட்டார். முஸ்லிம் காங்கிரசின் தலைமையகமான தாருஸ்ஸலாம் அவரின் வீட்டுக்கு அருகாமையில்தான் இருந்தது.

முஸ்லிம் குரல் பத்திரிகை குழுவில் நண்பர் ஆத்மாவும் இணைந்திருந்தார். தோழர் அப்துல் மற்றும் முஹ்சீன் ஆசிரியரும் முஸ்லிம் குரலில் இணைந்திருந்தனர். மூன்றாவது மனிதன் சஞ்சிகையை பவ்சர் கொழும்பிலிருந்துதான் இக்காலத்தில் நடத்தி வந்தார்.

நண்பர் பவ்சரின் பம்பலப்பிட்டி மிலேனியம் புத்தக நிலையத்தின் மேற்தளத்தில் முஸ்லிம் குரலுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். அங்குதான் பத்திரிகை வேலைகளையும் பங்கு போட்டுக் கொண்டு செய்தோம். நான் மாலை ஐந்து மணிக்கு அலுவலகம் முடிந்து பொரல்லையிலிருந்து பம்பலப்பிட்டிக்கு வந்துவிடுவேன்.

நண்பர் என். ஆத்மா ரூபவாஹினியிலிருந்து ஆறு மணிக்குப் பின் வருவார். ரஸ்மியும் வருவார். நண்பர் சிராஜ் போன்றோர் பத்திரிகைக்கு உழைத்தவர்களில் முக்கியமானவர். மற்றவர்கள் எங்களுக்காகக் காத்திருப்பார்கள். ஒவ்வொரு ஆக்கத்தினையும் வரிக்கு வரி வாசித்து செவ்விதாக்கம் செய்வோம். நள்ளிரவு 2மணி அல்லது 3 மணிவரை முஸ்லிம் குரல் பத்திரிகையில் பணிகளை சம்பளமின்றி தியாகத்துடன் ஒரு சமூகப் பணியாக செய்து வந்தோம்.

இலண்டனிருந்து பத்திரிகை தொடர்பாக அடிக்கடி விசாரித்து ஊக்கப்படுத்தியவர் சட்டத்தரணி பசீர் அவர்கள். பொருளாதார உதவிகளும் செய்திருக்கிறார். முஸ்லிம்களின் பிரச்சினைகளைச் சொல்ல அப்படியொரு ஊடகத்தின் தேவை அவசியமாக உணரப்பட்ட காலம் அது.

ஊஞ்ஞல் இன்னும் ஆடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேட்டு வட்டை

தீக்குச்சி உரசி உச்சந்தலை கொழுத்துவதான இந்தக் கோடை வெகருக்குள் என்னதான் வீரியப்படுகிறது நமக்கு. பிரபஞ்சத்தைச் சூடேற்றி மீளவும் தன் புள்ளிக்கு சும்மா திரும்புகிறது சூரியன். அநீதங் குடிகொள்ளும் வியாபித்த இப்பெரு நிலத்தில் காலம் விதைத்து விட்ட அப்பாவிக் குழந்தைகளாய் அந்தரத்தில் சூழல்கிறது காலம். வாழ்வின் அரைவாசியைத் தின்ன வருகிறாப்போல அவலக் கணங்கள். படுவான் கரையின் மேட்டு வட்டை காய்ந்து கிடக்க தலை சவட்டி ஆடிய கதிர்கள் குடல் நலிந்து காய்ந்து கருகின. மேய்ச்சல் நிலத்தில் விடப்பட்ட கறவைப் பசுக்கள் வீணி வடித்தன. ஒற்றைக் கால் மடித்துக் சொண்டு விரிக்கும் கொக்குகள் தெத்தித் திரிந்தன. பிரப்பம் பற்றைக்குள் வால் பெருத்த குருவிகள் நளினமாடின. எருக்கு இலையின் ஆதிக்கமாய் குடிகொண்ட வட்டை பஞ்சாய்ப் போயின.

மக்கம் அடித் தெருவை ஊடறுத்து நடக்கையில் சனங்கள் இளைப்பாறும் அடிபெருத்த ஆல மரம் நிழலைத் தந்தன. பள்ளி நாட்களில் புத்தகப் பையை வயல் பரணில் இலுக்குக் கற்றைக்குள் சொருகி விட்டு தும்பிகள் பிடித்த வட்டை. எங்கள் வயதுகளையும் கடந்து பல தலைமுறைப் பருவங்களையும் கண்ட வட்டைக்குள், கூட்டாளிகளோடு நடுநிசியிலும் சுற்றிய பொழுதுகள்...

மேட்டு வட்டையின் பின்புறம்தான் ஆத்திமேடு அண்டங் காக்கைகளும் வெளவால்களும் தொண்டை கிழிக்கும் நிரந்தர மையம் இந்த மேடு. புற்களும் ஆற்று வாழைகளும் வளர்ந்து தலை சவட்டிற்று. ஆள் அரவமற்ற வெளியில் தினமும் கால்நடைகள் அறுவைக்காக இரத்தம் பீச்சின. மிஞ்சிருக்கும் எலும்புகளை வாலறுந்த நாய்கள் பதம் பார்த்தன. வரம்பை மறித்தோடுகிற கலங்கிய நீருக்கடியில் தலை உயர்த்திப் புரண்டன தண்ணிப் பாம்புகள். ஆத்திமேட்டுக்குள் பின் புற சுரி மடுவிற்குள் தூண்டிலில் கெழுத்தி மீன் பிடித்து பிரம்புக் கூடையை நிரப்பிக் கொண்டிருந்தனர் சிலர்.

இப்படிக் கிடந்த மேட்டு வட்டைக்குள் இப்போது சனங்களின் நடமாட்டம் மெல்ல மெல்ல உசும்புகிறது. பேரலை அனர்த்தம் உயிர்களைக் காவு கொண்டு கடல் வாயிலிருந்த குடிமனைகளை அள்ளிச் சென்ற வாழிடங்களுக்கு இன்னும் ஒரு கெதியுமற்று குளக்கட்டோரம் மரந்தடிகளை வேய்ந்து கொண்டு வாழ்வை உசிரில் கட்டி இழுத்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு புல்லடி சதுரங்கத்திலும் எம்.பி.மார் மாலை மணிகளோடு அலங்கரித்து வருவார்கள் வட்டையை மண் நிரப்பி வீடு, தொடர் மாடிகள் வசதி செய்யவென வாய்கிழிய அலறுவார்கள். பின்னர் மறைந்து விடுவினம். மீளவும் ஊருக்குள் அவர்கள் தலைகாட்ட மாரி மழையும் சனங்களைச் சுகம் விசாரிக்கும். இப்படியாய் நகர்ந்தன பொழுதுகள்...

"ஆ... என்ன? தமீம் இண்டைக்கு மேட்டு வட்டைக்கே சனக் கூட்டம்... வாகனங்கள் எல்லாம் கூடக் குறைய உலாத்துது?"

பிடரியில் கையைக் கட்டிக் கொண்டு நின்ற தமீமிடம் விசாரித்தேன். தமீம், ஒரு காலத்தில் எழுத்துக்களால் அறியப்பட்டவன். 'தடங்கள்' கவிதைகளால் பேசப்பட்டவன். கடல் வாய் முகப்பில் கொழுத்த வசதியோடு வாழ்ந்தவன். குத்து மயிர் அரும்பிய மீசைப் பருவத்தோடு பேனாவைப் பயன்படுத்தியவன் இன்று அவலம் தோய்ந்த தாடியோடு முணுமுணுக்கத் தொடங்கினான்.

"அது... நம்மட ஆக்களுக்கு மேட்டு வட்டைக்குள்ள கட்டின வீடுகளக் குடுக்கல்ல. குமர், குட்டிகளெல்லாம் நரைத்து மூப்படைந்து விரக்தியோடு காலந் தள்ளியதுதான் மிச்சம். எல்லார்ர பிள்ளையளும் தெருவோரங்கள்ள அலைஞ்சது போதாதா? எனக்கும் ஒரு வீடு இதில. பல வருசங்கள் உருண்டு போயிற்று ஏன் தாராங்க இல்ல. மக்கள் கூடிக் கூடி அலுத்துப் போயிற்றாங்க. அதுதான் தகரக் கொட்டில்கள்ள சீவியம் நடத்துகிற நம்மட சனங்கள் ஒரு ஏற்பாட்டை செய்றாங்க"

என்றவாறு தமீம் முன்னாலிருந்த குறுக்கு ஒழுக்கைக்குள் நடக்கத் தொடங்கினான்.

நேரம் பொழுதுகளை விழுங்க எறும்புகள்போல சனங்கள் சங்கமித்தனர். மண் போட்டால் மண் கீழே விழாது; அப்படிச் சனத்திரள். கூக்குரல்கள் ஏழு வானங்களையும் கடந்து அண்டத்தை பிளந்தது. பல வர்ண மட்டைகளைச் சுமந்தவாறு சனங்கள்,

"ஐயாமார்களே! எங்களுக்கான வீடுகளைத் தாருங்கள். இன்னும் பொறுத்தது போதாதா? நாங்கள் உங்களுக்குத்தானே துண்டு போட்டம். அந்த வாக்குகள் எங்கே? இறைவன் மறுமையில் விசாரிப்பான். உங்களுக்கு குமர் குட்டி இல்லையா"

என்ற வாசகங்களை கையில் தாங்கியபடி சாப்பாடும் ஒரு மிடருத் தண்ணியும் இல்லாமல் சிறுசுகளை கக்கத்தில் இடுக்கிய தாய்மார்கள் கெஞ்சினர். விழிநீர் உறைந்து வட்டையை நிரப்பி விடும் போலிருந்தது.

"அடுத்த மாரிக்கு நாங்க எங்கே போறது"

இளந்தாரிப் பொடடியனுகள் வெட்கத்தை விட்டும் கோஷம் எழுப்பினர். அந்தி நேரம் மங்கிக் கொண்டிருந்தது. சில பண முதலைகள் குளிரூட்டிய வாகனங்களிலிருந்து முகஸ்துதிக்காக இரணப் பொதிகளை பரிமாறிக் கொண்டிருந்தனர். சில வாகனங்களில் காக்கியுடை போர்த்தியவர்கள் புடை சூழ பிரதான வீதியைக் கடந்து வட்டைக்குள் ஊடறுத்தனர்.

சனங்களின் குரல்கள் உக்கிரமடைந்தன. பட்டாசுக் கோர்வைகள் வளவு மூலைக்குள் வெடிப்புக் கொண்டன. பூப்பந்தல்கள் அந்தரத்தில் ஆடின. துப்பாக்கி சுமந்த பாதுகாப்பு முதுகுகள் வயல்களுக்குள் காவலுக்காகப் பதுங்கின.

பெரும் புள்ளிகள் கழுத்துப் பட்டிகளைச் சரி செய்து முகங்களைக் காட்டினர். மாலைகள் கழுத்துகளை நிறைத்தன. வாக்குறுதிகள் பத்தோடு பதினொன்றாய் மிதந்து கொடிகளோடு காற்றில் பறந்தன.

"இன்னம் கொஞ்ச நாளைக்குள் வீடுகள் தருவம் கவலைப்பட வேணாம் சத்தியமாகச் சொல்றம்"

ஒலிவாங்கிகள் அதிர்ந்தன. அரிச்சந்திரன் பரம்பரைபோல கம்பீரமாய்ப் பதில் தெறித்தன. சனங்களின் கோஷங்கள் மௌனப்பட்டது. வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் தாவப் போவதை அறியாமல் கண்கள் மறைத்தன. தற்காலிகக் கொட்டகைக்குள் செல்வதற்காக சனங்களின் பாதங்கள் முஸ்தீபாகின. மகஜர்கள் அதிகாரிகளின் கரங்களுக்குள் மூச்சுத் திணறின. மகஜர்கள் எழுதிய பணத்தைக் கணக்குப் பார்த்தால் தங்கத்தில் ஒரு வீடு கட்டியிருக்கலாம். படித்ததுகள் சில மூக்கில் விரல் வைத்தன.

காலச் சக்கரம் சுழல மார்கழியும் எட்டிப் பார்த்தது. ஏழு வெள்ளம் போட்டு மேட்டு வட்டை சமுத்திரம் கொண்டன. பிற்கனிபா மாமா காவல் காத்த மாட்டுப் பட்டிகள் வெள்ளத்தோடு அள்ளுண்டு போயின.

"எல்லாமே நாசமாப் போச்சே"

தலையில் கை வைத்து வாய்க்காலோரம் புலம்பினார் மாமா. பயிர் பச்சைகள் மிதந்தன. கூடாரங்கள் காற்றுக்கு ஆடியபடி முன்னெச்சரிக்கை தந்தன. வரம்புகளை உடைத்துக் கொண்டு வெள்ளம் கரைபுண்டது. காட்டுமேல் வெள்ளமும் குடியிருப்புகளால் வழிந்தன. சொந்தமாகக் கிடைக்காத இருப்பிடங்களைக் கழுவிச் சென்றது. சிறுவர்கள் பதறினர். நிவாரணங்கள் பதிவு கொண்டன. ஆத்திமேட்டு மர உச்சிகளில் கூடிய காக்கைகள் ஈனக்குரல் எழுப்பின.

அதிகாரிகளின் குரல்கள் அறிக்கையாய் மின்னின. தலையில் மூட்டை முடிச்சுகளுடன் வட்டையை விட்டு ஊருக்குள் நகரத் தொடங்கினர் சனங்கள். நடப்பதற்குத் திராணியில்லாமல் வலுவிழந்த சுமைகளோடு இளைப்பாறினர் சிலர். சோகங்கள் உடம்பைச் சுற்றின.

சனங்களின் கண்கள் குளமாகின. ஒப்பாரிகளால் ஊரின் கதவுகள் திறந்தன. பிரமையாய் உணர்வுகள் செத்துப் போயின.

"இனி எப்போது மீண்டும் செல்வது" பெருமூச்சு விட்டனர்.

**மருதமுனை விஜிலி**

உடல் வலிப்புக் கொள்ள நாட்களை நகர்த்தினர். புதியவர்கள் வாக்குறுதிகளை மீண்டும் அள்ளி விதைத்தனர். கையறு நிலையிலிருந்த மக்கள் இன்னும் நம்பினர். வாழ்வியல் மீதான கொந்தளிப்பு இன்னும் ஆர்ப்பரித்துச் சென்றது.

மனச்சாட்சியில்லாத மானுடர்கள் நிரம்பிய பூமி சலித்துக் கொண்டது. எனக்குள்ளும் உணர்வுகள் நோவு கொண்டன. மனிதாபிமான இதயங்கள் சில சனங்களுக்குக் கவசங்களாகின. எனது விழி நீர் கசிந்து நிலத்தில் கொட்டியது. 'மகஜர்'கள் சில அத்த வெள்ளத்துள் மிதந்து கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதடுகளில் குர்ஆன் உட்காரும்போது...

அல்குர்ஆனுக்குள் உன்னை
நுழைத்துக் கொள்கிறபோது
ஆயிரம் மின்னல்கள்
உனக்குள் ஊடுருவும்!
நாடி நரம்புகளில்
புதிய உதிரம்
ஊற்றெடுக்கும்!
மூளையின் கறைகள்
சுத்திகரிக்கப்படும்!
சின்னஞ் சிறிய
உன்னிருதயம்
விஸ்தீரணமாகிப் போகும்
கண்களில் பிரகாசமும்
உதடுகளில் புன்னகையும்
உட்கார்ந்து கொள்ளும்!
நீ கூட
நிஜமான மனிதன்
ஆகிடலாம்!

எம்.ஐ.எம். ஸுபைர் (பலாஹி) – காத்தான்குடி



## கோணல்

என் உறவுகள் மட்டுமா?
கணவனும் கூடவே
என்னை ஏறிட்டும் பார்ப்பதில்லை
என் நியாயங்கள்
நிரூபிக்க முடியாமல்
மௌனித்துப் போகிறேன்
என் இதயக் கண்ணாடி
உடைந்து சிதறுகிறது
ஒட்டிப் பார்க்கிறேன்
அதில் முகம் தெரிகிறது
முற்றிலும் கோணலாய்

ஷிபானா ஷாபி (இஸ்லாஹி)



## உயிர் மொழி

## பொடுபோக்கு

சிறுக்கர்கள் உன் முகத்தில்
சிறுநீரை கழிக்கின்றார்
சிரித்தபடி நீ நாளும்
சிறப்பாக கண்ணுறங்கு...

அரசின் பால் குடித்து
ஆ... வென்று வாய் பிழந்து
முட்டைக்குள் ஒழித்தபடி
முழு நாளும் கண்ணுறங்கு...
காகிதமாய் உனை மாற்றி
கால்களின் கீழ் போடுகிறார்



கவுட்டுக்குள் கை வைத்து
ஹாயாக கண்ணுறங்கு...

யார் அழிந்தால்
உனக்கென்ன
யார் அழுதால் உனக்கென்ன
ஊரழிந்து போனாலும்
ஊமையாய் நீ உறங்கு...

எலும்புக்கும் தோலுக்கும்
ஏற்றபடி வாலாட்டி
அரசென்னும் தொட்டிலிலே
அழகாக கண்ணுறங்கு...

கவிஞர் பொத்துவில் அஸ்மின்

## நேர்மை-கூர்மை



மகளே படிக்காதே!
படித்தாலும்
டாக்டருக்கு படிக்காதே!
டாக்டரானாலும்
கத்திக் குத்தை
கம்பிக் குத்தாய் எழுதாதே!

மகளே படிக்காதே!
படித்தாலும்
வக்கீலுக்குப் படிக்காதே!
வக்கீலானாலும்
உன் மனதை
நீ அணியும்
கறுப்புக் கோட்டாய் வையாதே!

மூதூர் றிஸ்வின்

## எகிறும் ஈமான்



எழுந்திருக்க எத்தனியுங்கள்
என்னினிய உடன் பிறப்புகளே!
நவீன ஜாஹிலிய்யத்துள்
லயித்துப்போன உள்ளங்களை
பிய்த்தெறிந்து விட்டு
இன்னுமொருமுறை
இறையாட்சி ஒன்றுக்கான
இயக்கத்தைப் புதுப்பிப்போம்!

இனிமேலும் இயலாது
அவமானத்தை அள்ளிவருபவரை
ஆதரிப்பதற்கு!
எதிரிகளின் கரங்களை
எடுத்து முகருபவனை
ஏற்பதற்குமில்லை

யூ.எல்.எம். நஜீப் – ஒட்டமாவடி

## பாலைவனம் நோக்கிய...

முற்றுப் பெறாத
முனகல் சப்தங்கள்
நட்சத்திர நிமிஷங்களில்
நிலா உலாப்போகும்
காற்று வெளியில்
காய்ந்து போகும்
கல்யாண ஆசைகள்

இருப்பின் வலி
இருள் முற்றத்தில்
ஏக்கங்களைத்
துப்பும்

பூத்துக் கிடக்கும்
வாலிபக் கனவுகளை
சீதனப் பேய்
திருடிக் கொள்ளும்

மஹர் தரும்
மருமகன் தட்டுப்பாட்டால்
சீதனப் போரில்
உழைத்துப் போராடி
உருக்குலையும்
வாப்பாமார்

சீதனம் கொடுத்து
மணமகன் வாங்க
வாப்பாவின்
உழைப்பு போதாது
நான் வெளிநாடு
செல்லப் போகிறேன்
அறைக்குள் இருந்து
அவ(ல)ள் குரல்
கேட்கும்...

முபஷ்ஷிரா நௌபர்
உடதலவின்ன



கூட்டம்
கூட்டமாய்-
ஓநாய்கள்
வெறித்தனத்தோடு
திரிகின்றன
எதிரிகளென்று
எண்ணிக்கொண்டு
பிறிதொரு
இனத்தை
சப்பித்
துப்பிவிட
துடிக்கின்றனர்...
ஊமைகளுக்கு
மட்டும்
பாத்திரம்
கொடுக்கப்படும்
இந்த
மேடையில்
உரத்துக்
குரலெழுப்பினால்

காதல்
சொந்த சமூகம்
நொந்து-
நிற்கையிலும்
மௌனிக்க
வைக்கிறது
சொரணை கெட்ட
இந்த ஆசாமிகளை...

## காத்திருக்கிறோம்

கத்திகள் கழுத்துக்குப்
பாயும்
கருத்துக்குரியவர்கள்
சிறை செல்ல நேரும்
வாய்ச் சொல்
வீரர்களுக்குத்தான்
அரியணைகளும்
அந்தஸ்துகளும்
இங்குண்டு...
தேர்தல் காலத்து
சண்டியர்களெல்லாம்
முழுப் பூசணிக்காயையே
முட்டைத் தோலில்
மறைக்கின்றனர்
சொகுசு மீது கொண்ட

புரிந்து கொள்ளுங்கள்
நாங்கள் ஒன்றும்
முட்டாள்கள் இல்லை
ஒரு காலம் வரும் வரை
மறுதேர்தல் வரும் வரையும்
காத்திருக்கிறோம்...
காவல் காக்க
வேண்டிய நிலத்தில்
ஓநாய்களை எல்லாம்
மேயவிட்ட
இந்தக் கறுப்பு
ஆடுகளுக்கெல்லாம்
நல்ல பாடம்
கற்பிக்க
காத்திருக்கிறோம்

– அட்டாளை நிஸ்ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

QD/28/NEWS/2013


# Social Media Workshop

நான்கு தசாப்த ஊடக அனுபவத்தின் புதிய பரிமாணம்

Status | Photo | Ask Question | Milestone

Facebook, Twitter, Youtube, Linkedin, Flickr, Blogger, Livestream போன்ற நாம் அனைவரும் பயன்படுத்தும் சமூக வலைதளங்களே சமூக ஊடகங்கள் (Social Media) எனப்படுகிறது.

Post

சமூக ஊடகங்கள் மூலம் உங்கள் தொழிலை முன்னேற்றலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

E-Money, E-Marketing என்பன விஷேடமாக கற்றுத் தரப்படும்

பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்

JMF ஊடக நிறுவனம் Insight Institute உடன் இணைந்து நடத்தும்

4 வது ஒரு நாள் சமூக ஊடக செயலமர்வு

முதலீடு 2100/= மாத்திரமே (மதிய உணவு, சிற்றுண்டி உள்ளடங்கலாக)



கல்முனையில்...

23.06.2013 (ஞாயிற்றுக்கிழமை)

காலை 09.00- மாலை 05.00

(குறிப்பிட்டளவு தொகையினரே அனுமதிக்கப்படுவதால் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.)

தொடர்புகளுக்கு

0777 871758, 077 7866064

Just Media Foundation
77, Dematagoda Rd, Colombo-09
www.facebook.com/JMFSriLanka



## Certificate Course in JOURNALISM



Insight Institute of Management and Technology in collaboration with Muslim Media Forum and Knowledge Box has planned to conduct a Certificate Course in Journalism in English, Sinhalese and Tamil

FOLLOWING AREAS WILL BE COVERED

Introduction to

PRINT Media | ELECTRONIC Media | NEW Media

This is a one month full time course followed by another month of project work from home.

MINIMUM QUALIFICATIONS

Two Simple passes in any field at the GCE (A/L) Examination and a credit pass in the language of the medium of instruction at the GCE (O/L) examination.

Age Limit:

Applicants should be less than 25 years on the closing date of application.

Persons with proven interest in journalism are encouraged to apply even without the minimum qualifications required.



AT THE COMPLETION OF THE COURSE YOU WILL BE ABLE TO:

Prepare a news item / article for publication

Understand and use the social media as a business and a powerful communication tool

Produce a video documentary.

Understand the power and influence of the media industry and decide whether to choose journalism as a career.

Course fee: Rs. 17,500/-

Residential facilities available at extra cost.

Full / part scholarships available for deserving students.

TO REGISTER SEND SMS TO
077 293 0 618
With your name & address

## சான்றிதழ் பாட நெறி ஊடகவியல்

இன்சைட் நிறுவனம் (Insight Institute of Management and Technology), ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் (Sri Lanka Muslim Media Forum), நொலேஜ் பொக்ஸ் (Knowledge Box) ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து ஊடகவியல் சான்றிதழ் பாடநெறி யொன்றை நடாத்த திட்டமிட்டுள்ளது.



பின்வரும் பகுதிகள் உள்ளடக்கப்படும்

எழுத்தூடக அறிமுகம் | இலத்திரனியல் ஊடக அறிமுகம் | நவீன ஊடக அறிமுகம்

இது ஒரு மாத கால முழு நேர பாடநெறியாகும். தொடர்ந்துவரும் மாதத்தில் வீட்டில் இருந்தவாறு செயற்திட்டமொன்றில் ஈடுபடவேண்டும்.

குறைந்தபட்ச தகைமைகள்

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல், அத்துடன் பாடநெறியைப் பின்பற்றும் மொழியில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல்.

வயதெல்லை:

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியின் போது 25 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட ஆகக்குறைந்த தகைமையைப் பெறாதவர்களும் ஊடகத்துறையில் ஆர்வமும் ஈடுபாடும் இருந்தால் விண்ணப்பிக்கலாம்.

குறிக்கோள்கள்

ஒரு செய்தியை அல்லது ஒரு கட்டுரையைப் பிரசுரத்துக்காகத் தயார் செய்தல்.

சமூக ஊடகத்தை வர்த்தக நோக்கிலும் சக்தி வாய்ந்த தொடர்பாடலுக்காகவும் பயன்படுத்தல்.

ஒரு வீடியோ ஆவணத்தை தயார் செய்தல்.

ஊடகத்துறையின் பலத்தையும் செல்வாக்கையும் இனங்காணவும் அதனை ஒரு தொழிலாகத் தெரிவு செய்வது பற்றிச் சிந்திக்கவும் ஆற்றல் பெறுதல்.

கட்டணம் : Rs. 17,500/-

(விடுதி வசதி உண்டு, அதற்காக வேறு கட்டணம் அறவிடப்படும்)

வசதி குறைந்த மாணவர்களுக்கான முழு / பகுதி புலமைப் பரிசில் வசதிகள் உண்டு.

பாடநெறிக்கு பதிவு செய்ய பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு உங்கள் பெயரையும் விலாசத்தையும் SMS செய்யவும்.
0770886272




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at IPC PRINTING PRESS, 23, De Vaas Lane, Grandpass, Colombo 14.